பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 03 திங்கட்கிழமை (19.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 023



14 மக்கள் குடியிருப்புகளில் அனல் மின் நிலையம்



23 எகிப்தில் மீண்டும் கலவரம்



24 சென். ஜோன்ஸை வீழ்த்தியது சென். பீற்றர்ஸ்

# மனித உரிமை செயல் திட்டத்துக்கு ஐ.நாவின் நிதியுதவி வேண்டாம்

## அரசின் நிதியைக் கொண்டே நிறைவேற்றுமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ பணிப்புரை

கொழும்பு, டிசெம்பர் 19

தேசிய மனித உரிமைகள் தொடர்பான செயல் திட்டங்கள் அனைத்தும் இலங்கை அரசின் நிதியைக் கொண்டே செயற்படுத்தவேண்டும். இந்தத் திட்டப் பணிகளுக்காக ஐக்கிய நாடுகள் சபையிடம் இருந்து நிதி ஏதும் பெறப்படக் கூடாது. இவ்வாறு கண்டிப்பாக அறிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு இரு நாள்களுக்கு முன் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதேவேளை மனித உரிமைச் செயற்றிட்டத்தை அமுல்படுத்த கடந்த செப்ரெம்பர் மாதம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது எனவும் அமைச்சரவைப்

பக் 27

## முல்லைத்தீவு மீனவர்கள் 6 பேரைக் காணோம்

முல்லைத்தீவு, டிசெ.19

முல்லைத்தீவு பகுதியில் கடற்றொழிலுக்கு நேற்றுக் காலை சென்ற மீனவர்கள் இரவு வரை கரை சேரவில்லை. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு காணப்பட்டது.

முல்லைத்தீவு பகுதியில் நேற்று வானிலை அசாதாரணமாக காணப்பட்டது. கடும்காற்று, மழை என்பன காரணமாக வழக்கத்துக்கு மாறாக கடல் அதிக கொந்தளிப்புடன் இருந்தது. இந்த நிலையில் நேற்றுக் காலை தொழிலுக்குப் புறப்பட்டுச் சென்ற மீனவர்கள் திரும்பி வரவில்லை. அசாதாரண வானிலை காரணமாக மீனவர்களை தேடிக் கண்டறியும் முயற்சியும் கைகூடவில்லைஎனத் தெரிவிக்

பக் 27

## நல்லிணக்கத்துக்கான முக்கிய பரிந்துரையை தவறவிட்டு 'தலையைச் சொறிகிறது' ஆணைக்குழு

கொழும்பு, டிசெ.19

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் முக்கியமான ஒரு விடயத்தை குறிப்பிடத் தவறி விட்டோம். சகல ஆவணங்களிலும் கோரப்படும் " இனம்" என்ற பதத்தை நீக்குவதற்கான சிபார்சு தவறுதலாக இடம்பெறாமல் போய் விட்டது.

- இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார் படிப்பினைக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் சட்டமா அதிபருமான சி.ஆர்.டி. சில்வா.

இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கை அரசால் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற சகல ஆவணங்களிலும் விண்ணப்பதாரி எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்ற வினா இடம் பெறுகிறது. உண்மையில் இது இனரீதியான பாகுபாட்டை உறுதி செய்யும் ஒரு விடயமாகும்.

பக் 27

## தெரிவுக்குழுவின் மூலமே இறுதி முடிவு; மனம்போன போக்கில் அறிக்கை விடாதீர்!

### தமிழ்க் கூட்டமைப்புக்கு அரசு பதிலடி

கொழும்பு, டிசெ. 19

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவே இறுதி முடிவு எட்டப்படும். இந்த முன்னெடுப்புகளைத் தரக்குறைவாக மதிப்பீடு செய்யும் போக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்த்துக் கொள்ளவேண்டும். 'மனம் போனபோக்கிலும்', 'உணர்வு பூர்வமற்ற' வகையிலும் அறிக்கை விடுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொறுப்பற்றத் தன்மையையே காட்டுகின்றது - என்று சாடியுள்ளது அரச தரப்பு.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கொழும்பு ஊடகம்

பக் 27

## பொதுமக்களிடம் சகல கட்சிகளும் கூட்டாக மன்னிப்புக் கோரவேண்டும்

### அறிக்கை வெளியிட அரசு திட்டம்

கொழும்பு, டிசெ.19

போரில் பொது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்காக அரசு மன்னிப்புக் கோர வேண்டும் என நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பரிந்துரை செய்துள்ளது. இதன்படி அனைத்துக் கட்சிகளும் கூட்டாக இணைந்து அப்பாவி பொதுமக்களிடம் மன்னிப்பு கோரும் அறிக்கை ஒன்றை வெளியிட அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்தும் அரசு கவனம் செலுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

'சனல் - 4' ஊடகத்தின் காணொளி தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஆணைக்குழு கோரியுள்ளது. இது தொடர்பில் விரிவான விசாரணைகளை நடத்த அரசு திட்டமிட்டுள்ளதாக ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை பகிரங்கப்படுத்தும் வரையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கவுன்ஸில் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்வ

பக் 27

### தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டுக்குப் பொறுப்பான

## அமைச்சர் வாசுதேவவின் நிகழ்விலே சிங்களத்தில் ஒலித்தது தேசியகீதம்!

யாழ்ப்பாணம், டிசெ. 19

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்ற 'உறவுப் பாலம்' நிகழ்வில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தேசியக் கொடியை ஏற்றிய சமயமே இவ்வாறு தேசிய கீதம் ஒலித்தது. இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் முகமாக நேற்று மாலை இடம்பெற்ற இந்த நிகழ்

பக் 27



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வடக்கு தெற்கு 'உறவுப்பால' நிகழ்வில் அமைச்சர் வாசுதேவ தேசியக் கொடியையும் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மாவட்ட கொடியையும் ஏற்றுகின்றனர். (ஒ-14)

## ஒட்டுசுட்டான் ஆலயக் கேணியில் வீழ்ந்து தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணி சாவு



நெடுங்கேணி, டிசெ.19

தென்னிலங்கையில் இருந்து வடபகுதிக்கு சுற்றுலா வந்திருந்த சிங்களப் பயணி ஒருவர் ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலயக் கேணியில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொழும்பைச் சேர்ந்த சமரசிங்க சுமித் (வயது 50) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவரு

பக் 27

## ஐ.தே.க. தலைவர் யார்? ரணிலா, கருவா?



### இன்று இரகசிய வாக்கெடுப்பு



கொழும்பு, டிசெ. 19

கடந்த சில தினங்களாக கடும் பரபரப்பை ஏற்படுத்தி அனைவரின் எதிர்பார்ப்புகளையும் உள்ளீர்த்த சர்ச்சைக்குரிய ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவர் நியமன விவகாரம் இன்றோடு முடிவுக்கு வருகின்றது.

அக்கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தல் இன்று நண்பகல் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெறுகிறது. தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், பிரதித் தலைவர் கரு ஜயசூரியவும் தலைவர் பதவிக்கான தேர்தலில் களம் இறங்குகின்றனர்.

நேற்று கூடிய கட்சியின் செயற்குழு இத்தேர்தலை நடத்தும் தீர்மானத்தை மேற்கொண்டது. இணக்கப்பாட்டின் அடிப்படையில் தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்யமுடியாத நிலை ஏற்பட்ட

பக் 27

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# ஆசிரியர் இடமாற்றத்தில் வெவ்வேறான நடைமுறைகள் கண்டிக்கிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், டிசெ.19

வடமாகாணத்திலுள்ள கல்வி வலயங்கள் தோறும் ஆசிரியர் இடமாற்றத்தின் போது வெவ்வேறு நடைமுறைகள் அமுல்படுத்தப்படுவது தொடர்பாக சங்கம் சார்பாக எமது கண்டனத்தை வெளிப்படுத்துகிறோம்.பாரபட்சமான முறையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகக் கருதும் வடபகுதி ஆசிரியர்கள் அது குறித்து மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு மேன்முறையீட்டைச் செய்திருந்தால் அதன் பிரதியை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு அனுப்பி வைக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஆசிரியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றம் தவறு அல்லது பாரபட்சமானது எனக் கருதும் பட்சத்தில், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு மேன்முறையீடு செய்து கொள்ளலாம். அவ்வாறு முறையீடு செய்து கொண்டவர்கள் அதன் பிரதியை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு சமர்ப்பிக்குமாறு கேட்கிறோம்.

கல்வி வலயங்கள் தோறும் நியமிக்கப்பட்டுள்ள சங்கப் பிரதிநிதிகளிடம் மேன்முறையீட்டின் பிரதிகளை சமர்ப்பிக்க முடியும். அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு-

**யாழ். கல்வி வலயம்**

நாவாந்துறை றோ.க.வித்தியாலய பிரதி அதிபர் ந.நகுலநாதன், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் பி.என். சுதர்சன்

**வலிகாமம் கல்வி வலயம்**

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆசிரியர் சி.தேவகுமாரன் ,சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆசிரியர் செ.சிவபாலசுந்தர்.

**தென்மராட்சி கல்வி வலயம்**

மட்டுவில் கமலாசனி வித்தியாலய ஆசிரியர் க.தேவநேசன்

**வடமராட்சி கல்வி வலயம்**

குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை ஆசிரியர் கி.இந்திரன் தீவகக் கல்வி வலயம்

புங்குடுதீவு ஸ்ரீகணேசா வித்தியாலய அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கன் ஆகியோரிடம் தமது பிரதிகளை சமர்ப்பிக்கலாம். இதே போல வடபகுதியின் ஏனைய மாவட்டங்களிலுள்ள கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரனிடம் தமது மனுவின் பிரதியைக் கையளிக்கலாம்.

ஆசிரியர் இடமாற்றங்கள் வழங்கப்படும்போது அது மாணவர்களின் கல்வியைப் பாதிக்காத வகையிலும் ஆசிரியர்களின் வினைத்திறனை முழுமையாகப் பெறக் கூடியதாகவும் அமைய வேண்டும். அது வேறுபாடற்ற வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைதல் வேண்டும் என்றார். (ங-14)

## மேன்முறையீடு செய்தவர்கள் பிரதிகளைச் சமர்ப்பிக்கலாம்

## இன்றைய வானிலை

28°C

| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 28°c | 23°c | |
| மன் | | 27°c | 25°c | |
| வவு | | 25°c | 23°c | |
| முல் | | 27°c | 26°c | |
| கிளி | | 27°c | 26°c | |

வவுனியா மாவட்டத்தில் மழையும் பிற மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய மழை ஏற்படக் கூடிய சாத்தியமும் உள்ளது.

# ஒட்டுசுட்டானில் ஓயாத மழை

ஒட்டுசுட்டான், டிசெ.19

ஒட்டுசுட்டான் பகுதியில் தொடர்ச்சியாகப்பெய்து வரும் கடும் மழை காரணமாக அங்குள்ள சில வீடுகளில் வெள்ளம் உட்புகுந்துள்ளது. அத்துடன் மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கற்சிலைமடு, பண்டாரவன்னி, பேராறு, முத்தையன்கட்டு, கெருடமடு போன்ற பகுதிகளில் நேற்றுக்காலை முதல் இடைவிடாது மழை தொடர்ச்சியாகப் பெய்து வருகிறது. இதனால் ஏற்பட்ட பெருவெள்ளம் வீடுகளுக்குள் உட்புகுந்துள்ளது.

இந்தப் பகுதிகளில் தாழ்வான நிலங்களில் வெள்ளம் இரண்டு அடிக்கு மேல் உயர்ந்து காணப்படுகின்றது. வீதிகளை ஊடறுத்து வெள்ளம் பாய்வதால் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. (ஒ-323-)

# வடக்கில் சீரற்ற காலநிலை தொடரும் கடலில் மழையுடன் கடும் காற்று

### மீனவர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு

நாட்டில் சீரற்ற காலநிலை தொடரும் என்றும் வடக்கு, கிழக்கில் இடியுடன் கூடிய மழையும் கடும் காற்றும் வீசும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. வடமத்திய, ஊவா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடியுடன் கூடிய மின்னலும் மழையும் காணப்படும் என்றும் தீவு முழுவதும் கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்பிரதேசத்தில் மணித்தியாலத்துக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்துடன் காற்று வீசும். இந்த வேகம் 60 முதல் 70 கி.மீ வரையிலும் அதிகரிக்கக் கூடும் என்றும்-

மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதில் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஒ)



சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர்கள் சகிதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். (ங)

# கொக்காவில் பகுதியில் பயணிகள் பஸ் பாலத்துடன் மோதிக் குடைசாய்ந்தது

### காயமுற்ற 16 பேரில் ஐவர் யாழ்.ஆஸ்பத்திரியில்

கிளிநொச்சி, டிசெ.19

முல்லைத்தீவு - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் தனியார் பயணிகள் பஸ் கொக்காவில் பகுதியில் பாலம் ஒன்றில் மோதி குடைசாய்ந்ததில் 16 பேர் காயமடைந்தனர்.

நேற்றுப்பிற்பகல் 2.30 மணியளவில் நிகழ்ந்த இந்த விபத்தில் காயமுற்றவர்களில் 10 பேர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். படுகாயமடைந்த 5 பேர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

முல்லைத்தீவில் இருந்து மாங்குளம் வழியாக யாழ் நோக்கி வந்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாக யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறும் ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்களும் அடங்கியுள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விவரம் வருமாறு:

முல்லைத்தீவைச் சேர்ந்த எஸ்.லோறன்சியா (வயது-60), நல்லூரைச் சேர்ந்த என்.கமலாதேவி (வயது-52), கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ்.சங்கர் (வயது-30), உடையார்கட்டு, மூங்கிலாறுப் பகுதியைச் சேர்ந்த எஸ்.சாந்தினி (வயது-24), கிளிநொச்சியைச் சேர்ந்த கிட்டினன் தீபன் (வயது-15) ஆகியோரே இந்த ஐவரும் ஆவார். (ஒ-6-319)

# வன்னேரிக்குளம் எந்த நேரத்திலும் உடைப்பெடுக்கும் அபாய நிலையில்

கிளிநொச்சி, டிசெ.19

வன்னேரிக்குளம் துரிசுப் பகுதியில் உடைப்பெடுக்கும் அபாய நிலை தோன்றி உள்ளதால் அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

குளத்தின் துரிசில் நீர் வெளியேறும் துவாரத்தில் ஏற்பட்ட கசிவு காரணமாக குளக்கட்டு மூன்றடி ஆழத்துக்கு குழியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட இந்த கசிவு நேற்றுப் பகல் இன்னும் அதிகரித்தது. எனினும் இது குறித்து உடனடியாக கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து அங்கிருந்து வந்த அதிகாரிகள் நிலைமையைப் பார்வையிட்டனர். கசிவைத் தடுப்பதற்கான தற்காலிக நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.தற்போது குழி ஏற்பட்ட இடத்தின் மண் அகற்றப்பட்டு புதிதாக மண் போட்டு நிரவப்பட்டுள்ளது. இதனால் ஆபத்து இல்லை என்று நீர்பாசன திணைக்கள அதிகாரிகள் தெரிவித்திருந்தாலும் மக்கள் மத்தியில் அச்சநிலை தொடர்ந்து நிலவுவதாகக் கூறப்படுகிறது.

நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத இந்த குளம் 2001 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின் கீழ் மக்களுக்கான இலகு வேலைத்திட்டத்தின் மூலம் புனரமைக்கப்பட்டது. எனினும் அதன்போது துரிசு திருத்தப்படவில்லை.

நீர்பாசன திணைக்களத்தின் பிரமாணப்படி 9அடி நீரைத் தேக்கக்கூடிய இந்த குளத்தில் கடந்த வருடம் 9அடி8 அங்குல நீர் சேமிக்கப்பட்டிருந்தது. இதனாலேயே இத்தகைய பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. (ங-10)

# இன தனித்துவத்தைப் பேணி ஐக்கியமாக அனைவரும் இலங்கையை அழகுபடுத்துவோம்

### யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் வாசுதேவ

யாழ்ப்பாணம், டிசெ.19

வானத்தில் அழகான காட்சி தரும் வானவில்லைப்போல இன தனித்துவத்தைப் பேணிக் கொண்டு ஐக்கியமாக வாழ்ந்து இலங்கையை அனைவரும் அழகுபடுத்துவோம் என்றார் அமைச்சர் வாசுததேவ நாணயக்கார.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவநாணயக்கார தலைமையில் அவரது அமைச்சிடன் ஏற்பாட்டில் நேற்றுமாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரை நிகழ்த்தும் போது அமைச்சர் வாசுதேவ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு-

எமது அமைச்சு உருவாக்கப்பட்டு ஒரு வருடகாலமே ஆகிறது. தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த எமது அமைச்சு பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இரு மொழிகளில் செயலாற்றும் திறனுடைய சமூகத்தை வளர்த்தெடுத்து இன ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும்- என்றார். (14-311)

# கேரளத்தவருக்கு பதிலடி கொடுக்க உலகத் தமிழினம் பொங்கியெழும்!

## கனடா வாழ் தமிழர்கள் தமிழகத்துக்கு ஆதரவாக குரல்

றொரண்டோ, டிசெ.19

தமிழர்களுக்கு யார் இன்னல் விளைத்தாலும் உலகத் தமிழினம் பொங்கி எழும் - என்று முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழகத்திற்கு ஆதரவாக கனடா வாழ் 3 லட்சம் தமிழர்கள் குரல் கொடுத்துள்ளனர்.

இந்தியத் திருநாட்டில் தமிழன் கன்னடம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் இருந்து அடித்து உதைத்து விரட்டப்படுகிறான். இப்போது தமிழர்களை உதைத்து வெளியேற்றுவதில் பக்கத்தில் உள்ள கேரளாவும் சேர்ந்துவிட்டது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கனடா வாழ் தமிழர்கள் சார்பாக கனடாவின் தமிழ்ப் படைப்பாளிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது குறித்து தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழர்களுக்கு யார் இன்னல் விளைத்தாலும் உலகத் தமிழினம் பொங்கி எழும்!

ஏழு கோடி தமிழர்கள் தமிழ்நாட்டில் வாழ்கிறார்கள். அண்டை மாநிலங்களில் வாழும் தமிழர்களையும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களையும் கூட்டிப் பார்த்தால் உலகில் 8 கோடி தமிழர்கள் வாழ்கிறார்கள்.

தமிழனுக்கு ஒரு இறைமையுள்ள நாடு இல்லாத காரணத்தால்தான் தமிழன் உதைபடுகிறான், வதைபடுகிறான். தமிழன் என்றால் ஏதிலி என்று உலகம் நினைக்கிறது.

முல்லைப்பெரியாறு அணை பலமாக இல்லை என்றும் அது எந்த நேரத்திலும் உடையலாம் என்றும் அதனால், அதனை இடித்துவிட்டு வேறு அணை கட்டப்போவதாக கேரளாக்காரர் சொல்கின்றனர்.

முல்லைப்பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாகவும் எஞ்சிய பலப்படுத்தும் பணிகளை முடித்த பின் 152 அடியாகவும் உயர்த்திக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளது.

அந்த ஆணையை இந்திய நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை முற்றிலும் அவமதிக்கும் வகையில் கேரள அரசு பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து அந்தத் தீர்ப்பை செல்லாக்காசு ஆக்கிவிட்டது!

இன்றைய கேரளா பழைய சேர நாடாகும். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோ அடிகள் சேரநாட்டவர். எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப் பத்து சேர மன்னர்களின் வீரம், படைத்திறன், ஆட்சி முறை, கொடை, சமுதாயம், பண்பாடு, மன்னர்களின் பண்பு நலன்கள் என்பன. அந்தக் கால மக்களின் வாழ்க்கை முறையை எடுத்துரைக்கின்றன.

இடைக்காலத்தில் வடநாட்டு நம்பூதிரிப் பார்ப்பனர்களின் குடியேற்றத்தால் மொழிக்கலப்பு ஏற்பட்டு சேரநாட்டுத் தமிழ் - மலையாளம் எனத் திரிந்து புது மொழியாயிற்று. அந்த மொழிக்கு வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றி இலக்கணம் எழுதப்பட்டது.

முல்லைப்பெரியாறு அணை உடைக்கப்பட்டால் தமிழகத்தின் தென்மாவட்டங்கள் மக்கள் வாழ முடியாத பாலைவனமாக மாறிவிடும். இதில் தலையிட்டு நீதி செய்ய வேண்டிய மத்திய அரசு பாராமுகமாக இருக்கிறது. இதனை நாம் பலமாகக் கண்டிக்கிறோம்.

கேரளாவுக்கு வேண்டிய உணவு தமிழ்நாட்டில் இருந்து தான் போகிறது. மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது முற்றிலும் தமிழர்கள் வாழும் பீர்மேடு, தேவிகுளம், இடுக்கி மாவட்டங்கள் கேரளாவோடு இணைக்கப்பட்டன.

இந்திய தேசிய மாயையில் இருந்த காமராஜர், மேடாவது குளமாவது எல்லாம் இந்தியாவில் இருக்கின்றன என்று வேதாந்தம் பேசியதால் தமிழர்கள் இந்த மாவட்டங்களை இழந்தார்கள்.

தமிழ்நாடு சட்டசபையில் முல்லைப்பெரியாறை இடிக்கக் கூடாது, புதிய அணையை கேரளா கட்டக் கூடாது உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் அணையின் உயரம் 136 இல் இருந்து 142 ஆக உயர்த்தப் பட வேண்டும் எனக் கேட்கும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியுள்ளது.

இப்போது முல்லைப்பெரியாறு அணையை அண்டியுள்ள மக்கள் அரசியல் கட்சிகளை முந்திக் கொண்டு போராட்டத்தில் குதித்துள்ளார்கள். ஆனால் கேரளாவைப் போலல்லாது தமிழக அரசின் பொலிஸார், போராட்டக்காரர்கள் மீது தடியடி நடத்தியுள்ளனர்.

மலையாளிகளுக்குச் சொந்தமான கடைகளைத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் நூற்றுக்கணக்கானவர்கள சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை தமிழக அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிக்கை படைப்பாளிகள் கழகத்தின் தலைவர் வேலுப்பிள்ளை தங்கவேலுவால் வெளியிடப்பட்டது.

இவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், தந்தை செல்வா ஆகியோருடன் அரசியல் வேலை திட்டத்தில் இணைந்திருந்தவர். இவர் 55 ஆண்டுகால பத்திரிகையாளரும் தமிழீழத்தின் புகழ்பூத்த பிரபல அரசியல் இலக்கிய விமர்சகருமாவார்.

## ஆஸி. நோக்கிச் சென்ற படகு 380 அகதிகளுடன் கடலில் மூழ்கியது!

கன்பரா, டிசெ.19

சுமார் 380 அகதிகளுடன் ஆஸ்திரேலியா நோக்கிச் சென்ற படகு ஒன்று இந்தோனேசியக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் கவிழ்ந்ததில் 300 இற்கும் அதிகமானோர் காணாமற்போயுள்ளனர்.

கிழக்கு ஜாவா கடற்பகுதியில் கவிழ்ந்த இந்தக் கப்பலில் பயணம் செய்த 76 அகதிகளை மீட்டுள்ளதாக ஜாவா அவசரகால மீட்பு பணியகத்தின் தலைமை அதிகாரி கூறியுள்ளார்.

கரையில் இருந்து 90 கி.மீ தொலைவில் மூழ்கிய இந்தப் படகில் 40 சிறுவர்கள் வரை பயணம் செய்ததாக, தப்பிப் பிழைத்த ஆப்கானிஸ்தான் அகதி ஒருவர் கூறியுள்ளார்.

அங்குமிங்குமாக சாய்ந்த கப்பல் உடைந்து நீரில் மூழ்கியதாகவும், அப்போது உடைந்து போன பாகங்களை பற்றிப் பிடித்தவாறு தத்தளித்துக் கொண்டிருந்த தம்மை உள்ளூர் மீனவர்கள் காப்பாற்றியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் படகில் பயணம் செய்த 200 இற்கும் அதிகமானோர் மரணமாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இலங்கையில் இருந்தும் அண்மையில் அகதிகள் ஆஸ்திரேலியா நோக்கி சென்றுள்ள நிலையில் இந்தப் படகில் இலங்கையைச் சேர்ந்தவர்களும் பயணம் மேற்கொண்டனரா என்பது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை. (ஓ-323)

## வாகன இலக்கத் தகடுகள் மீள் விநியோகம் இல்லை

### ஆணையாளர் லலித் தர்மப்பிரிய

கொழும்பு, டிசெ.19

வாகனங்களுக்காகப் பதிவு செய்யப்பட்ட இலக்கத் தகடுகளை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவற்றை மீள விநியோகம் செய்யாமல் இருப்பதற்கு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

2000 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தகடுகளும் மீள விநியோகிக்கப்படமாட்டா என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் லலித் தர்மப்பிரிய தெரிவித்தார்.

கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்பட்ட பெரும்பாலான இலக்கத் தகடுகள் பிரதேச செயலகங்களிலும் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்திலும் தேங்கிக் கிடக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இத்தகைய இலக்கத் தகடுகளுக்குப் பதிலாக அடுத்த வருடம் முதல் கட்டணம் செலுத்தி புதிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## புலிகளைப் போல் அடம்பிடிக்க வேண்டாம் என தமிழ்க் கூட்டமைப்பிடம் எடுத்துக் கூறுங்கள்

### மனோவிடம் தெரிவித்தார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 19

தீர்வுப் பேச்சுகளின்போது புலிகள் இயக்கத்தினர்போன்று அடம்பிடிக்காமல் விட்டுக்கொடுப்புடன் செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வரவேண்டும். இதுதான் எனது விருப்பம். கூட்டமைப்பு நண்பர்களிடம் இதனை எடுத்துச் சொல்லுங்கள்.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனிடம் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

மனோ கணேசனின் பிறந்த தினமான நேற்றுமுன்தினம் அவருக்கு தொலைபேசியூடாக வாழ்த்துத் தெரிவித்துவிட்டு அரசியல் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

தனது பிறந்த தினத்தன்று ஒட்டுமொத்த தமிழர்கள் சார்பில் கோரிக்கையொன்றை முன்வைக்க விரும்புவதாக ஜனாதிபதியிடம் தெரிவித்த மனோ கணேசன், பிறக்கும் புதுவருடத்திலாவது தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

''நாட்டில் எத்தனையோ சிங்கள அரசியல் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களிடையே சிங்கள சமூகத்தினர் மத்தியில் செல்வாக்குப் பெற்றவராக நீங்கள் கருதப்படுகிறீர்கள். அப்படியான சூழ்நிலையில் சிங்கள மக்களை ஒருமுகப்படுத்தி ஒரு தீர்வொன்றை முன்வைத்து தமிழர் பிரச்சினையை நீங்கள் தீர்க்கலாம். சிங்களவருக்கு மட்டுமல்ல, தமிழ்பேசும் மக்களுக்கும் நீங்கள் ஜனாதிபதியாக இருக்கின்றீர்கள். எனவே, தமிழர்களுக்கான தீர்வை முன்வைக்கக்கூடிய வலுவான அதிகாரம் உங்கள் கைகளில் உள்ளது. அதனை விரைவாகச் செய்யுங்கள். இதுதான் எனது பிறந்தநாள் வேண்டுகோள்.''

- இவ்வாறு ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருக்கிறார் மனோ கணேசன்.

இதன்போது கருத்து வெளியிட்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ''விடுதலைப்புலிகள்போல் அடம்பிடிக்காமல் விட்டுக்கொடுப்புகளுடன் பேச்சு நடத்த முன்வருமாறு உங்கள் நண்பர்களுக்கு (கூட்டமைப்பினருக்கு) கூறுங்கள். அடம்பிடிக்கும் முறைமையை மாற்றச்சொல்லுங்கள்'' எனத் தெரிவித்திருக்கிறார்.

இதற்குப் பதிலளித்துள்ள மனோ கணேசன், ''நீங்கள் இரு தரப்புமே இதனைப் பேசவேண்டும். நட்பு ரீதியாக நாம் சில விடயங்களைச் சொல்லலாம். என்றாலும், தீர்வு விடயத்தில் அரசுக்கே முக்கிய பொறுப்பு உள்ளது'' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## பாணில் பத்து வீதம் அரிசி மா கட்டாயம் என்கிறது அமைச்சு

கொழும்பு, டிசெ.19

பாண் தயாரிப்பதற்காக பத்து வீதம் அரிசி மாவைச் சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அரிசி மாவில் தவிடு நீக்கப்பட்டுள்ளதன் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

கோதுமை மாவை உணவாக உட்கொள்ளும் பெரும்பாலானவர்கள் நீரிழிவு உள்ளிட்ட தொற்றுநோய் அல்லாத ஏனைய நோய்களால் பீடிக்கப்படும் நிலை நிலவுகிறது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அரிசி மாவை கோதுமை மாவுடன் சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்ட சுற்றறிக்கையை விநியோகித்துள்ளது எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாண் உற்பத்திக்கான மாற்று மூலப் பொருள்களில் ஒன்றாக அரிசி மாவுக்கு வர்த்தமானியில் அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சீனி, பால் உற்பத்தி, சோள மா, அரிசி மா, குரக்கன் மற்றும் சோயா மா வகைகளை தானிய வகைகள் என்பன மாற்று மூலப்பொருள்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஒ-சி)

## சிலாபத்தில் விபத்து மூவர் உயிரிழப்பு

[illegible]

## முப்பது ஆயிரம் சிறுவர்கள் நரம்பு பிரச்சினையால் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 19

நாட்டிலுள்ள சுமார் 30 ஆயிரம் சிறுவர்கள் நரம்பு சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு புதிய முறைமையொன்றை நாட்டில் முதல் தடவையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கொழும்பு சீமாட்டி ரிச்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ரத்னசிறி ஹேவகே தெரிவித்தார்.

இதற்கமைய நரம்புசார் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக விசேடமாக நிர்மாணிக்கப்பட்ட வெளியக மைதானமொன்று திறந்துவைக்கப்படவுள்ளது. வெளிநாட்டு அமைப்பு ஒன்றின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் இந்த விசேட விளையாட்டு மைதானத்திற்காக 20 இலட்சம் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது என்றார் அவர். (ஒ-சி)

# புதுக்குடியிருப்பில் அடைமழை; 1,200 குடும்பங்கள் பெரும் பாதிப்பு

## ஆறுகள் பெருக்கெடுத்ததால் போக்குவரத்துத் தடை

புதுக்குடியிருப்பு,டிசெ.19

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இரு தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையினால் சுமார் 1200 குடும்பங்கள் வெள்ளத்தினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. தற்காலிக வீடுகளிலும், ஓலைக்குடிசையிலும் வாழ்ந்து வரும் இவர்கள் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததினால் இருக்க இடமின்றிப் படுத்துறங்கவோ, சமைத்துண்ணவோ முடியாமல் குழந்தை, குட்டிகளுடன் திண்டாடுகிறார்கள்.

இதே நேரம் இப்பிரதேசத்தில் உள்ள பல ஆறுகள் பெருக்கெடுத்து வீதிகளுக்கு குறுக்கே பாய்ந்து செல்வதால் வாகனப் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. இந்த நிலை குறித்து நேரில் சென்று பார்வையிட்டுள்ள புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் ஜெயகாந்த் தேவையான அவசர உதவிகளை மேற்கொண்டு வருகின்றார்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இரு தினங்களாகத் தொடர்ந்து பெய்யும் அடைமழையினால் உடையார்கட்டு வடக்குத் தெற்கு, விசுவமடு, மாணிக்கபுரம், வள்ளிபுரம், தேவிபுரம் உட்படப் பத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு அமைக்கப்பட்டிருந்த குடிசைகளுக்குள்ளும் தற்காலிக வீடுகளுக்குள்ளும் மழை வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் இருக்க இடமின்றித் திண்டாடுகின்றார்கள்.

சில கிராமங்களில் வசிக்கும் மக்கள் பொது நோக்கு மண்டபத்திலும் ஒரு பாடசாலையிலும் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். தற்பொழுது ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சை இடம்பெறுவதால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பாடசாலைகளில் தங்கமுடியாமல் வீடுகளில் முடங்கிக் கிடக்கிறார்கள்.

இதேவேளை நாவலடியாறு, காளிகோயிலாறு, மூங்கிலாறு, நாயாறு, மாணிக்கப்பிள்ளையார் ஆறு, நெத்தலியாறு ஆகிய ஆறுகள் பெருக்கெடுத்து வீதிகளுக்குக் குறுக்கே மூன்றடி, நாலடி உயரந்து பாய்கின்றன. இதனால் போக்குவரத்துகள் தடை ஏற்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் மக்கள் பயணங்களை மேற்கொள்கிறார்கள். (ஓ-115)

## பௌர்ணமி கலைவிழா

ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பௌர்ணமி தினவிழா வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

அறநெறிப் பாடசாலைகளின் இணைப்பாளர் திருமதி கந்தையா- யோகேஸ்வரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கரடிப்புலவு, ஒட்டுசுட்டான், முத்துவிநாயகர்புரம், சின்னச்சாளம்பன், மாங்குளம், புலுமச்சினாநிகுளம், கற்சிலைமடு, ஒலுமடு ஆகிய அற நெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து நடத்திய கலை நிகழ்வுகளுடன் 'பௌர்ணமி விழா' சிறப்பாக நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை முதல்வர் திருமதி வேகாவனம் நித்திய கலா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். (க-500)

# கருணா தளபதியாக இருந்தபோது 600 பொலிஸார் கொலை; ஆணைக்குழுவின் பரிந்துரைக்கேற்ப விசாரணை அவசியம்

## உறவினர்கள் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.19

1990 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சுமார் 600 பொலிஸார் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடைபெற வேண்டும் என படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பாக குறித்த பொலிஸாரின் உறவினர்கள் சிலர் தமது கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

அக்காலத்தில் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர் நிறுத்தம் முடிவடைந்த போது கல்முனை பொலிஸ் நிலையம் உட்பட சில பொலிஸ் நிலையங்கள் விடுதலைப் புலிகளினால் முற்றுகையிடப்பட்டன.

இந்த முற்றுகையின் பின்னர் 500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பற்றி அதற்குப் பின்னர் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை. அவர்களில் பலர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், அவ்வேளையில் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண பொறுப்பாளராக இருந்த கருணா என்றழைக்கப்படும் தற்போதைய பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதிராக சாட்சியமளித்தவர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதாக நல்லிணக்க ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசு தொடர்பாக மருதமுனையைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் பலரும் தமிழோசையிடம் கருத்து தெரிவித்தனர்.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்திருந்த துணை அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், இந்த கொலைகளுடன் தமக்குத் தொடர்பு எதுவுமில்லையென்று குற்றச்சாட்டுக்களை நிராகரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## நல்ல ஆரம்பம்...



ஆர்வத்துடன் நிற்கும் சிறார்கள்: வள்ளிபுனம் கனிஷ்ட வித்தி யாலயத்தின் ஆரம்பப் பிரிவுக்கான கட்டடத்தை பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ராஜ்குமார் திறந்து வைக்க அருகில் நிற்கின்றார் பாடசாலை அதிபர் செல்வி ஆர். பேரின்பராணி. (555)

# கெமுனு விஜேரத்னவின் வீட்டு வாசலில் மலர்வளையம்

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்னவின் நுகேகொடையிலுள்ள வீட்டிற்கு முன்பாக நேற்றுமுன்தினம் இரவு மலர் வளையமொன்று வைக்கப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து அவர் மீரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது வீட்டிற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு வாகனத்தில் வந்த சிலர் மலர்வளையத்தை வைத்துவிட்டுச்சென்றதனை அயலிலுள்ள தனது உறவினர்கள் அவதானித்துள்ளனர் எனவும் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனது முறைப்பாட்டிற்கு அமைய பொலிஸார் தன்னிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர் எனவும் விஜேரத்ன தெரிவித்தார். இந்த நிலையில் முன்வைத்த காலை பின்வைக்கப்போவதில்லை என்றும் திட்டமிட்டவாறு அடுத்த வாரத்தில் நாடு முழுவதும் பாரிய பஸ் பகிஷ்கரிப்பை முன்னெடுக்கவுள்ளதாக எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிறந்த நாளில் கைக்கு எட்டிய கேக்கை ருசிக்க முடியாத நிலையில் பொன்சேகா

கொழும்பு, டிசெ.19

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் 61 வது பிறந்த தினமான நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின், ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் முக்கிய உறுப்பினர்கள் அவரை சிறைச்சாலையில் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச, நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, பாலித ரங்கே பண்டார மற்றும் பாலித தெவரப்பெரும ஆகியோரும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுன ரணதுங்க, டிரான் அலஸ் மற்றும் கெட்டகொட ஆகியோரும் சிறைச்சாலைக்கு சென்று சரத் பொன்சேகாவை வாழ்த்தியுள்ளனர்.

இதேவேளை, சரத் பொன்சேகாவை நேற்று சிறைக்கு பார்வையிடச்சென்ற ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார மற்றும் பாலித தெவரப்பெரும ஆகியோர் சரத் பொன்சேகாவிற்கு வழங்க கேக் ஒன்றை எடுத்துச் சென்றபோதும் அதனை சரத் பொன்சேகாவிற்கு வழங்க சிறை அதிகாரிகள் அனுமதி அளிக்கவில்லை.

இதனால் அவர்கள் சிறைச்சாலை வளாகத்தில் கேக்கை வெட்டி உண்டு மகிழ்ந்தனர். (ஓ-323)

# நெடுங்கேணி பண்பாட்டு மண்டபத்தில் முக்கியமான கலந்துரையாடல்

நெடுங்கேணி,டிசெ.19

வட பகுதியில் பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நெடுங்கேணி செயலகப் பிரிவின் பண்பாட்டு மண்டபத்தில் கடந்த 13 ஆம் திகதி 12 மணியளவில் நெடுங்கேணி பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றுள்ளது. இதில் சேவாலங்கா திட்ட முகாமையாளர் ஜெயதீபன், திட்டக் கண்காணிப்பு உத்தியோகத்தர் கே.குகதாசன், விவசாய உத்தியோகஸ்தர் உஷாநந்தினி, வாழ்வாதார மேம்பாட்டு உத்தியோகஸ்தர் அருள்குகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இங்கு வவுனியா வடக்கு பிரதேசத்துக்குட்பட்ட விவசாய அமைப்புக்களையும், கிராம அபிவிருத்திச் சங்கங்களையும், மாதர் அபிவிருத்திச் சங்கங்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும், அரச திணைக்களங்களையும் ஒருங்கிணைத்து அடுத்த ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் அரிசி ஆலை மற்றும் அரிசி ஆலைக் களஞ்சியங்களையும் கிராமங்கள் தோறும் அமைப்பது தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் நெடுங்கேணி ஒரு விவசாயக் கிராமமாக இருப்பதால் கிராம மக்களின் நன்மை கருதி 6 மில்லியன் ரூபா செலவில் பொதுச்சந்தை ஒன்றை நெடுங்கேணி பிரதான மையத்தில் அமைப்பது தொடர்பிலும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்தப் பகுதி விவசாயிகளால் அன்றாடம் செய்கை பண்ணப்படும் மரக்கறிகளை அமையவிருக்கும் சந்தையில் நியாயமான விலையில் சந்தைப் படுத்தும் வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென அந்தப் பகுதி விவசாயிகள் கருத்துத் தெரிவித்தனர். சேவாலங்கா நிறுவனம் வவுனியா வடக்கில் எட்டு கிராம சேவையாளர் பிரிவில் தனது வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. 30 வருடகாலமாக வன்னி வாழ் மக்களுக்கு இந்த நிறுவனத்தால் அதிக உதவிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் தமிழ் மக்களின் பாரம்பரியமான கலாசார நிகழ்வுகளைப் பேணி நடைமுறைப்படுத்த வேண்டும் என பிரதேச செயலாளர் க.பரந்தாமன் கேட்டதற்கிணங்க அதை நடைமுறைப்படுத்துவதாக சேவாலங்காவால் உறுதி மொழி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-435)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சீன - இந்திய ஆதிக்கப் போட்டியில் சிக்கும் சின்னஞ் சிறிய நாடுகள்

தெற்கு ஆசியாவின் இரு பெரும் நாடுகளான இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான ஆதிக்கப்போட்டி காரணமாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஓர் அமைதியற்ற சூழ்நிலை நிலவுகிறது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் ஆகப் பிந்திய தந்திரோபாய நடவடிக்கை சீசெல்ஸ் தீவில் இராணுவ தளம் அமைப்பதுதான். இது தொடர்பான ஒப்பந்தம் சீசெல்ஸ் அரசுடன் செய்துகொள்ளப்பட்டுவிட்டது.

தென் சீனக் கடலில் உள்ள ஹைனான் தீவில் சீனாவுக்கு ஏற்கனவே பலம் வாய்ந்த நீர்மூழ்கிக் கப்பல் தளம் ஒன்று இருக்கிறது. இந்தத் தளத்தில் இருந்து சீனாவின் பிரதான எண்ணெய் மற்றும் வர்த்தக விநியோகப் பாதையான மலாக்கா நீரிணை வரை கண்காணிக்க முடியும். இந்தியாவுக்கும் இது அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. ஆபிரிக்காவுக்கு கிழக்கே உள்ள சீசெல்ஸ் தீவில் இராணுவத் தளத்தை அமைப்பது மூலம் இந்தியாவை மூன்று பக்கங்களினாலும் சீனாவினால் கண்காணிக்க இயலும். சீனாவின் இந்த தந்திரோபாய நடவ டிக்கை இந்தியாவை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

கடந்த காலங்களிலும் சீனாவின் ஆதிக்கம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இருந்ததுதான். இந்தியா அதனை உன்னிப்பாக அவதானித்து வந்த போதிலும் பாரதூரமாகக் கருதவில்லை. சீனாவுடன் எல்லைப் பிரச்சினை உள்ளபோதிலும் 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்திய - சீன வர்த்தக உறவுகளில் அபிவிருத்தி காணப்பட்டது. ஆனால், தற்பொழுது நிலைமை எல்லை மீறுவதாக இந்தியா கருதுகிறது.

அம்பாந்தோட்டைத்துறைமுகம், மன்னார் எண்ணெய் அகழ்வு, 'காப்பெற்' பாதைகள் அமைப்பு என்று இலங்கையிலும் சீனாவின் முதலீடுகள் அதிகம். இலங்கையில் சீன நிறுவனங்கள் முதலீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்படும் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

சீனாவைப் பொறுத்தவரை தெற்கு ஆசியாவில் அதன் முதல் எதிரி இந்தியாதான். 1962ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் எல்லைப் பிரச்சினை தொடர்பாக யுத்தம் ஏற்பட்டது. இந்தியாவின் அருணாச்சல் பிரதேசத்துக்கு சீனா முழுமையாக உரிமை கோரி வருகிறது. இந்தப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கிறது. இந்தியாவின் பரம எதிரியான பாகிஸ்தானுடன் சீனா மிகவும் நெருக்கமான உறவை வைத்துள்ளது.

பாகிஸ்தானின் குவாடர் துறைமுகத்தில் சீனா முதலீடு செய்திருப்பதும் இந்தியாவுக்கும் அச்சுறுத்தலே. பாகிஸ்தான் கடற்படைப் பலத்தை இந்தியாவினால் சமாளிக்க முடியும். ஆனால், சீனாவுடனான கூட்டு கடற்படைப்பலம் இந்தியாவை தோற்கடித்துவிடும்.

பாகிஸ்தானின் தென்மேற்குக் கரையில் மிகவும் ஆழம்கூடிய துறைமுகமான குவாடர் கேந்திர முக்கியம் வாய்ந்தது. இத்துறைமுகம் ஈரானின் எல்லையில் இருந்து 70 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. ஹொர்மஸ் நீரிணையில் இருந்து 400 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. பாரசீகக் குடாவில் அமெரிக்க கடற்படையின் நடமாட்டத்தையும், அரபுக் கடலில் இந்தியாவின் நடவடிக்கைகளையும் கண்காணிக்க இந்தத் துறைமுகம் வசதிகளைக் கொண்டது.

சீனாவுக்குத் தேவையான 80 சதவீதமான எரிபொருள் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து மலாக்கா நீரிணை வழியாகவே சீனாவுக்கு வருகிறது. இந்த விநியோகப் பாதையின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்று சீனா கருதுகிறது.

ஷங்காயில் உள்ள புடான் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஷென் டிங்லி சமீபத்தில் கருத்துத் தெரிவிக்கையில்,

''வெளிநாடுகளில் தளம் அமைப்பதற்கு சீனாவுக்கு உரிமை இல்லை என்று கூறுவது தவறான வாதம். சீனாவின் வர்த்தகப் பாதையை ஏனைய நாடுகள் தடுப்பதை முறியடிக்க வேண்டிய அவசியம் சீனாவுக்கு இருக்கிறது'' என்று கூறி உள்ளார். சீனா தற்பொழுது செயற்படுத்தி வரும் திட்டம் முத்துச்சர தந்திரோபாயம் (String of Pearls Strategy) என்று கூறப்படுகிறது.

சீனாவின் முக்கிய நோக்கமே தெற்கு ஆசியாவில் இந்தியாவின் செல்வாக்கை முறியடிப்பதும் தனது வர்த்தக விநியோகப் பாதையைப் பாதுகாப்பதும்தான்.

பாகிஸ்தானில் மட்டும் அல்ல மியன்மாரிலும் சீனா கடற்படைத் தள வசதிகளைக் கொண்டுள்ளது. வங்காள குடாவில் உள்ள சிறுசிறு தீவுகளில் இலத்திரனியல் தகவல் சேகரிப்பு வசதிகள் சீனாவுக்கு உண்டு. கம்போடியாவுடனும் இராணுவ ஒப்பந்தம் செய்துள்ளது. மாலைதீவிலும் சீனா தனது செல்வாக்கை அதிகரித்து வருகிறது.

தற்பொழுது சீசெல்ஸ் தீவில் இராணுவத்தளம் அமைவது சீனாவின் தந்திரோபாய நடவடிக்கைகளில் ஒரு திருப்பம் என்று கருதப்படுகிறது. இந்தியா வெறும் கவலை தெரிப்பதுடன் நின்றுவிடுமா அல்லது தனது வல்லாதிக்க விஸ்தரிப்பை முடுக்கிவிடுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இந்தப்போட்டியில் இலங்கை போன்ற சிறிய நாடுகள் சிக்கிவிடும் ஆபத்து நிறைய உண்டு. சீனாவுடனும் இந்தியாவுடனும் சம உறவை வைத்துக்கொள்ளும் இலங்கையின் ராஜதந்திரம் எவ்வளவு காலத்துக்கு நிலைக்குமோ தெரியாது. சீன - இந்திய நெருக்கடி முழு தெற்கு ஆசியாவுக்கும் ஓர் அச்சுறுத்தல். இதனால் சின்னஞ்சிறிய நாடுகளுக்கே பாதிப்பு அதிகம்.

# தமிழரின் கவலைகளை பதவியிலிருந்த அரசுகள் கவனத்தில் கொள்ளவில்லை

நேற்று 18-12-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் அரசியல் விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டவைகளில் ஒரு பகுதி இது.

* சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை ராணுவம் மீறியுள்ளதான குற்றச்சாட்டு நிராகரிப்பு.
* சட்டவிரோத ஆயுதக்கும்பல்கள் தொடர்பாக புலனாய்வுகள் மேற்கொண்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.
* இடைக்கால அறிக்கை நிறைவேற்றப்படாமைக்கு ஆணைக்குழு கவலை.
* தமிழ் மக்கள் கவலைகள் பற்றி பதவிக்கு வந்த அரசுகள் கவனிக்காமல் விட்டமையே இன்றைய இனப்பிரச்சினைக்கு காரணம்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக ஆராய ஜனாதிபதியினால் நிறுவப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையின் மீதான விவாதங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தோனேஷியாவில் பாலிதீவில் இடம்பெற்ற ஆசிய பசிபிக் ஜனநாயக மகா நாட்டில் கலந்துகொண்டு திரும்பியதன் பின்னர் வெகுவாக சூடுபிடித்துள்ளது.

அறிக்கை மீது சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுள்ள அக்கறை காரணமாக வெளிநாட்டு அமைச்சராலேயே அது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது. பதிலாக சபை முதல்வரும் அமைச்சருமான சிறிபால டி சில்வா அறிக்கை மீது உரையொன்றை நிகழ்த்தி சபையில் தாக்கல் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

பீரிஸ் சபையில் அறிக்கையை சமர்ப்பித்து உரை நிகழத்து வாராயின் புலிகளுடனான நோர்வே போர் நிறுத்த உடன்பாடு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் தொடர்பாக எழக்கூடிய வாதப் பிரதி வாதங்களுக்கு அவர் பதிலளிக்க வேண்டியிருந் திருக்கும். அது அவரை சங்கட நிலைக்குள்ளாக்குவதாகவும் அகௌரவத்துக்குள்ளாக்குவதாகவும் இருந்திருக்கும் என்று கருதப்பட்டது. டி.சில்வாவின் 5 பக்கங்கள் கொண்ட ஆங்கில அறிக்கையுடன் 18 பக்கம் கொண்ட சிங்கள அறிக்கையையும் அவர் தாக்கல் செய்தார்.

ஆணைக்குழு தனக்கு வழங்கப்பட்ட ஆணைக்குட்பட்டு பல்வேறு விடயங்கள் தொடர்பான தனது கண்டுபிடிப்புகளையும் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளது. இவைகளில் முக்கியமானவை என்னவென்றால் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவடைந்த இறுதிப் போரின் கடைசிக் கட்டங்களில் இலங்கை ராணுவமும் விடுதலைப்புலிகளும் போர்க் குற்றங்களைப் புரிந்துள்ளார்கள் என்ற வகையில் ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக் கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்க முற்பட்டிருப்பதாகும். அநேக வெளி நாடுகளும் இது தொடர்பான தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு முன் இந்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பார்க்கக் காத்திருக்கின்றன.

### சர்வதேச மனித உரிமை சட்டத்தை படைகள் மீறவில்லை

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை இலங்கைப் பாதுகாப்புப் படைகள் மீறி செயல்பட்டுள்ளார்கள் என்ற கூற்றினை ஆணைக்குழு நிராகரித்துள்ளது. அது கூறுகிறது; புலிகள் வசமிருந்த பகுதிகளைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ராணுவ மூலோபாயமானது மிகவும் கவனமாக ஆராய்ந்து செய்யப்பட்ட ஒன்று, அதில் பொதுமக்களுக்கான பாதுகாப்பு மிக உயர்ந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. பாதுகாப்புப் படைகளின் செயற்பாடுகள் வேண்டுமென்றே மெதுவாக மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் பொதுமக்கள் தாக்குதலுக்குள்ளாகாமலிருக்க அல்லது அதனை குறைப்பதற்கு மிகக் கவனமாக மூலோபாயம் வகுக்கப்பட்டிருந்தமைக்கான சான்று கிடைத்துள்ளது.

## இனப்பிரச்சினையின் அடிப்படை இதுவென ஆணைக்குழு விளக்கம்

உயிர் இழப்புகள் தொடர்பான சில சம்பவங்களின் குறிப்பான சூழ்நிலைகள் தீர்மானிக்க முடியாமல் இருப்பதாகத் தெரிவித்துள்ள ஆணைக்குழு இருந்த போதிலும் பொதுமக்களின் மரணங்கள், காயமடைந்தவர்களுக்கும் பாதுகாப்புப்படைகள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற வகையில் குறித்துக் காட்டும் அம்சங்கள் காணப்பட்டாலும் இவை பாதிப்பு ஏற்படவேண்டும் என்று செய்யப்பட்டவையாக அவை இல்லாமலிருக்கலாம் என்று கூறுகின்றது.

அவ்வாறான சம்பவங்கள் எந்தச் சூழ்நிலைகளில் ஏற்பட்டிருக்கலாம் என்பதை முழுமையாக உறுதிப்படுத்தவேண்டியது அரசின் கடமை. அவ்வாறான புலனாய்வுகள் தவறான நடத்தைகளை வெளிப்படுத்தினால், தவறு இழைத்தவர்கள் மீது வழக்கு நடத்தி தண்டிக்க வேண்டும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### மனிதாபிமான சமிக்ஞை

மனிதாபிமான சமிக்ஞையாக இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் நெருங்கிய உறவினர்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்று ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

நேரில் பார்த்த மற்றும் பொருள்கள் மூலமான சாட்சியங்களின்படி, போரின் இறுதிக்கட்டத்தில் கணிசமான அளவு பொதுமக்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இவை இரு தரப்பு துப்பாக்கிச் சமரின் போது மற்றும் வேண்டுமென்றே சிவிலியன்களை குறிவைத்து புலிகள் சூடுகள் நடத்தியமை, மற்றும் சூழ்நிலையின் அவசரத் தன்மைகளால் ஏற்பட்டவை புலிகள் பொதுமக்களை மனித கேடயமாகப் பாவித்தமை, பாதிப்புக்களிலிருந்து பொதுமக்கள் தப்பிச் செல்வதற்கு அவர்கள் இடம் தராமையும் காரணம். இந்த நிலைமையில் ஆணைக்குழு தெரிவித்துள்ள பரிந்துரைகள் வருமாறு:

* குறிக்கப்பட்ட முக்கிய சம்பவங்கள் மற்றும் பொதுமக்கள் மீதான வேண்டுமென்ற தாக்குதல் புலனாய்வுசெய்யப்பட வேண்டும். இந்த ஆய்வுகள் மூலம் குற்றங்கள் ஏதும் வெளிப்படுத்தப்படுமானால் பொருத்தமானசட்ட நடவடிக்கை எடுத்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.
* முரண்பாடு காலத்தில் நாட்டில் எல்லாப்பாகங்களிலும் பாதிக்கப்பட்ட எல்லா குடும்பங்கள் தொடர்பாகவும் முறையான வீட்டுக்கு வீடு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு காயமடைந்த பொதுமக்கள் மற்றும் சொத்துகள் பற்றிய விவரம் சேகரிக்கப் படவேண்டும்.
* ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அவைகளின் செயற்பாடுகள் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதித்துள்ளன. ஆள் கடத்தல், சட்டவிரோதமாக சில பகுதிகளை ஆக்கிரமித்துக்கொண்டு கப்பம் பெறும் சம்பவங்கள் இவர் களால் இடம் பெற்றுள்ளன. கடத்தப்பட்ட அநேகர் எங்கிருக் கிறார்கள் என்று இன்னமும் தெரியாது. மற்றவர்கள் இறந்து கிடக்கக் காணப்பட்டுள்ளனர். இவை நிரூபிக்கப்பட்டால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளமையும் வெளிப்படும்.

சட்டவிரோத ஆயுதக்குழுக்கள் தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்படுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து தண்டிக்க வேண்டும் என்று குழு சிபாரிசு செய்துள்ளது.

தொகுப்பு: கோகுலன்

(26 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

மார்கழி 04, செவ்வாய்க்கிழமை 20.12.2011

திதி: தசமி மு.ப. 10.30 வரை

நட்சத்திரம் - சித்திரை பி.ப. 3.37 வரை

சுபநேரம்: 10.51 - 12.24 வரை, ராகு காலம்: 3.24 - 4.54 வரை

# வெள்ளத்தில் குளிக்கும் பள்ளிக்கூட மாணவர்கள்

## வீதிகளின் சீர்கேட்டால் அவலம்

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ். மாவட்டத்தின் பிரதான வீதிகள் பலவும் தொடர்ச்சியான மழை காரணமாக கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

இந்த நிலையில் தற்போது இடம்பெற்றுவரும் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் வீதிகளால் செல்லும் கனரக வாகனங்கள் சேறடிப்பதால் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் 4 பிரதான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான முக்கிய வீதிகள் என்பனவும் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

இந்த வீதிகளை அகலமாக்கி புனரமைக்கும் வேலைகள் தனியார் ஒப்பந்தகாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் மேற்குறித்த பிரதான வீதிகளையோ ஏனைய வீதிகளையோ புனரமைக்கும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையோ, வீதி அபிவிருத்தி திணைக்களமோ மேற்கொள்ளவில்லை

இருப்பினும் சில குறிப்பிட்ட வீதிகளில் கல்லைப் போட்டு நிரப்பியுள்ளனர். கல்லைப் போட்டுப் பின்னர் சீர்ப்படுத்தாமல் அப்படியே விட்டுள்ளமையால் சைக்கிள்கள் மற்றும் ஏனைய வாகனங்களின் 'ரயர்களை' கற்கள் பதம் பார்க்கின்றன.

குன்றும் குழியுமாக உள்ள சில வீதிகளில் கடுமையான மழை காரணமாக வெள்ளம் தேங்கி நிற்பதால் அந்த வீதிகளில் பயணம் செய்பவர்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வீதிகளை அகலமாக்கிப் புனரமைக்கும் பணிகளைப் பொறுப்பெடுத்த நிறுவனங்கள் குறித்த வீதிகளைப் பராமரிப்புச் செய்யத் தவறுவதாலேயே இவ்வாறான நிலைமைகள் ஏற்படுகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தக்காரர்கள் மீது வீதி அபிவிருத்தி அதிகார சபையோ, வீதி அபிவிருத்தித் திணைக்களமோ எந்த விதமான நடவடிக்கைககளையும் மேற்கொள்ளவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-15)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ். போதனா வைத்தியசாலையில் நீரிழிவு, இதய நோய்களுக்கான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வைத்திய பரிசோதனைக்காகச் செல்லும் நோயாளிகள் பெரிதும் ஏமாற்றமடைவதாகவும் கூறுகின்றனர்.

கூடுதலான நோயாளர்கள் இந்தக் கிளினிக்குக்குச் சென்று நீண்ட நேரம் காத்திருப்பதாகவும் மருந்து விநியோகிக்கும் பகுதியில் மருந்துகள் இல்லை வெளியில் வாங்கிக் கொள்ளுங்கள் என்ற பதிலால் மன உழைச்சலுக்கு ஆளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

# மண்டைதீவில் கடற்படை பயன்படுத்திய வீடுகள் உரியவர்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.19

மண்டைதீவுப் பகுதியில் உள்ள கடற்படையினர் இதுவரை தமது முகாம்களாக வைத் திருந்த வீடுகளை உரியவர்களிடம் கைளிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தற்போது கடற்படையினர் வசம் இருந்த சுமார் 58 வீடுகளில் 4 வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் 15 வீடுகள் அடுத்தவாரம் உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினர் மண்டைதீவின் தென்பகுதியில் தமக்கான புதிய முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

அடுத்த ஆண்டின் முற்பகுதியில் படையினர் வசம் உள்ள வீடுகள் அனைத்தும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும் எனவும் கூறப்பட்டது. (த-7)

# ஆதனவரி பதிவழிப்பு

தென்மராட்சி, டிசெ.19

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளர்களுக்கு கடந்த 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வு தொடங்கி 2002 ஆம் ஆண்டு மீள்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்ட காலம் வரையான பகுதிக்குரிய ஆதனவரியை பதிவழிக்க நகரசபையினால் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

மக்கள் மீளக்குடியமர்ந்த காலம் தொடக்கம் இந்த ஆதன வரியினை நீக்குமாறு பல்வேறு தரப்பினருக்கு அறிவித்தும் பயன் கிடைக்காததால் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நகரசபையினருக்கு பல முறைப்பாடுகளை மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகக் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை விலாவாரியாக ஆராயப்பட்டு அக்காலப் பகுதியில் மக்கள் குடியமர முடியாமல் எந்தவொரு வருமானமும் பெற முடியாமலும் இருந்த எட்டுக் கந்தாயங்களுக்குரிய ஆதன வரியை பதிவழிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக் காலப் பகுதிக்கு ஆதனவரி செலுத்தியோரின் கட்டணம் அடுத்து வரும் காலாண்டுக்குப் பதிவு செய்யப்படவுள்ளதாகவும் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (த-207)

# கற்கோவளத்தில் கைதான திருட்டு சந்தேக நபர் விளக்கமறியலில்

வடரமராட்சி,டிசெ.17

வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கற்கோவளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தாழையடி மற்றும் வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுக்கும் இவருக்கும் தொடர்பு இருப்பதாக குற்றஞ்சாட்டியே புனித நகர்ப்பகுதியைச்சேர்ந்த பிரஸ்தாப நபர் கைதாகியுள்ளார்.

குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸ் அதிகாரி எஸ்.ஐ.வீரவர்த்தன தலைமையிலான பொலிஸ் குழுவினரால் சந்தேக நபர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-319)

# வடமராட்சி கிழக்கு மீனவருக்கு வலைகள்

யாழ்ப்பாணம், டிசெ.19

வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

கடற் தொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் இந்த மீன்பிடி வலைகள் வழங்கப்படவுள்ளன. இந்தப் பகுதி மீனவர்களுக்கு ஏற்கனவே அறக்கொட்டியான் வலைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது சூடை வலைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாலயத்தின் கட்டடங்களைப் புனரமைத்தது கடற்படை



காரைநகர், டிசெ.19

காரைநகர் வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாலயக் கட்டடங்கள் கடற்படையினரால் புனரமைக்கப்பட்டு கடற் படையின் வடபிராந்தியக் கட்டளைத் தளபதி அட்மிரல் ஆர்.சி. விஜய குணவர்த்தனவால் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடம் கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.

வட பிராந்திய கட்டளைத் தளபதி ஆர்.சி.விஜய குணவர்த்தன, காரைநகர் கடற்படைத் தளபதி டி.எஸ். சில்வா மற்றும் கடற்படை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் 40 மாணவர்களுக்குப் புத்தகப்பைகள் மற்றும் பாடசாலை உபகரணங்களைக் கடற்படை அதிகாரிகள் மாணவர்களுக்கு வழங்கினார்.

பாடசாலை வகுப்பறைக் கட்டடங்கள், அதிபர், ஆசிரியர் அலுவலகங்கள் புனரமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டதுடன் பாடசாலைக்கான மின்னிணைப்பு, சிறுவர் பூங்கா, குடிதண்ணீர்த் தாங்கி, பாதுகாப்புவேலி, மலசலகூடம் என்பனவும் கடற்படையினரால் அமைக்கப்பட்டு வடபிராந்தியக் கட்டளைத் தளபதியால் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த 20 வருடங்களாக செயற்படாமல் இருந்த இந்தப் பாடசாலை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் அடிப்படை வசதிகளற்ற நிலையில் மீள ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

# சமூகப் பராமரிப்பு நிலையம் பளையில் புதனன்று திறப்பு

நாவற்குழி, டிசெ.19

பளை உதவி அரச அதிபர் வளாகத்தில் சமூகப் பராமரிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்றது.

உதவி அரச அதிபர் சி.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் மாகாண தொழிற்துறைத் திணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யுனிசெவ் நிறுவன நிதியின் மூலம் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் வழங்கிய சுயதொழில்கள் தொடர்பாக ஆய்வு நடத்த வந்த சமூக சேவைகள் அதிகாரிகள் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

மாகாண விசேட அபிவிருத்தி நிதியின் கீழ் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (த- 121)

# அரியாலை மக்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.19

அரியாலை கிழக்கு மற்றும் மணியம்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

பாசிக் நிறுவனத்தின் உதவியுடன் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணியம்தோட்டம், பூம்புகார், உதயபுரம், அரியாலை கிழக்கு போன்ற பகுதிகளை சேர்ந்த 48 மீனவர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் 12 பேர் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 48 பேருக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

சுமார் ஒரு லட்சத்தி 50 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த இந்த உபகரணங்களில் 50 ஆயிரம் ரூபா பணத்தை அந்தப் பகுதி மீனவ சங்கங்களுக்கு பயனாளிகள் திருப்பி செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (ம-26)

# யாழில் தொல்லியல் புனரமைப்பு எதிர்காலத்திலும் நிதி ஒதுக்கப்படும்

## தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர்

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் தொல்லியல் ஆய்வுகளுக்கும் தொல்லியல் சின்னங்களின் புனரமைப்புக்கும் எதிர் காலத்தில் அதிகளவு நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் திருமதி கே.எம்.டி.ஏச். விஜய துங்க யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவத்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் தொல்லியல் சின்னங்களின் புனரமைப்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள தொல்லியல் சின்னங்களை பார்வையிட தேசிய மரபுரிமைகள் அமைச்சின் உயர்மட்டக் குழு நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது.

அந்தக் குழு நல்லூருக்கு வருகை தந்து வழிபாடுகளிலும் ஈடுபட்டது.

அப்போது யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் தொல்லியல் சின்னங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் அதற்கு தேசிய மரபுரிமைகள் அமைச்சால் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும் அதனை தலைமை தாங்கி வந்த தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளரிடம் தகவல்கள் பெறப்பட்டன.

இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ். கோட்டையின் அபிவிருத்திக்கு 104 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. நெதர்லாந்து அரசு 63 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

எமது அமைச்சால் 41 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு வேலைகள் ஆரம்பிக் கப்பட்டன. 2012 ஆம் ஆண்டு கோட்டை புராதன இடமாக நிறுவப்படவுள்ளது. இதைச் சுற்றுலாத் தளமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ். அரும் பொருள் காட்சியகத்தைப் புனரமைப்படுவதற்கான நிதியை வழங்க எமது அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் தொல்லியல் ஆய்வுகளுக்கு பெருமளவு நிதி ஒதுக்கப்படவுள்ளது. வெளிநாடுகளும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-319)

# பொலிஸாரின் கண்முன் இடம்பெற்ற விபத்து

வலி. வடக்கு டிசெ 19

வீதி ஒழுங்குப் பொலிஸார் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இரு மோட்டார் சைக்கிள்கள் மோதுண்டதில் இருவர் காயங்களுக்கு ஆளாகினர். இதன்போது மோட்டார் சைக்கிளும் பெரும் சேதம் அடைந்தது.

இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றது.

சுன்னாகம் சந்தையில் போக்குவரத்துப் பொலிசார் காலை முதல் மாலைவரை போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். நான்கு சந்தியான இடத்தில் போக்கு வரத்து நெரிசல் மிகவும் அதிக மாகும்.

வீதியின் நடுவே நின்று போக்குவரத்துக்கான ஒழுங்கை மேற்கொள்ள வேண்டிய பொலிசார் வீதி ஓரத்தில் நின்றே போக்குவரத்துக்கான ஒழுங்கை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் வீதிகளில் நெருக்கடிகளைக் குறைக்க முடியாதுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் விபத்து இடம் பெற்றதைத் தொடர்ந்து இரு பகுதியினரையும் சமாதான மான முறையில் செல்வதற்கு பொலிசார் அனுமதித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கான 2012 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வது சம்பந்தமான விவரங்களை திரட்டும் பணியில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றது.

அடுத்த ஆண்டில் அரசால் ஒதுக்கப்படும் நிதியை கொண்டு கூட்டுறவு சங்கங்களில் அபி விருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே தற்போது திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் இந்த அபிவிருத்தித் தேவைக்கு விண்ணப்பித்துள்ளன.

சங்கங்கள் விண்ணப்பித்திருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தமான விண்ணப்பங்களை தற்போது திணைக்களம் விரிவாக ஆராய்ந்து வருகின்றன.

இதேவேளை, இந்த ஆண்டுக்கான அனேகமான சங்கங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் முற்றுப் பெறும் நிலையிலும் உள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-26)

# பன்றிகளின் தொல்லை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.19

நீர்வேலி, கோப்பாய் வயல் பகுதிகளில் காட்டுப் பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்த பன்றிகள் வயல்களில் நடமாடுவதால் நெற்பயிர்கள் அழிவடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

கூடுதலாக இரவு நேரங்களில் வயல் பகுதிக்கு வரும் இந்த பன்றிகள் பயிர்களை சேதப்படுத்துவதோடு இந்தப் பகுதி விவசாய நிலங்களில் பயிரிட்டிருக்கும் மரக்கறிப் பயிர்களையும் அழித்து விட்டுச் செல்கின்றன.

பெரும் செலவில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இதனால் கவலையடைந்துள்ளனர்.

இந்தப் பன்றிகள் தென்மராட்சிப் பகுதிகளில் இருந்தே கூடுதலாக இங்கு வந்து செல்வதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ம-26)

# முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு நிகழ்வுகள்



வலி வடக்கு டிசெ 19

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் எற்பாட்டில் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையான காலப் பகுதி முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு நிகழ்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்சித் திட்டத்தின் கீழ் உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களுக்கான பற். சுகாதாரம் சம்பந்தமாகப் பெற்றோர்களுக்கான கலந்துரையாடலும் பற்பரி சோதனையும் நிலைய மண்டபத் தில் பாடசாலைகள் பல் வைத்தியர் எஸ். எழிலரசியால் மேற்கொள்ளப்பட்டது.

உடுவில் பிரதேச செயலக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர் கே.ரவிபாலா தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. (ம-86)

# மாநகர சபையின் வரவு, செலவுத் திட்டத்தில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்.மாநகர சபையால் சமர்ப்பிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு-செலவுத் திட்டத்தில் முக்கிய தேவைகளுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உத்தேச வரவு- செலவுத் திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய சபையின் உறுப்பினர்கள் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

குறைபாடுகளைச் சுட்டிக் காட்டிய உறுப்பினர்கள் சுகாதார சேவைகள், ஆயுள்வேத வைத்தியப் பிரிவு, நீர் வேலைப் பகுதி, நூலகம் ஆகியவற்றுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.


இதேவேளை, இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையியற் கூட்டத்தில் இது தொடர்பாகப் ஆராயப்படும் எனவும் இந்தக் கூட்டத்தில் உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியும் என்றும் கூறப்பட்டது. (ம-7)

# தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள்

குருநகர், டிசெ.19

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்து வருவதன் காரணமாக இந்த நுளம்பைக் கட்டுப்படுத்தும் நோக்கில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையின் நடைக் குழுவால் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையமும் அதனைச் சுற்றிய பகுதிகளும் புகையூட்டல் செய்யப்பட்டது.



தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்துக்கு முன்பாக இயங்கிவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் உள்ள நுளம்புகளை அழிக்கும் நோக்குடன் இந்த நடைக் குழுவால் டெங்கு நுளம்பு அழிப்பு மருந்தும் தெளிக்கப்பட்டு வருகின்றது. (ம-51)

# அடிக்கடி தடைப்படும் மின்சாரத்தால் பழுதடைந்தன 'எக்ஸ்ரே' இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ். மாவட்ட ஆதார வைத்தியசாலைகளில் எக்ஸ்ரே இயந்திரங்கள் அனைத்தும் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளில் தமது தேவைகளுக்கு தமது செல வில் எக்ஸ்ரே எடுத்து வழங்க வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆதார வைத்தியசாலைகளிலும் எக்ஸ்ரே இயந்திரம் பொருத்தப்பட்டுவந்தன. குடாநாட்டில் அடிக்கடி இடம்பெறும் மின் வெட்டுகளால் இயந்திரங்கள் பழுதடைந்து போயின என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரேயொரு எக்ஸ்ரே இயந்திரம் இயங்குவதால் ஆதார வைத்தியசாலைகளின் அவசர நோயாளர்கள் மட்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

ஏனைய நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளில் தமது தேவைக்காகப் பணம் கொடுத்து எக்ஸ்ரே எடுத்து இந்த வைத்தியசாலைகளில் வழங்கி சிகிச்சை பெற்ற வரு கின்றனர்.

கடந்த மாதம் கொழும்பிலிருந்து வருகை தந்த 'எக்ஸ்ரே' இயந்திர திருத்துபவர்கள் இயந்திரத்தில் பழுதடைந்த உதிரிப் பாகங்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

சில வைத்தியசாலைகள் தமது அம்புலன்ஸில் வைத்தியசாலை விடுதியில் தங்கியுள்ள வேலையாளர் களை தனியார் வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று நோயாளர்களின் செலவில் எக்ஸ்ரே எடுத்து மீண்டும் அழைத்துவந்து வைத்திய சாலை விடுதியில் அனுமதிப்பதாக தெரியவருகின்றது. (ம-207)

## பணிநிலை வேண்டுகை

சூழல் பாதுகாக்கும் நோக்குடன் செயற்படும் நிறுவனமொன்றுக்கு கீழ்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

1. அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் (வயதெல்லை கிடையாது)
2. விற்பனை முகாமையாளர் (வயதெல்லை 18-45 வரை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை

தொடர்பு: 0771054210,0771054200

## வீட்டுப் பணிப்பெண் தேவை

சமையல், வீட்டுவேலைகள் செய்வதற்கு பணிப் பெண் உடன்தேவை சம்பளம் 9000/ இற்கு மேல் வழங்கப்படும். தங்கியிருந்து அல்லது காலை வந்து மாலை வீடு சென்று வேலை செய்யலாம்

தொடர்பு: ஏ.பூ பெல்லம் 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். 0779107153

## வான் விற்பனைக்கு உண்டு

54 - XXXX இலக்கமுடைய நல்ல நிலையில் கயஸ் (டொல்பின்) வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776913238

# கல்வியங்காட்டில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்ப்பாணம், கல்வியங்காடு அம்மன் கோயில் பகுதியில் நேற்றுப் பிற்பகல் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். அவரது வீட்டிலேயே இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த குகனேஸ்வரன் ஜெயராசன் (வயது-40) என்பவரே மரணமானவர் ஆவார். இவர் 3 பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இன்று அவரது மகளின் பூப்புனித நீராட்டு விழா நடைபெறவிருந்த நிலையில் இவர் வீட்டில் அலங்கரிப்பில் ஈடுபட்டிருந்த சமயம், மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தின் போது மரணமான ஜெயராசனைக் காப்பாற்ற முயன்ற அவரது மைத்துனரும் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான போதும் அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (ஒ-319-323)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
01.02.1985

மறைவு
19.11.2011

அமரர்
பாலேந்திரன் யசீதரன்

கடந்த 19.11.2011 அன்று இறைபதமடைந்த எமது அன்புச் செல்வத்தின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபே, தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (19.12.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

லிங்கன் வீதி,
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்.

(11832)(3,6,7)

## உளம் கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



*17.12.2011 சனிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விரு வழங்கும் விழாவில் " கலாபூசணம்" விருதை பெற்ற நாடகக் கலைஞர்*

**இராசையா பீதாம்பரம் (பற்குணம்)**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

இல.91, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
கண்ணன் குடும்பம்.

# மரண அறிவித்தல்கள்

## எஸ். மகாலிங்கம்

(ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர்- இலங்கை வங்கி)



கரணவாய் கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகாலிங்கம் நேற்று (17.12.2011) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (பிரதம லிகிதர்- பொலிஸ் திணைக்களம், கொழும்பு) -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கி யத்தின் (சரசு) பாசமிகு கணவரும் திருமதி ரஜனி ராசலிங்கம் (இந்தியா), திருமதி பவானி விமலேஸ்வரன் (கனடா), விமலேந்திரா மகாலிங்கம் (லண்டன்), நிர்மலேந்திரா மகாலிங்கம் (லண்டன்), திருமதி. மாலினி நித்தியானந்தன் (கனடா) ஆகியோரது பாசமிகு தந்தையும், திருமதி பத்மநிதி விமல்ராஜா (கொழும்பு) வின் அன்புச் சகோதரனும், வி.விமல்ராஜா (ஓய்வு பெற்ற தொழில் நீதிமன்ற நீதிபதி - கொழும்பு), வி.கணேசராஜா (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), வி. விஸ்வேஸ்வராஜா (நியூசிலாந்து), வி.நிமல்ராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 20.12.2011 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்..

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
ம.பாக்கியம் சரசு-(மனைவி)

## கதிரவேற்பிள்ளை குணபாக்கியம்



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேற்பிள்ளை குணபாக்கியம் (17.12.2011) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் கலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான கதிரவேற்பிள்ளையின் அன்பு மனைவியும், லோகேஸ்வரன், தில்லைவாசன் (UK), சத்தியபாமா (UK), திருத்தணிகாசலம் (UK), கிருபாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சகுந்தலாதேவி, வசந்தகுமாரி, ஸ்ரீதரன், கமலா, ஜனா ஆகியோரின் அன்பு மாமியும், ரோகினி (கனடா), சுகந்தன், சக்தி, குமரன், முரளி, ஐங்கரன், கௌசிகன், கார்த்திகன், சகிலா, வர்சா, லக்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சர்ச்சின், பற்றிக்ஸ், நிக்கலஸ், சறோமி, நிறோமி ஆகியோரின் அன்புப் பூட்டியும் விமலனின் அன்பு மாமியும், குமாரசாமி, குணஞானசுந்தரம், சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துக் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாரகை,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

மனைவி,
குடும்பத்தினர்.

(11838)(5,6)

# மரண அறிவித்தல்

## கதிரவேலு பூபதி (பூபதியம்மா)



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பூபதியம்மா (14.12.2011) புதன் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி- நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற செல்லப்பா கதிரவேலுவின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான கருணாமூர்த்தி குணறஞ்சன், ரஞ்சினிதேவி மற்றும் உஷாறஞ்சன் (இலங்கை), பாலறஞ்சன் (ஜேர்மனி), ஜெயறஞ்சன்(பிரான்ஸ்), ஞானறஞ்சன் (ஜேர்மனி), சறோஜினிதேவி (நெதர்லாந்து), விக்னேஸ்வரி (ஜேர்மனி), சகுந்தலா ( ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும். காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் சுப்பிரமணியம், நல்லையா ஆகி யோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கண்மணி, இராசம்மா, சிங்கராசா, சின்னத்துரை, கனகம்மா, பாக்கியம் மற்றும் பொன்மணி, தவமணி, சிவலிங்கம், சரஸ்வதி, நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும். கௌரி ( ஜேர்மனி), சறோசா (இலங்கை), ரதி (இலங்கை), வசந்தினி (பிரான்ஸ்), நித்தியவதி (ஜேர்மனி), காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் சிறிபரன் ( ஜேர்மனி), ரவிசங்கர் ( ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் கிருஸ்ணரூபன் - சுமித்திரா( ஜேர்மனி) ஆனந்தரூபன் - யசோக்குமாரி( நெதர்லாந்து), இராஜசுரேஷ்-கவிதா (லண்டன்), இராஜரமேஸ் -ஸ்ரீதாட்சாஜினி (ஜேர்மனி), அனுசாந்தன் ( ஜேர்மனி), பிரசாத் (ஜேர்மனி), பிரசாந்தி - சந்திரசேகரன் (ஜேர்மனி), தீபா - ஜீவன் (லண்டன்), உஷாநந்தினி குணம்( ஜேர்மனி), மதன் (இலங்கை), ஜீவிதா-சிவதீபன் (இலங்கை), திதிகரன் (பிரான்ஸ்), நிசாந்தி (இலங்கை), லதன்(இலங்கை), மயூரன்( ஜேர்மனி), கோபிநாத் (இலங்கை), பிரதீபன் (ஜேர்மனி), கோபிகா(இலங்கை), துஜிதன்(பிரான்ஸ்), இந்துஷான்(பிரான்ஸ்), புவிதரன்( ஜேர்மனி), இலக்கியா (ஜேர்மனி), பிரியங்கா ( ஜேர்மனி), லக்சன் (ஜேர்மனி) ஆகியேரின் பாசமிகு பேர்த்தியும். காய்சுமன், அஸ்வின், ஆஷா, அருண், அகிஷனா, அஸ்மிதா, அக்சனா, டெனிரா,டெனுயா,தஜித், ஜக்சன், அபிஷனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2011) திங்கட்கிழமை பி.ப. 5.30 மணியளவில் நெதர்லாந்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆனந்தருபன் (குட்டி)- நெதர்லாந்து*
*தொலைபேசி : + 31180325786,*
*செல்லிடப்பேசி : + 31616974784*

*ஏழாலை மத்தி, ஏழாலை.*

(11833)
(3.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# வியனம் கேட்டீர்களா?

## யாழ்ப்பாணத்திலை இப்ப படு சூடு காணி வியாபாரம் தான்..........!


யாழ்ப்பாணத்திலை இப்ப காணி விக்கிறதும் வேண்டிறதுந்தான் சூடான வியாபாரம் பாருங்கோ. ஒரு பக்கம் காணியை வித்துப்போட்டு ஓடுவம் எண்டு நிக்குது. மற்றப் பக்கம் வாங்கிச் சேர்ப்பம் எண்டு நிக்குது. ரண்டு பார்ட்டியும் வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டுதான் இதைச் செய்யினை. கனபேர் தங்கடை துறையளை மாத்தி காணிப் புறோக்கராயிட்டினை.

காணிநிலம் வேண்டும் எண்டு பாரதியார் பாடினாலும் பாடினார். யாழ்ப்பாணம் எப்பவும் காணியிலை வலுபிடிப்பான சனம் கண்டியளோ! இந்தப் பிடிப்புத்தான் கன பிறக்கிராசி, அப்புக்காத்துமாரை செல்வந்தராய் வாழ வைச்சது. கோவில் திருவிழாவிலையும்,காணிப் பிரச்சினையிலையுந்தான் கன குடும்பங்கள் கந்தறுந்து போனதெண்டது பலபேருக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம்.

திருவிழா எண்டால் அயலட்டை மாமன் மச்சான்தான் செய்யிறது வழக்கம். மச்சான் முதலாம் பூசைக்கு நாலு கூட்டம் மேளம் பிடிச்சுச் செய்தால் ரண்டாம் நாள் பூசைக்காரன் சகோதரியின்ரை புரியன் எட்டுக் கூட்டம் மேளம் பிடிப்பார். அடுத்தநாள் பூசைக்காரன் சிறிய தேப்பன்ரை மோன் எட்டுக் கூட்டத்தோடை சின்னமேளமும் சேர்த்துப் பிடிப்பார். இப்பிடியே எவ்வொரு பூசைக்காரனும் அன்னசப்பரம், சிகரம், வாணவேடிக்கை, பாட்டுக்கச்சேரி எண்டு அமர்க்களப்படுத்தி விலாசம் காட்டிப் போட்டு கடைசியிலை காசுக்கு வட்டிக்குக் குடுக்கிறவரிட்டையோ, அப்புக்காத்திட்டையோ போய் காணியை ஈடு வைக்கிறதுதான் நடக்கும். மீட்காட்டில் கொஞ்சக் காலத்திலை அப்புக்காத்து வட்டியோடை காசைக் குடுத்து வட்டிக்காரனிட்டை வாங்கி விடுவார். அவருக்கு அரை விலையிலை காணி போய்ச்சேரும்.

மற்றது காணிப்பிரச்சினை.பொதுவாயக் குடும்பங்களிலை காணியிலை அரைவாசியை மகளுக்குச் சீதனமாய் எழுதிக் குடுத்திடுவினை. குடுத்தவர் கண்ணை மூடினாப் பிறகு மற்றக் காணிக்குள்ளை அடுத்த மகனோ, மகளோ குடியிருப்பினை. வேலிக் கதியால் போடுறதிலை பிரச்சினை தொடங்கும். சிலவேளை வழி வாய்க்கால் பாவிப்புரித்திலை, கிணத்துப் பங்கிலை பிரச்சினை தொடங்கும். பொலிசுக்குப் போய் கிராமக் கோடேறி, மெல்லம் மெல்லமாய் மேல்நீதிமன்றம் வரைக்கும் வழக்கு நடக்கும். ரண்டு தரப்பும் பல ஆயிரங்களைச் செலவழிச்சு பிறக்கி ராசிக்குக் காசு கட்ட வழியில்லாமல் கலட்டுக் காணியளை எழுதிற நிலை ஏற்படும். ஒரு எல்லைக் கதியாலுக்காக வீம்பிலை கோடேறி உள்ளதையும் இழந்து போன கதையள் நாப்பது வரியத்துக்கு முன்னுக்கு இஞ்சை நிறைய உள்ளன.

இப்ப கன இடங்கள் விட்டாச்சுது.விடுவங்கள் விடுவங்கள் எண்டு பாத்துக் களைச்சுப் போய், செத்துக் கெட்டதுகள் போக ஒவ்வொண்டாய் வெளிநாடுகளுக்குக் கழண்டிட்டுதுகள். இனி இஞ்சை வரேலாது எண்டு போட்டு பாங்கிலை லோனைப் போட்டுஅங்கினைக்கை வீடு வாசலுகளை வாங்கியிருக்குதுகள். இஞ்சத்தைக் காணி பூமியளை ஆர் பாத்து மேய்க்கிறது எண்டு அதுகள் அங்கலாச்சுக் கொண்டு நிக்கேக்கை, வெளி நாட்டுக் காரற்றை காணியளை அரசாங்கம் ரேக்கோவர் பண்ணப் போகுது எண்ட கதை கிளம்பியிருக்குது. இஞ்சை இருக்கிற சில பேர் அதைப் பெரிசாய்க் கதைச்சு அதுகளுக்குத் திகிலூட்டி விட, அதுகள் இங்கை யிருக்கிற அவையின்ரை ஆக்களுக்கு அற்றோணித்தத்துவம் அனுப்பி விப்பிக்கினம். குரங்கு அப்பம் பிரிச்ச கதை போலை காணி விக்கிற காசு புறோக்கருக்கு, அற்றோணித் தத்துவகாரருக்கெல்லாம் பிரிஞ்சு போய் மிச்சக் காசிலையும் நாணய மாற்றிலை கொஞ்சம் சுருட்டுப்பட்டுப், போய்ச் சேரும்.



வடக்கூரிலை ஒரு புத்திசாலி, சமாதானம் வர முந்தி, வெளி நாட்டுக்காரரிட்டை அரசாங்கம் காணியைப் பிடிக்கப் போகுது; வித்து விடுவமோ எண்டு கேட்டுத் துளெறிஞ்சு மலிஞ்ச விலைக்குக் காணியை வாங்கினார். சில ஆயிரங்களிலை வாங்கின காணிக்கு இண்டைக்கு லச்சத்திலை விலை சொல்லப்படுகுது. கிழக்கூரிலை ஒரு அப்புக்காத்து தொண்ணூறாம் ஆண்டுக் காலத்திலை வெளிநாட்டுக்குப் போகேக்கை புலியள் எடுத்தாலும் எண்டு பயந்து வீட்டை வித்திட்டுப் போனார். இப்ப சமாதானம் வந்தாப் பிறகு அவருக்கு அந்த வீட்டைத் திரும்ப வாங்கிற 'ஐடியா' வந்திட்டுது. வாங்கினவரிட்டை முந்தி வித்த விலையின்ரை ரண்டு மடங்கு தாறன்.வீட்டை என்னட்டைத் தாரும் எண்டு கேட்டிருக்கிறார். வாங்கினவர் விடு வாரே? இப்ப புலியளைக் கொண்டு மிரட்டி வாங்கினது எண்டு வழக்குப் போட்டிருக்கிறார்!.

வெளிநாட்டிலை இருக்கிற ஒருத்தர் காசனுப்பி, காணியளையும், கிட்டங்கியளையும் தன்ரை ஒண்டவிட்ட சகோதரியின்ரை புரிசன் மூலம் வாங்கியிருக்கிறார். இஞ்சை வந்து பாத்தால் அவையெல்லாம் அவையின்ரை பெயரிலை எழுதப்பட்டிருக்குது. திருப்பித் தன்ரை பேரிலை எழுதித் தரக் கேட்டால் சண்டித்தனமாம். இப்ப அது உயி ரைக் கொண்டு போற அளவுக்கு வில்லங்கமாய் வந்திட்டுது. இதுமாதிரி வெளிநாட்டுக்காரற்றை வீடுகளிலை இருக்கிறவை, காணியிலை தோட்டம் செய்யிறவையும் எழும்ப மாட்டம் எண்டு அடம்பிடிக்கிறதாலையும் கன பிரச்சினையள் பாருங்கோ!

வெளிநாட்டிலை இருக்கிற சிலபேர் இஞ்சை வந்து தொழில் முயற்சியளைத் தொடங்க விரும்பினை. வேறை சிலபேர் எப்படா திருப்பி அனுப்புவினை எண்ட நிலையிலை இருக்கினை. அவையள்தான் இப்ப இஞ்சை காணி வாங்கவும், கடைக் கிட்டங்கியளைக் கட்டவும் வெளிக்கிட்டிருக்கினை.கதையோடை கதை, யாழ்ப்பாணத் திலை காணி கொஞ்சம் சூடாய் இருந்தாலும் கொழும்புப் பக்கம் இறங்கு முகந்தானாம்.

விழிச்சான் குஞ்சு.

# அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்

## சுஜீவசேனசிங்க எம்.பி. தகவல்

கொழும்பு,டிசெ.19

மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவசேனசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் அரசு முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். நாட்டில் கடத்தல் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கூட இந்தளவுக்கு மர்மமான கடத்தல் சம்பவங்கள் இடம்பெறவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் எவ்வித பொறுப்பு



ணர்ச்சியுமின்றி, நகைப்புக்குரிய கருத்துக்களை கெஹலிய வெளியிட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பிரதான கருவியாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையைப் பயன்படுத்தக்கூடாது என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆணைக் குழுவின் அறிக்கை சில விடயங்கள் குறித்து கவனம் செலுத்தியுள்ளபோதிலும், கவனம் செலுத்தப்படாத விடயங்களும் காணப்படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்ட நடைமுறை மற்றும் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றல் என்பன உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது யுத்தம் இடம்பெறவில்லை. இதனால் வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் அநாவசியமானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கு, கிழக்கில் முழுமையான சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து கவனம் செலுத்த முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எப்போதும் தயார்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.19

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நான் எப்போதும் தயார். ஆனால் கூட்டமைப்பு தயார் இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார்.

மனோகணேசனை நேற்று முன்தினம் சனிக்கிழமை தொலைபேசியில் தொடர்புகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நான் தயார். எனவே உங்கள் கூட்டமைப்பு நண்பர்களுக்கு அறிவுரை கூறுங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக இழுபறிப்பட்டுவரும் தேசிய இனப்பிரச்சினைக்கு பிறக்கபோகும் புதிய வருடத்தில் நீங்கள் கட்டாயமாக தீர்வு காண வேண்டும் என்று மனோ கணேசன் கேட்டத்துக்கு பதிலாகவே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். (ச)

# மது போதையில் வாகனம் செலுத்தியோர் 27,388 பேர்

கொழும்பு,டிசெ.19

இந்தவருடம் செப்ரெம்பர் வரையான காலப் பகுதிக்குள் 27,388 பேர் மது போதையில் வாகனம் செலுத்தியமை இனம் காணப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

பண்டிகைக் காலங்களின் போது மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவதால் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று பொலிஸ் தலைமையகப் வாகனப் பிரிவு தெரிவிக்கின்றது.

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது கணிசமான அளவு அதிகரித்துள்ளது என்று பொலிஸ் தலைமையக புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

2010 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 92 விபத்துக்கள் நிகழ்ந்த போதும் இது 2011 ஆம் ஆண்டில் 100 - 150 இற்கும் இடைப்பட்ட தொகையாக அதிகரித்துள்ளது என்று புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும், வாகன விபத்துக்களால் சுமார் 10 பில்லியன் வரையில் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நல்லிணக்கத்தை ஏற்படுத்த பங்களிக்கும்

## ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை

கொழும்பு,டிசெ.19

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழிகோலும் என்று ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஆணைக்குழுவின் அறிக்கை காத்திரமான வகையில் பங்களிப்பு செய்யும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என்று ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவின் பாதுகாப்பு கொள்கை மற்றும் வெளிவிவகாரப் பிரிவுத் துணைத் தலைவர் கெதரீன் அஸ்டன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசு தொடர்ந்தும் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளைப் பேண வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# ரயில் பரிசோதகர் சடலமாக ஒப்படைப்பு

கொழும்பு,டிசெ.19

பதுளையில் இருந்து நேற்று முன்தினம் கொழும்பு நோக்கி வந்த ரயிலில் பணியாற்றிய ரயில் பரிசோதகர் ஒருவர் ஹற்றன் ரயில் நிலையத்தில் வைத்து சடலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளார். இவர் ரயிலுக்குள் உயிரிழந்ததாகக் கூறி நேற்று ஞாயிற்றுக் கிழமை சடலம் கையளிக்கப் பட்டுள்ளது. ஆனால் இவரின் உடல் இரத்தக் காயங்களுடன் காணப்பட்டதாக ஹற்றன் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவரின் சடலம் கிளங்கன் வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. குறித்த மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# பொன்சேகாவுக்கு மன்னிப்பு வழங்குமாறு டிரான் அலஸ் ஜனாதிபதியுடன் பேச்சு

கொழும்பு,டிசெ.19

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு வழங்கக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கடந்த இரு மாதங்களாக பேச்சு நடத்திவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மன்னிப்புப் பெற ஏதாவது ஒரு தரப்பு முன்வருமானால் அதனை எதிர்க்கப் போவதில்லை என்று சரத்பொன்சேகா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திஸ்ஸ அத்தநாயக்கவிடம் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதி மன்னிப்பு பெற தமது குடும்ப உறுப்பினர்கள் எவரும் முன்வரமாட்டார்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# அகதிகளுடன் ஆஸிக்குச் சென்ற படகு கடலில் மூழ்கியது; 76 பேர் மீட்கப்பட்டனர்

## இலங்கையரும் பயணித்ததாகச் சந்தேகம்

ஆஸ்திரேலியா நோக்கிச் சுமார் 380 அகதிகளுடன் சென்ற படகு ஒன்று இந்தோனேசியக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் கவிழ்ந்ததில் 300 இற்கும் அதிகமானோர் காணாமற் போயுள்ளனர்.

கிழக்கு ஜாவா கடற்பகுதியில் கவிழ்ந்த இந்தக் கப்பலில் பயணம் செய்த 76 அகதிகளை மீட்டுள்ளதாக ஜாவா அவசர கால மீட்புப் பணியகத்தின் தலைமை அதிகாரி கூறியுள்ளார்.

இலங்கையிலிருந்தும் அண்மையில் அகதிகள் ஆஸ்திரேலியா நோக்கி சென்றுள்ள நிலையில் இந்தப் படகில் இலங்கையைச் சேர்ந்தவர்களும் பயணம் மேற்கொண்டனரா என்பது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மரத்தினாலான இந்தப் படகில் அளவுக்கதிகமானோர் பயணம் செய்துள்ளதாகவும், ராட்சத அலைகளால் தாக்கப் பட்டு அது கவிழ்ந்திருக்கலாம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தப் படகில் பல்வேறு நாட்டவர்கள் பயணம் செய்ததாகவும், அவர்களில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரையில் இருந்து 90 கிலோமீற்றர் தொலைவில் மூழ்கிய இந்தப் படகில் 40 சிறுவர்கள் வரை பயணம் செய்ததாக, தப்பிப் பிழைத்த ஆப்கானிஸ்தான் அகதி ஒருவர் கூறியுள்ளார்.

அங்குமிங்குமாகச் சாய்ந்த படகு உடைந்து நீரில் மூழ்கியதாகவும், அப்போது உடைந்து போன பாகங்களைப் பற்றிப் பிடித்தவாறு தத்தளித்துக் கொண்டிருந்த தம்மை உள்ளூர் மீனவர்கள் காப்பாற்றியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் படகில் பயணம் செய்த 200 இற்கும் அதிகமானோர் மரணமாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (வ)

# சென்னையிலிருந்து இலங்கைக்கு ஹெரோயின் கடத்தியவர் கைது

சென்னை விமான நிலையத்தில் இருந்து இலங்கை வந்த விமானத்தில் சுமார் 90 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் கடத்தி வந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் இருந்து வந்த இலங்கைப் பிரஜையான சந்தேக நபர் நேற்றிரவு 8 மணியளவில் கைது செய்யப்பட்டதாக விமான நிலையச் சுங்கப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ 350 கிராமுக்கும் அதிக நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விமான நிலையச் சுங்கப் பிரிவினர் குறிப்பிடுகின்றனர்.

இதனையடுத்து கொழும்பு மாளிகாவத்தையைச் சேர்ந்த குறித்த முஸ்லிம் நபர் கட்டுநாயக்க விமான நிலையப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தப் போதைப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகச் சுங்கப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# கல்வி முதுமாணிப்பட்ட கற்கைநெறி யாழ்ப்பாணத்திலும் நடத்த அனுமதி

தேசிய கல்வி நிறுவக தலைமை அலுவலகத்தில் மட்டும் நடத்தப்பட்டு வந்த கல்வி முதுமாணிப்பட்ட (M.Ed) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற்கு தேசிய கல்வி நிறுவகம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இந்தக் கற்கைநெறியை நடத்துவதற்கு கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் அனுமதி வழங்கியுள்ளதுடன் சகல உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வி முதுமாணிக் கல்வி நெறியை பயில்வதற்கு ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் விரும்புகின்ற போதிலும் மிகக் குறைந்தளவு தொகையினருக்கே அனுமதி கிடைக்கின்றது. மேலும் கொழும்புக்குச் சென்று மேற்படி கற்கைநெறியைப் பயில்வதில் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் இந்தக் கற்கை நெறி ஆரம்பமாவது ஆசிரியர்களுக்கு மிகவும் பயனுடையதாகின்றது. (வ)

## விபத்தில் மருத்துவர் காயம்

வீதியில் காணப்பட்ட பெரிய குழி யில் பஸ்சில்லை விழவிடாமல் தடுப் பதற்காக வீதியின் மறுபக்கத்துக்குச் செலுத்தியபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த மருத்துவருக்குத் தலையில் காயமேற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நுணாவிலில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது. சம்பவத்தில் சாவகச்சேரி ஹென்ஸ்மன் ஒழுங்கையைச் சேர்ந்த தவராசா விஜயகுமார் (வயது 53) என்னும் சித்த மருத்துவரே காயமடைந்தவராவார். இவர் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-207)

# இளையோர் நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டம் நாளை

வலி. வடக்கு, டிசெ 19

இலங்கை இளையோர் நாடாளுமன்றம் நான்காவது கூட்டத்தொடர் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கொழும்பு மகரகம லங்காயுத் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள இந்த இளையோர் நாடாளுமன்றத்தில் முக்கியமாக இலங்கை இளைஞர் கழகத்தின் யாப்பு திருத்தம் சம்பந்தமாக ஆராயப்பட்டு முடிவுகள் எட்டப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து இரண்டாம் நாள் இறுதியில் ஏற்கனவே இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட தனிப்பட்ட விடயங்களுக்குக் கேள்விகளுக்கான பதில்களும் அது தொடர்பான விவாதங்களும் இடம் பெறவுள்ளன.

இளையோர் நாடாளுமன்றம் ஒரு காத்திரமான பாதையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இளையோர் நாடாளுமன்றத்தில் கடந்த மூன்று கூட்டங்களும் இளைஞர்களாக இருந்தாலும் மொழி, மதம், இனம் கடந்து ஒரு புதிய பாதையிலும் நல்ல முறையிலும் ஒருவரையொருவர் ஏற்றுச் செல்கின்றமை சுட்டிக் காட்டக் கூடியதாகும். (வ-86)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலிப் பூக்கள்



அமரர் அப்பாத்துரை சண்முகநாதன்

தாயின் மடியில்
18.05.1947

தெய்வ பாதத்தில்
13.01.2007

கண்ணுக்குள் வைத்துக் காத்த தந்தையே
கண்ணீருடன் நிற்கின்றோம் உம்மைப் பிரிந்து
எம் இதயத்தினுள் தெய்வமே என்றும்
உங்களை மறக்கமுடியாதப்பா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! சாந்தி!!!

மதவடி வேன்
சுதுமலை வடக்கு
மானிப்பாய்.

நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.

(1827)(3.6.7)

## 3 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
25 ❖ 07 ❖ 1933



மறைவு
21 ❖ 12 ❖ 2008

Dr. பொ.மகாலிங்கம்

வேராக நீர் இருந்தீர் வீழாமல் நாமிருந்தோம்
நாளோடி மறைந்திடலாம் நம் உறவு நீள் கதைதான்
நாம் உம்மை இழந்து மூன்றாண்டுகள் போனாலும்
நீர் இருப்பீர் நெஞ்சமதில் நாம் இருக்கும் நாள்வரை

அன்னை மஹால், கேணியடி,
குப்பிளான் தெற்கு, குப்பிளான்.

குடும்பத்தினர்.

(11746)(5.6.7)

60/- ரூபா தொடக்கம்
குறைந்த விலையில் குவளைகள்



www.titusstores.com
டைட்டஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை
லிபர்டி பிளாஸா
2439422

## தவறிவிட்டது

புலோலி வடமேற்கு முருகன் கோயிலடியைச் சேர்ந்த திருநாவுக்கரசு இலம்போதரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (892693311V) வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன கடந்த 12 ஆம் திகதி கரணவாய்க் கும் மந்திகைக் கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலை பேசி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 0771880896, 0778213376

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள செல் மொடல் வெள்ளை நிற வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0776158977

## கார் வாடகைக்கு

திருமணம் மற்றும் சுபகாரியங்களுக்கு அதிநவீன கார்(AC) வாடகைக்கு வழங்கப்படும். நாள், வாரம் மற்றும் மாத வாடகைக்கு மிக குறைந்த விலையில் வாடகைக்கு விடப்படும். 0776237546

## வீடு வாடகைக்கு

யாழ்.பஸ் நிலையம், போதனா வைத்திய சாலைக்கு மிக அருகில் சகல வசதிகளுடனும் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது.தொடர்பு:0779213609, 0718265663

## கார் விற்பனைக்கு

HONDA FIT AIRYA - KL xxxx
தொடர் இலக்கம் கொண்ட புதிய
கார் லீசிங் வசதிகளுடன்
மலிவாக விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0774638263

## 35 ஆம் ஆண்டு பிறந்தநாள் நினைவில் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
08.03.1976

அமரர்
இராஜேந்திரம் விஜயகுமார்
(கண்ணன்)

உதிர்வு
08.01.2010

திதி: அபரபக்க நவமி (19.12.2011)

பாசமும் நேசமும் கொண்டு வாசமலராய்
மணம் வீசி நின்ற கண்ணனே! – நீ ஒருமுறை
வந்து உன் திருமுகம் காட்டாயோ!
அன்பு முகம் காண ஆசைப்பட்டோம்!
முடியவில்லையே கண்ணா!

கனிவுடன் மொழிபேசி எம்மை மகிழ்விப்பாய்! –என
காத்திருந்திருந்தோம் கண்ணா! நேற்றிருந்த – நீ இன்று
எம்மை மறந்து எங்கு தான் சென்றாயோ!
தேனினும் இனிய தென்றலாய் வீசி நின்றீர்!
இன்று ஊனினை உருக்கி நெகிழவைத்து விட்டீர்!
பெற்றிடுக சாந்தி!!!

525/1, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிதவிக்கும்
குடும்பத்தினர்.

(11829)(3.6.7)

# ஜனாதிபதியின் ஆலோசகராக ஓய்வுபெற்ற நீதியரசர் இருக்கையில் நாடாளுமன்ற முன்னாள் செயலாளர் ஆலோசகராக இருப்பது தவறா?

## சபையில் ரணில் கேள்வி

நாடாளுமன்றம்,டிசெ.19

ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவரே ஜனாதிபதியின் ஆலோசகராக நேரடி அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள போது நாடாளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம் அரசியல் தொடர்புகள் அற்ற ஆலோசகராக செயற்படுவதில் தவறு காண்பது வேடிக்கையாக உள்ளது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இந்த நாடாளுமன்றத்தில் அதி உயர்பதவி வகித்த நாடாளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆலோசகராக இன்றும் செயற்படுகின்றார்.நாடாளுமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்டறிந்த அவர், எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்படுவது அவருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளை துஷ்பிரயோகம் செய்வதாக அமைகின்றது. எனவே சபாநாயகர் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம் அஸ்வர் ஒழுங்குப் பிரச்சனை ஒன்றை நாடாளுமன்றில் நேற்று எழுப்பினார்.

நாடாளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம் நாடாளுமன்றத்தின் மூலம் ஏராளமான சலுகைகளை அனுபவித்து வருகிறார். இந்த நிலையில் அவர் அரசியல் கட்சி ஒன்றுடன் இணைந்து செயற்படுவது கண்டனத்துக்குரியது என்று ஆளும் கட்சி கொறடாவும், அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஆளும்கட்சியினரால் எழுப்பப்பட்ட இந்தக்கருத்துகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்து உரையாற்றினார்.

எங்களுடைய கட்சியாப் பின்படி அரசியல் தொடர்புகள் இல்லாத நிபுணர்குழு ஒன்று ஆலோசனைக்குழுவாக இயங்குகின்றது. இந்தக்குழுவில் கட்டாயமாக பெண் நிபுணர் ஒருவர் இருக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி தகுதியான பெண்நிபுணர் ஒருவரைத் தேடிப்பிடித்து நியமிக்கவேண்டியது எமது கடப்பாடு.

நாடாளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம் சகல வழிகளிலும் இதற்குப் பொருத்தமானவர். எனவே அரசியல் தொடர்புகள் அற்ற ஆலோசனைக்குழுவில் அவரையும் இணைத்துள்ளோம். எனினும் அவர் ஐ.தே.கவில் உறுப்பினராக இணையவில்லை.இதுவரையில் அவர் முழுநேர அரசியலிலும் ஈடுபடவில்லை.

அத்துடன் அவர் நாடாளுமன்றத்துடனான சகல தொடர்புகளையும் இந்த வருட இறுதிக்குள் துண்டித்துவிடப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த காலங்களில் இவ்வாறான பதவிகளில் இருந்தவர்கள் நேரடியாகவே அரசியலில் ஈடுபடுகின்றனர். உதாரணமாக ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர்தான் நேரடி அரசியல் தொடர்புடைய ஜனாதிபதியின் ஆலோசகர் என்ற பதவியை வகிக்கிறார்- என்று ரணில் விளக்கமளித்தார்.

இந்த விடயம் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வரப்படும் என்று பிரதிசபாநாயகர் சபையில் அறிவித்தார்.

(ங-02)

# பகவத் கீதையை தடை செய்தது ரஷ்யா

மொஸ்கோ, டிசெ.19

இந்துக்களின் புராண நூலான பகவத் கீதையை ரஷ்யா தடை செய்துள்ளது

இலக்கியத்தில் தீவிரவாதத்தை போதிக்கிறது என்று கூறி ரஷ்ய அரசு இந்துக்களின் புனித நூல் என்று சொல்லப்படும் பகவத்கீதையை தடை செய்துள்ளது.

சைபீரிய நீதிமன்றத்தில் இது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கொன்றில் கிடைத்த தீர்ப்பின் அடிப்படையில் இந்தத் தடை விதிக்கப்படுவதாக அறிவித்துள்ளது ரஷ்ய அரசு. இந்தியா, ரஷ்யா இடையே பல்வேறு ஒப்பந்தங்களைச் செய்யும் விதமான அரசு முறைப் பயணமாக இந்திய பிரதமர் மன்மோகன் சிங் ரஷ்யாவுக்குச் சென்றுள்ள நிலையில் பகவத் கீதை தடை செய்யப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் வெட்டிப்படுகொலை

## அனுராதபுரத்தில் கோரம்; சந்தேக நபர் கைது

அனுராதபுரம், எப்பாவெல பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மிகவும் கோரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொடூரம் நேற்றுமுன்தினம் இரவு அரங்கேறியுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இக்கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்றுக்காலை தம்புத்தேகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். சரணடைந்தவர் ஓய்வுபெற்ற பாதுகாப்பு அதிகாரி ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

மூன்று பெண்கள் மற்றும் ஒரு இளைஞன் ஆகியோரே இவ்வாறு கோரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர். 49 வயதுடைய தாய், அவருடைய சகோதரி (55 வயது), அவரது மகள் (23 வயது) மற்றும் மகளின் கணவன் ஆகிய நால்வருமே வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர். வெட்டிக் கொல்லப்பட்ட இளைஞன் பனாகொட இராணுவ முகாமில் சேவை புரிந்தவர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இதேவேளை, எப்பாவெல பகுதியில் அண்மையில் இரு யுவதிகளும் ஒரு இளைஞனும் தூக்கிட்டு மரணமான நிலையில் சடலமாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அச்சம்பவத்திற்கும் இக்கொலைச் சம்பவத்திற்கும் தொடர்பிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-சி)

# இந்தியாவுக்கான அடுத்த அமெரிக்க தூதராக நான்சி

டில்லி, டிசெ.19



இந்தியாவுக்கான அடுத்த அமெரிக்க தூதராக நான்சி ஜே.பாவெல், 64, நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் முதல் பெண் இவர்தான். இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதராக இருந்த திமோதி ஜே.ரோமர், கடந்த ஏப்ரல் மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அவர் அமெரிக்க செனட் சபை உறுப்பினரானதால், இந்தப் பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதரக விவகாரங்களை, தற்போது பீட்டர் பர்லெக் என்பவர் கவனித்து வருகிறார். இதனால், இந்தியாவுக்கான புதிய அமெரிக்கத் தூதராக, தெற்காசிய விவகாரங்களில், மிகுந்த அனுபவம் கொண்ட நான்சி ஜே.பாவெல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் ஒபாமா இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இந்தப்பதவிக்கு நியமிக்கப்படும் முதல் பெண் இவர்தான். இதற்கு முன்னர் பாகிஸ்தான், நேபாளம், கானா, உகண்டா நாட்டுக்கான அமெரிக்க தூதராகவும் நான்சி பணியாற்றியுள்ளார்.

# பள்ளிவாசல் தொடர்பாக ஆராய வக்பு குழு நேற்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல்கள் தொடர்பான அபிவிருத்தி பற்றி ஆராய இலங்கை வக்பு சபையைச் சேர்ந்த குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது.

மாநகரச சபை உறுப்பினர் மௌலவி சுபியானின் ஏற்பாட்டில் வருகை தந்த இந்தக்குழு யாழ்ப்பாணத்திலுள்ள பள்ளிவாசல்களின் அபிவிருத்திகள் சம்பந்தமாகக் கலந்துரையாடியது. இந்தக் குழு சார்பில் இலங்கை வக்பு சபையின் பணிப்பாளர் சப்ரி ஹரிம் டீன், முஸ்லிம் சமய கலாசார திணைக்கள அதிகாரி ரபீக் இஸ்மாயில் மற்றும் வக்பு சபையைச் சேர்ந்த உறுப்பினர்களான எம்.எம். யுனைல் ராசீக் அன்வர், சட்டத்தரணி வதீஸ், அபிமொஹமட் யுனைட் ஹமீம் உள்ளிட்டோர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

நேற்றுமதியம் கொழும்பில் இருந்து வருகை தந்த இந்தக் குழு கிளிநொச்சியில் உள்ள 8 பள்ளிவாசல்களுக்கு விஜயம் செய்தது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்த குழுவினர் மதியம் நயினாதீவு, மண்கும்பான், பொம்மைவெளி ஆகிய இடங்களில் உள்ள பள்ளிவாசல்களுக்கு விஜயம் செய்து அவற்றின் தற்போதைய நிலை பற்றி நேரில் பார்வையிட்டனர்.

அதன்பின் சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களுக்கும் இவர்கள் விஜயம் செய்து அங்கு பள்ளிவாசல்களில் இடம்பெற்று வரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்தனர்.

யாழ்.குடாநாட்டில் உள்ள பள்ளிவாசல்களை அபிவிருத்தி செய்து அவற்றினைத் திறம்படச் செயற்படுத்துவதே தமது யாழ்ப்பாண விஜயத்தின் நோக்கம் என்று வக்பு குழுவினர் தெரிவித்தனர்.

( ங- 319)

# வருமான வரி முற்பணக் கொடுப்பனவை அறவிடும் யாழ். இறைவரித் திணைக்களம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

வருமான வரிக்கான முற்பணக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்கான ஏற்பாடுகளை யாழ். பிராந்திய உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது என யாழ். பிராந்திய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் பி.சிவாஜி தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்;

2011/2012 வரி மதிப்பீட்டு ஆண்டுக்கான சுயவரி மதிப்பீட்டின் அடிப்படையில் வருடத்தின் காலாண்டுக்கான முற்பணவரிக் கொடுப்பனவுகளை உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி செலுத்துதல் வேண்டும்.

இந்த வரிகளின் அடிப்படையில் 15.8. 2011, 15.11.2011, 15.2.2012 ஆம் திகதிகளில் காலாண்டுக்குரிய வரி கொடுப்பனவுகள் செலுத்துதல் வேண்டும். மிகுதி வரியினை 30.9.2012க்குள் செலுத்துதல் வேண்டும்.

அதாவது, 2011/2012 ஆம் ஆண்டுக்கான வருமான வரி 1லட்சத்து 20 ஆயிரம் ரூபா ஆயின் அந்த வரியை ஏற்கனவே செலுத்தியிருந்ததால் காலாண்டுக்கான 1ஆம், 2ஆம், 3 ஆம், 4ஆம் ஆகிய தவணைக் கட்டணங்களில் சுயவரி மதிப்பீட்டுக் கட்டணமாக தலா 30 ஆயிரம் ரூபா செலுத்துதல் வேண்டும்.

தற்போது வரி மதிப்பீட்டு ஆண்டான 2011, 2012 முடிவடைந்த பின்னர் இந்தவரி மதிப்பீடாக ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலுத்தியிருக்கவேண்டும். அவ்வாறு வரி செலுத்தியிருந்தால் ஏற்கனவே செலுத்தியிருந்த ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவைக் கழித்து மிகுதி 40 ஆயிரம் ரூபாவை 30.09.2012 க்கு முன் செலுத்துதல்வேண்டும்.

இதன் அடிப்படையில் மேலே குறிப்பிட்ட காலாண்டுக்கான சுயவரி மதிப்பீட்டுக் கொடுப்பனவு விவரம் யாழ். பிராந்தியத்தில் உள்ள வருமான வரிக் கோவை வைத்திருப்பவர்களுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வருமானவரி செலுத்துவோர் உரிய காலங்களில் வரி களைச் செலுத்தி வரிக் கொடுப்பனவுகளை மேற்கொண்டு வரும் இறைவரித் திணைக்களத் துக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

(த-311)

# ஆங்கிலம் பேச தெரிந்தால் மட்டுமே இங்கிலாந்தில் குடியேற முடியும்

## லண்டன் உயர் நீதிமன்றம் தீர்ப்பு

ஆங்கிலம் பேச தெரியாதவர்கள் இங்கிலாந்தில் குடியேற தடை விதிக்கும் சட்டம் செல்லுபடியாகும் என்று லண்டன் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பல்வேறு வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் இங்கிலாந்தில் குடியேறுகின்றனர். அவர்கள் குடியுரிமை பெற ஆங்கிலம் பேச தெரிந்திருக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு நவம்பர் மாதம் புது சட்டம் கொண்டு வரப்பட்டது.

இதை எதிர்த்து இந்தியாவை சேர்ந்த ரஷீதா சாப்தி(54) என்பவர் லண்டன் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இவர் தனது மனுவில், என் கணவர் வாலி சாப்தி(57) இந்தியாவில் இருக்கிறார். எங்களுக்கு 37 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. எங்களுக்கு 6 குழந்தைகள் உள்ளனர். கடந்த 15 ஆண்டுக்கு முன்பு இங்கிலாந்தில் குடியேறினேன். இங்கு குடியுரிமையும் பெற்றுள்ளேன். ஆனால் என் கணவருக்கு ஆங்கிலம் பேச தெரியாததால் இங்கிலாந்தில் குடியேற முடியவில்லை.

புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள குடியேற்ற சட்டம் சட்டவிரோதமானது. இது இன,மொழி பாகுபாடானது. அதை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பீட்சன், ஆங்கிலம் பேச தெரிந்திருக்க வேண்டும் என்ற சட்டம், தம்பதியின் குடும்ப வாழ்க்கையில் தலையிடவில்லை. அதேபோல் இங்கிலாந்தில் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் திருமணம் செய்து கொள்வதையோ, திருமணத்துக்காக அவர்கள் வெளிநாடு செல்வதையோ இந்தச் சட்டம் தடுக்கவில்லை.

இங்கிலாந்தில் குடியேறுபவர்களுக்கு ஆங்கிலம் பேச தெரிந்திருந்தால், சமுதாயத்தில் ஒன்றிப் பழக முடியும், மக்களுடன் எளிதாக ஒன்றிணைய முடியும் என்பதுதான் நோக்கம் என்று தீர்ப்பளித்து வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

(ம)

# பெண்ணின் பணி.......



பெண் இதுவரை ஆற்றிவரும் உழைப்பின் அளவு சூரியனை விட அதிகமானது. ஏனெனில், காலை சூரியன் விழிக்கும் முன்பே பெண்கள் எழுந்திருக்கின்றனர். முற்றத்தைப் பெருக்கித் தூய்மை செய்கின்றனர். மாட்டிலிருந்து பால் கறக்கின்றனர். வேறு பிராணிகள் கோழிகளோ ஆடுகளோ நாய்களோ வைத்திருப்பின் அவற்றின் கூண்டுகளைத் திறந்துவிட்டு அவற்றுக்கு இரை தேட அவற்றை அனுப்பி வைக்கின்றனர். அன்றைக்குத் நீரை சேமித்து வைக்கின்றனர். உணவுக்காக முன்பே ஏற்பாடு செய்து வைத்திருந்த மூலப்பொருள்களை ஒன்றோடொன்று பொருந்தும்படிச் சேர்த்து மனித உடலுக்கான ஆகாரமாக்கு கின்றனர். குழந்தைகளை எழுப்பி அவர்களின் காலைக்கடன்களுக்கு உதவுகின்றனர். அவர்கள் பள்ளி செல்வதற்கான சீருடை அணிந்து வீதியில் மறையும்வரை காத்திருந்து, கணவன் விழிக்கையில் சூடான தேநீர் பரிமாறுகின்றனர். அவர் குளிக்க வெந்நீர் வைக்கின்றனர்.

ஏற்கனவே மடித்து வைக்கப்பட்டிருந்த உடையை எடுத்து வந்து, அவர் அணிவிக்கக் காத்திருந்து, அவர் வெளியே புறப்படக் காத்திருந்து நிலைப்படியில் நின்று வழியனுப்பி வைக்கின்றனர்.

வீட்டில் மட்டுமன்றி வயல்வெளிகளுக்கும் அவர்களின் வேலைகள் விரிகின்றன. வயலில் விளைகின்ற பொருள்களை ஒன்றாய்ச் சேகரித்து மூடையாக்கி வண்டியில் ஏற்றி அனுப்புகின்றனர். அதை கொண்டு சென்று சந்தையில் விற்கும் ஆணின் கையில் வந்து சேரும் பணம் எவ்வளவாக இருக்கும் என்பதை அவள் கற்பனையும் செய்து பார்ப்பதில்லை.

அவள் கைகளுக்குப் பணம் வரவேண்டும் என்ற ஏக்கத்தைக் கூட அவள் சூடிக்கொள்வதில்லை. மாலை நெருங்குகையில் வீடு வந்து சேரும் கணவனையும் குழந்தைகளையும் புன்முறுவலிட்டு வரவேற்கிறாள். ஆடு மாடுகளையும் சரியாக இருக்கின்றதா என்று கவனித்துக் கூடு அடைக்க வேண்டும். அவர்களின் எல்லா தேவைகளும் நிறைவேற்றி முடிந்தனவா என்று சோதித்துவிட்டு, இரவுக்குள் நுழைய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட, பெண்ணின் எந்தப் பணியுமே உற்பத்திப் பணியாகவோ பொருளாதார உற்பத்திக்கான பணியாகவோ கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவே இல்லை. ஏனெனில், இவையெல்லாம் பெண்களுக்கான வேலைகள் என்றும் இந்த வேலை எதுவுமே ஆண்களுக்குப் பொருந்தாதது என்றும் கருதப்பட்டது.

காலவரமின்றி காலத்தோடு பயணித்த படியே ஆற்ற வேண்டிய வேலைகள் எல்லாம் பெண்களுக்கு என்றாகின.

இவ்வேலைகள் எல்லாம் பெண்களால் செய்யப்படாமலும் அதன் பயனை அவர்கள் ஈட்ட முடியாது. அவை தரும் சுகங்களில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ள முடியாது. மற்றவர்களுக்கு சுகத்தைத் தருவதற்கு உழைத்தல் மட்டுமே பெண்ணின் பணி என்று கருதப்பட்டது. (தொடரும்)




இன்பமே வாழ்க்கை
இனியன மாந்தர்
எண்ணியிருந்தது பெண்மை
காதலில் தோய்ந்து
கனவுகள் நெய்து
மயங்கிக் கிடந்தது மனது
காதலின் அளவை
காசினைக் கொண்டு
அளந்து பார்த்தது உறவு
சீதனம் என்ற பெருந்தொகையின்றி
தவித்து நின்றது ஏழ்மை
கனவுகள் கலைந்து
கற்பனை அழித்து
கை கட்டிப் பிரிந்தது காதல்...
பெருமைகள் கூறும்
பெண்மையின்
நிலைமை எண்ணி
கண்ணீர் வடித்தது காலம்...

■ சோ.அபிராமி, கொழும்புத்துறை

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# இது கதையல்ல 2

வேலை முடிந்து வீடு திரும்புவதற்காக பஸ் தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்தேன். இரு இளவயதுப் பெண்கள் உரையாடிக் கொண்டிருந்தது காதில் விழுந்துகொண்டிருந்தது. பதின்ம வயதினராகத்தான் இருக்கவேண்டும்.

''முன்பின் தெரியாதவையோடை எப்படிக் கதைக்கிறாய்?

''கதைச்சுக் கதைச்சு இப்ப தெரிய வந்திட்டுது''

''ஆளை நேரை சந்திச்சனியோ?

''இல்லை. ஆனால் ஆளைப்பற்றி முழு விவரமும் தெரியும்'

''ஆர்சொன்னது?''கதைக்கத் கதைக்கத் தெரிய வருந்தானே?'' "அவையள் சொல்லுறது களை நம்பமுடியுமே? கற்பனை செய்து பொய் யும் சொல்லுவினம்.''

''கதைக்கேக்கை எப்பிடிப்பட்ட ஆளெண்டு விளங்குமப்பா''

''முகத்தைக் கூடப் பாக்காமல் கதைக்கேக்கை உமக்கு ஆளைப் பற்றி விளங்குதே? சரியான ஆளெண்டா மொபையிலை தேடிப்பிடிச்சுக் கதைப்பானே?

பஸ் வரவே நான் அதில் ஏறிவிட்டேன். மிகுதி உரையாடலைக் கேட்காவிட்டாலும் அந்த ஏமாளிப் பெண்ணின் முகம் நினைவிலேயே நின்றுவிட்டது. அவருக்கு மனம் இரக்கப்பட்டது.

ஏன் இப்படி ஏமாறுகிறார்கள்?

காலங்காலமாக இப்படி எவ்வளவு பேர் ஏமாந் திருக்கிறார்கள். அவைபற்றியெல்லாம் கேள்விப் பட்டும் மீண்டும் இப்படி ஏமாறுவது ஏன்?

அந்தப் பருவத்தின் உணர்ச்சிவேகத்தான். எதிர்பாலார் மேல் ஏற்படும் ஓர் ஈர்ப்பு. அது இயல்புதான்.

இயற்கை உருவாக்கும் எல்லாமே இயல்பானவை. அத்தியாவசிய மானவை. சரியாகக் கையாளப்படும்போது பல்வேறு நற்பயன்களைத் தருபவை. ஆனால் தவறாகக் கையாண்டால் அதனால் பேராபத்துக்கள் ஏற்படும். நீர், தீ என ஆரம்பித்து மின்சாரம், அணுசக்தி என்று நீண்டு செல்லும் பட்டியலில் எதை எடுத்துக் கொண்டாலும் அப்படித்தானிருக்கும்.

உதாரணத்துக்கு மின்சாரத்தை எடுப்போமே அதைக் கையாள வேண்டிய முறையில் கையாண்டால் எவ்வளவு அற்புதமாக உபயோகப்படுகிறது. சற்றுக் கவனயீனமாக இருந்தால் உயிரே போய்விடும்.

இனிமையாக முகிழ்விடும் பாலியல் உணர்வுகளும் அத்தகையனவே. எமது பண்பாட்டின் கட்டுக் கோப்புகளுடன் நல்ல நெறியில் அவை பிரவகிக்க வழிகாட்ட வேண்டியது பெரியவர்களது கடமை. தவறி உடைப்பெடுத்துவிட்டால் ஏற்படும் அனர்த்தங்கள் பற்றி உணர்த்தவேண்டிய கடப்பாடும் அவர்களுக்கிருக்கிறது. அது சுலபமான வேலையல்ல.

நல்ல பழக்கங்களைக் கைக்கொள்ளச் செய்வது கடினம். தீயவை பக்கென்று நம்மை ஆட்கொண்டு விடும். அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்கச் செய்வதே எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு விடிந்தபின்பும் எழுந்திராது உறங்குவது எவ்வளவு ஆனந்தமளிக்கிறது. அதையும்விட ஆனந்தமாகத் தோன்றும் ஒன்றின்பால் ஈர்க்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவது இயலுமா என்ன?

மெல்லிதாகச் சுடர்விட ஆரம்பிக்கும் அதைப் பெரு நெருப்பாகத்தான் பல பக்கத் துணைகள் உருவாக்கப்பட்டுள்ளனவே.

எனது சிந்தனை மேலும் நீண்டது. *



■ யோகேஸ்வரி சிவப்பிரகாசம்.

# நிர்வாகத்தின் தன்னிச்சையான போக்குக்கு ஒருபோதும் நாம் அடிமையாகி விடக்கூடாது

## மாகாண சபை உறுப்பினர் வேலாயுதம் தெரிவிப்பு

நுவரெலியா, டிசெ.19

பெருந்தோட்டத் துறையில் நட்டம் ஏற்பட்டுள்ளதால், தொழிலாளிகளின் வேலைப் பளுவை அதிகரிக்கும் வகையில் வழக்கத்துக்கு மாறாக மேலதிகமாக இரண்டு கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என நிர்ப்பந்திக்கும் தோட்ட நிர்வாகங்களின் தன்னிச்சையான போக்குக்கு நாம் அடிமைகளாகிவிடக்கூடாது. கூட்டு ஒப்பந்தத்தில் கூறப்படாதவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு தோட்ட நிர்வாகம் முயற்சிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்க முயற்சிப்போருக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளிபடுத்த வேண்டும் என்று ஊவா மாகாணசபை உறுப்பினர் கே.வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

மலையகமெங்கும் பரவலாகத் தோட்ட நிர்வாகங்கள் வேலைப் பளுவை அதிகரித்து, தொழிலாளர்கள் மீது இன ரீதியான அடக்குமுறைகளை மேற்கொண்டு வருகின்றன. அரசினால் சுவீகரிக்கப்பட்ட தரிசு நிலங்களில் பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்ற எத்தனிக்கின்றன என்று தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசால் சுவீகரிக்கப்பட்ட தோட்ட தரிசுக் காணிகளில் வெளியாரைக் குடியேற்றுவதால், இனப்பிரச்சினைகள் உருவாகும். ஆகையால், தோட்டக் காணிகளைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் தெரிந்த தோட்டத் தொழிலாளர்களுக்கே தரிசு நிலங்களை வழங்கவேண்டும். அதுமட்டுமின்றி, தோட்டத் தொழிற்றுறையைப் பற்றி கடந்த 200 ஆண்டுகளாக மிகுந்த அனுபவம் கொண்ட தொழிலாளர்கள் தரிசு காணிகளில் தேயிலை உற்பத்தி செய்து தேசிய பொருளாதாரத்துக்கு மேலும் பலமூட்டும் சக்தியைக் கொண்டவர்கள் என்பதை அரசு மறந்து செயற்படக் கூடாது.

இந்த விடயத்தில் மலையக சமூக அரசியல் வாதிகள் தமது பேதங்களை மறந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். தற்போது தோட்ட நிர்வாகங்கள் மேலதிகமாக கொழுந்து பறிக்குமாறு தொழிலாளர்களை வற்புறுத்திவருவது கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிரான செயலாகும்.

இந்த விடயத்தில் தோட்ட நிர்வாகம் அந்தந்த தோட்டத் தலைவர்களுடன் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும் என்ற நியதியை மீறுவதற்கோ, தொழிலாளர்களைப் பயமுறுத்துவதற்கோ நாம் இடமளிக்க முடியாது.

தோட்டங்களுக்கு இராணுவத்தை அழைத்து வருவதால், தோட்டத் தொழிலாளர்களின் வேலைகளை அவர்களால் செய்ய முடியுமா அல்லது எமது பெண்களைப் போல் கொழுந்து பறிக்க முடியுமா? இந்த விடயத்தில் அரசு பாராமுகமாக இருக்கக்கூடாது. அமைதியாக மலையகப் பகுதிகளில் வாழும் தொழிலாளர்கள் மிகுந்த இன்னல்களுக்கு மத்தியிலும் இந்த நாட்டுக்கான தேசிய வருமானத்தைப் பெற்றுக்கொடுப்பதை நன்றி உணர்வோடு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

வேலைப்பளுவை அதிகரித்து இலாபம் தேட முயற்சிக்கும் தோட்ட நிர்வாகங்கள் தங்களது சீரற்ற நிர்வாகப் போக்கை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து, தொழிலாளர்களைப் பயமுறுத்தவோ, இம்சிக்கவோ முயற்சிக்கக்கூடாது. தோட்ட மக்களின் பலத்தை சிதைப்பதற்கும், மலையக மக்களின் அரசியல் இருப்புகளை ஒழிப்பதற்கும் தரிசு காணிகளில் வெளியாரைக் குடியேற்றும் ஒரு சதித்திட்டம் என்பதை நமது சமூகம் எச்சரிக்கையுடன் புரிந்து நடந்து கொள்ளவேண்டும். தேயிலை விலையில் ஏற்பட்டுள்ள தற்காலிக விலை வீழ்ச்சியின் மூலம் மலையக மக்களின் நிரந்தரமான தொழில் உரிமைகளையும் சமூகத்தையும் எவராலும் சிதைக்கமுடியாது. தேயிலையின் விலையை சர்வதேசத்தில் அதிகரிப்பதற்காக நவீன நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

எனவே, இந்த விடயத்தில் கருத்துவேறுபாடுகளை மறந்து கட்சிக் கொள்கைகள், முரண்பாடுகளைக் கைவிட்டு எதிர்கால சந்ததிகளுக்காகவும், சமூக நலனுக்காகவும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய கட்டாயம் மலையக அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. - என்றார். (ச)

# இலக்கியத் தேடல் விடுதலையை நோக்கிப் பயணிக்கும்

மூதூர், டிசெ.19

மாணவர்களுக்கு இலக்கியத் தேடல் இருக்க வேண்டும். அப்போதுதான் எமது இனம் விடுதலையை நோக்கிப் பயணிக்க முடியும் என்று 'நீங்களும் எழுதலாம்' கவிதை இதழின் ஆசிரியர் கவிஞர் எஸ். ஆர். தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை புனித பிரான்ஸிஸ் சவேரியார் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பௌர்ணமி தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சினிமாவிலும், கணினியிலும் எமது மாணவர்கள் மூழ்கிக் கிடக்கின்றனர். அவர்களைத் தட்டியெழுப்ப வேண்டிய கடமை அனைவருக்கும் உள்ளது. அதன் முதற்படியாகத்தான் மாணவர்களைக் கொண்டு வாசகர் வட்டத்தை உருவாக்கியுள்ளேன். அவர்களை இலக்கிய செயற்பாடுகளில் பங்குபற்ற களம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இலக்கியத்தை நேசிக்கும் கலாசாரம் உருவாகவேண்டும். அழைப்பிதழின்றி நல்ல விடயங்களைத் தேடி கூட்டங்களுக்குச் செல்லும் பண்பு உருவாகவேண்டும். அப்போது கவிஞர்களின் கவியரங்குகள் போன்ற பல நிகழ்வுகள் ஆரோக்கியமான இலக்கியச்சூழலை உருவாக்க உதவும்.- என்றார்.


# கால்நடை உரிமையாளர்களுக்கும் தண்டம்

மூதூர், டிசெ.19

திருகோணமலை நகர சபை எல்லைக்குள் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிடித்து அவற்றின் உரிமையாளர்களிடமிருந்து தண்டப் பணம் அறவிடுவதற்கு திருகோணமலை நகரசபை தீர்மானித்துள்ளது.

திருகோணமலை நகர சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சி.நந்தகுமார் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் தொடக்கம் இது நடைமுறைக்கு வரும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)



அட்டாளைச்சேனை, திராய்க்கேணி கிராமத்தில் பஸ் தரிப்பிடம் ஒன்று கூரையின்றி புற்களின் நடுவே காணப்படுகின்றது.

# ஆயுள்வேத மருந்தகங்களை பரிசோதிக்க குழு நியமனம்

## கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் தகவல்

மட்டக்களப்பு,டிசெ.19

கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயுள்வேத மத்திய மருந்தகங்கள் முறையாகச் செயற்படுவதை அவதானிப்பதற்காக பரிசோதனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம். எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயுள்வேத மத்திய மருந்தகங்கள் தினமும் காலை 8 மணிக்கு திறந்து மாலை 4 மணிக்கு மூடப்பட வேண்டும். ஆனால், சில ஆயுள்வேத மத்திய மருந்தகங்கள் முற்பகல் 10 மணிக்கு திறந்து பிற்பகல் 2 மணிக்கு மூடப்படுவதாக பொதுமக்களிடமிருந்து எமது அமைச்சுக்கு முறைப்பாடு கிடைக்கின்றது. இதனைப் பரிசோதிப்பதற்காகவே எமது அமைச்சினால் கண்காணிப்பு பரிசோதனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது

இந்தக் குழு ஆயுள்வேத மத்திய மருந்தகங்களுக்குச் சென்று பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

இவ்வாறான மத்திய மருந்தகங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் இந்த மருந்தகங்களில் கடமையாற்றும் வைத்தியர்கள் உடனடியாக நிறுத்தப்படுவார்கள்.- என்றார். (ச)

# சந்தை நிர்மாண சர்ச்சைக்குத் தீர்வு

அட்டாளைச்சேனை,டிசெ.19

அட்டாளைச்சேனை பொதுச் சந்தை கட்டடத் தொகுதி நிர்மாணம் தொடர்பில் இருந்து வந்த இழுபறி நிலைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

இதன்படி பொதுச்சந்தை உத்தேச இடத்திலேயே நிர்மாணிக்கப்படவுள்ளது. அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசலை மறைக்காத வண்ணம் நிர்மாணிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பொதுச் சந்தைக் கட்டட விவகாரம் தொடர்பில் சுமுகமான தீர்வொன்றைக் காணும் முகமாக கிழக்கு முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட நால்வர் கொண்ட ஆணைக் குழு இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளதாக கிழக்கு மாகாண விவசாயம், மீன்பிடித்துறை அமைச்சர் துரையப்பா நவரட்ணராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கும், மாகாண அமைச்சர் உதுமாலெப்பைக்குமிடையில் இதுதொடர்பில் நிலவிய கருத்து முரண்பாடு களையப்பட்டுள்ளது.

என்னால் இறுதியாக முன்வைக்கப்பட்ட சமரச தீர்மானமொன்றுக்கு இரு தரப்பும் இணக்கம் தெரிவித்துள்ளன.

சந்தைத்தொகுதி அதேயிடத்தில் கிழக்கு, மேற்காக நிர்மாணிக்கப்படும். வடக்கு, தெற்காக கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படமாட்டாது- என்றார். (ச)

# பகிடிவதைக்குள்ளான மாணவனுக்கு தனியார் பல்கலையில் இலவச அனுமதி

## உயர் கல்வியமைச்சு தீர்மானம்

பேராதனை, டிசெ.19

பகிடிவதைக்கு உள்ளான பேராதனை மருத்துவப்பீட மாணவரொருவர் தாம் மீண்டும் பல்கலைக்கழகத்துக்குச் சென்று படிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

இதனையடுத்துஅவர் தனியார் பல்கலைக் கழகத்தில் இலவசமாக உயர் கல்வியைத் தொடர உயர் கல்வி அமைச்சு முடிவு செய் துள்ளது என்று தெரிவிக்கப்ப டுகிறது.

வெலிஅத்த என்னும் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த மாணவர் கடந்த வாரம் பல்கலைக்கழக மாணவர்களால் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டார்.

அதன் பின்னர், பேராதனை வைத்தியசாலையில் மனநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட இந்த மாணவர் கடந்த 15ஆம் திகதி சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்க முடியாது என்று அந்த மாணவர் தெரிவித்ததையடுத்து, அவர் தனியார் பல்கலைக்கழகத்தில் இலவசமாக உயர்கல்வியைத் தொடரலாம் எனவும் அதற்கான நடவடிக்கைகளை உயர்கல்வி அமைச்சர் தாம் ஏற்படுத்தித் தருவார் எனவும் உறுதியளித்துள்ளார்.

உளரீதியாகப் பகிடிவதையை அனுபவித்த இந்த மாணவர், குற்றம் புரிந்தனர் என்று 14 பேரை அடையாளம் காட்டியுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பேராதனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சில விடயங்களில் தந்திரமாகச் செயற்பட்டு மற்றவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். எதிர் பாராத பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள் நண் பர்களின் யோசனைகளைக் கேட்டு சில விடயங்களில் ஈடுபடு வீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறுவது தள்ளிப் போகலாம். மாமன், மைத்துனர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி உண்டு.

**இடபம்:**
விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். உங்களிடம் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக நண்பர்களிடம் உதவி கேட்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சில விடயங்களில் பிடிவாதமாக நடந்து கொள்வீர்கள்.

**மிதுனம்:**
சிலரின் தகுதிக்கு மீறிய செயற்பாடுகளைப் பார்த்து கோபம் அடைவீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, உடனுக்குடன் வாகன வசதி கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். பெண்கள் உடல் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும். மற்றவர்களுக்காக உங்களின் சேமிப்புப் பணத்தைச் செலவு செய்யலாம். கோபம், பதற்றம் உண்டாகும்.

**கடகம்:**
உங்களின் உதவிகளைப் பெற்ற சிலர் பாராட்டலாம். நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் உங்களின் ரகசியங்களைச் சொல்வீர்கள். உறவினர்கள், நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். பல மணி நேரமாகும் என்று நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடியலாம்.

**சிங்கம்:**
குடும்ப உறுப்பினர்கள் வழியில் கணிசமான செலவுகளைச் சந்திக்கலாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். வழக்கமாகச் செய்யும் வேலை ஒன்றை இன்று செய்ய முடியாமல் போகலாம். வீடு, வாகனங்களைப் பராமரிப்பதில் அக்கறை காட்டு வீர்கள். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள்.

**கன்னி:**
ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எதிலும் சிக்கன மாக இருக்க முற்படுவீர்கள். இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரலாம். மாமன், மைத்துனர்கள் உங்களின் எண்ணம் போல நடந்து கொள்வர். பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும்.

**துலாம்:**
பணப்பற்றாக்குறையால் சிலரிடம் திடீரென உதவி கேட்கலாம். ஒருவர் மீதுள்ள கோபத்தை நீங்கள் மற்றவர்களிடம் காண்பிப்பீர்கள். வேலையாள்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். விருந்தினர்கள் சிலரின் வருகையை எதிர்பார்த்து வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:**
கணிசமான பணவரவுகளைப் பெறலாம். யாரையும் நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல் நீங்களே அனைத்து வேலைகளையும் செய்ய முற்படுவீர்கள். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். நண்பர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

**தனுசு:**
குடும்ப உறுப்பினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டுக்கு வரலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் கூடும்.

**மகரம்:**
வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். சிலரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்க நேரிடலாம். உங்களுக்கு எதிரான ஒருவர் சிக்கலில் மாட்டிக் கொண்டிருப்பது கண்டு சந்தோஷம் அடைவீர்கள். சில விடயங்களில் மற்றவர்களின் யோசனையைக் கேட்காமல் நீங்களே தனித்து முடிவெடுக்க முற்படுவீர்கள்.

**கும்பம்:**
நண்பர்கள், உறவினர்கள் சிலரை விமர்சித்து அவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். குறைந்த செலவில் முடியும் என்று நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டும். சுலபமாக முடிந்து விடும் என்று நினைத்த வேலை ஒன்று நீண்ட நேரத்துக்கு இழுத்தடிக்கலாம். மறதியால் அவதியுண்டு.

**மீனம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் உதவிகள் கிடைக்கும் நாள். காலை முதல் மாலை வரை பரபரப்பாகச் செயற்படுவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். உறவினர்களை, நண்பர்களை உபசரிக்க கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். ஆனந்தமான நாள்.

# மக்கள் குடியிருப்புகளி
# அனல்மின் நிலை
# ஏற்றுக் கொள்ள முடியா

**இலங்கை தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளரு**
**திருகோணமலை மாவட்டத் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமை**
**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான க.துரைரெட்ணசிங்க**
**'உதயனு'க்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டி.**

கேள்வி:- திருகோண மலையின் தமிழர் வரலாற்றை வெளிப்படுத் தும் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதி நீண்டகாலமாக திருகோண மலை நகரும் சூழலும் பிரதேசசபையால் பராமரிக்கப்பட்டு வந்த நிலையில், அதனிட மிருந்து பறிக்கப்பட்டு தொல்பொருள் திணைக் களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதோடு இன்று அப்பகுதி பௌத்த மயமாக்கப்பட்டு வருகின்றது. இவ்விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது?

பதில்:- கன்னியா வெந்நீர் ஊற்று மிகவும் பழைமையானது. திருக்கோணேஸ்வர ஆலய வரலாற்றோடு சம்பந்தப்பட்டது. இராவணன் தன்னுடைய தாயாரின் ஈமக்கிரியைகளைச் செய்வதற்காக கன்னியாவில் வெந்நீர் ஊற்றை நிறுவினான்; உருவாக்கினான் என்பது வரலாறு. இதனைத் தொடர்ந்து இந்து மக்கள் இறந்தவர் களுடைய அந்தியேட்டி கிரியைகளை கன்னியா விலேயே நிறைவேற்றி வருவதும் பூர்வீக வழமையாக இருந்து வருகின்றது. இங்கு அமை யப்பெற்ற விநாயகர் ஆலயம் மிகப் பழைமை யானது.

அதுபோன்று, அங்குள்ள நடேசர் ஆலயமும் பழைமையானது. அந்தியேட்டி கிரியைகளை நிறைவேற்றுவதற்கான மண்டபம், அன்னதான மண்டபங்கள் ஆகியனவும் அமைக்கப்பட்டு, பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தன. வெந்நீர் ஊற்று ஆலயம் அமைந்த இடங்களும், அங் குள்ள பெருநிலப்பரப்பும் திருகோணமலை மடத்தடி மாரியம்மன் கோயிலுக்குச் சொந்தமா னவை. அதற்கான அத்தாட்சிகளை மாரியம்மன் கோயில் தர்மகர்த்தா மற்றும் ஆலய பரிபாலன சபையினர் ஆகியோரும் பாதுகாத்து வருகின்றார் கள். இந்த வரலாற்றை கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியை தரிசித்த இலங்கையிலுள்ள இந்துப் பெரியார்களும், வெளி இடங்களிலி ருந்து வந்தவர்களும் நன்கு அறிவார்கள்.

இது சம்பந்தமாக பல நூல்களும், ஆராய்ச் சிக் கட்டுரைகளும் சான்று பகர்கின்றன. இந்தக் கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதி நீண்டகால மாக திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையினாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில், கடந்த 2010ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதிக்குத் திடீரென சென்ற திருகோணமலை அரச அதிபர் தலைமை யிலான குழுவினர் அங்கு போடப்பட்டிருந்த வரலாற்றுப் பதிவுகள் அடங்கிய பெயர்ப் பல கையைப் பிடுங்கி சேதப்படுத்தியது மட்டுமல் லாமல், பிரதேச சபையினால் அங்கு வாகனங் கள், கடைகளுக்கு வழங்கப்படும் பற்றுச் சீட்டை கடமையிலிருந்த ஊழியரிடமிருந்து பறித்து, கிழித்து மிக அநாகரிகமாக நடந்து கொண்டனர். அது மட்டுமல்லாமல், அந்தக் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியை தொல் பொருள் ஆராய்ச்சிக்கு உட்பட்ட பகுதியாகப் பிரகடனப்படுத்தி, அண்மையிலுள்ள வெல் கம் விகாரையின் நிர்வாகத்திற்குத் தற்போது ஒப் படைத்துள்ளனர்.

இந்த விடயம் சம்பந்தமாக, தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைவர் மதிப்புக்குரிய இரா.சம்பந் தன் ஜனாதிபதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கவனத்திற்கு உடன் கொண்டு வந்தார். இவ்விடயம் சம்பந்தமாக தற்போதைய பேச்சிலும் பேசப்பட்டு வருகின்றது.

கே: திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்த வரை இலங்கை தமிழரசுக் கட்சியில் இளைஞர், யுவதிகளின் பங்கு மிகக் குறைவாகக் காணப்படு கின்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக் கப்படுகின்றது. இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

ப: திருகோணமலை மாவட்டத்தின் சகல கிராமங்களிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளைகள் அமைக்கப்பட்டு இருந்தன. செம்மை யாக அவற்றின் செயற்பாடுகள் நடைபெற்று வந்தன. இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்ப மானபோது இக் கட்சியின் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தது. ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் இளை ஞர்கள், பெரியவர்கள் மத்தியில் கிராம மட்டக் கிளைகள் புனரமைக்கப்பட்டு, கட்சியின் செயற்பாடு கள் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று பரவலாக இளைஞர்கள் மத்தியிலும், வளர்ந்தவர்கள் மத்தியி லும் ஆர்வமும் அவசிய தேவையும் இருந்தாலும் கூட இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கட்சிக் கிளைகளைப் புனரமைப்பதைத் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது.

தமிழரசுக் கட்சியில் இளைஞர், யுவதிகள் இணைந்து கொள்வதற்கு எந்தத் தடையும் இல்லை. இளைஞர், யுவதிகள் இணைந்து எமது அரசியல் பலத்தை மேலோங்கச் செய்யவேண்டும். இது காலத்தின் தேவையுமாகும்.

கே: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ் தர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமிழர் பிரச்சி னைகள் பற்றி வெளிப்படுத்திய நிலையில், சம்பூர் மக்களையும் சொந்த மண்ணில் மீண்டும் மீள்குடி யேற்றுவது தொடர்பாகக் கதைத்தார்களா? அப்படியா னால் அதுபற்றிக் கூறமுடியுமா?

ப: சம்பூர் மீள்குடியேற்றம் எங்களுடைய அரசியல் தீர்வோடும், இனப்பிரச்சினையோடும் சம்பந்தப்பட்டது. எங்களுக்கு கௌரவமான - நியாயமான தீர்வு கிடைக்கின்றவேளையில் சம்பூர் மற்றும் யாழ். வலிகாமம் வடக்கு போன்ற இடங் களிலும் மக்கள் மீள்குடியேற்றப்படவேண்டும். அது சம்பந்தமாக எங்களுடைய தலைவர்களால் பேச்சு களில் கலந்துகொண்டவர்களிடம் எடுத்து விளக்கப் பட்டது.

குறிப்பாக, இந்திய அரசிடம் இதுபற்றி விளக்க மாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. நீர் வளமும், நில வளமும் கொண்ட பொன் கொழிக்கும் பூமி அப்பகுதி. அந்த இடம் அனல் மின் நிலையத்திற்கு தெரிவுசெய் யப்பட்டுள்ளது. இதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதனைத் தவிர்த்து வேறு பகுதிகளிலுள்ள தரிசு நிலங்களில் அனல்மின் நிலையத்தை அமைக்கலாம். அதைவிடுத்து மக்கள் குடியிருப்புப் பகுதியில் அமைப் பதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

# ளில்
# யம்
# ாதது

ாரும்,
மைப்பின்
ங்கம்



## "அரசு தமிழ் மக்களுக்கு தொடர்ந்து துரோகம் இழைப்பதை நிறுத்தவேண்டும் என்கிறார் முன்னாள் எம்.பி. துரைரெட்ணசிங்கம்"

*நேர்காணல்:* **அ. அச்சுதன்**

**கே:** திருகோணமலை மாவட்டத்திலுள்ள சேருவில பிரதேச சபைக்குட்பட்ட அரியமான் கேணிப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் அத்துமீறிக் குடியேறி பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர் என அப்பகுதி தமிழ் மக்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தனர் என்றும், ஆனால், இதுவரை அது தடுத்து நிறுத்தப்பட வில்லை என்றும் அப்பகுதி தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

**ப:** அரியமான் கேணி, லிங்கபுரம் பகுதியில் தமிழ் மக்கள் கடந்தகால யுத்த சூழ்நிலையில் இடம்பெயர்ந்த நிலையில் மீண்டும் குடியேறாமல் உள்ளனர். இவர்களுக்கான மீள்குடியேற்ற ஒழுங்குகளும் அரசால் செய்யப்படவில்லை. வன பரிபாலன இலாகா இப்பிரதேச வயல் காணிகள், குடியிருப்புக் காணிகள் ஆகியவற்றின் மத்தியில் எல்லைகளை அமைத்து அந்த எல்லைகளுக்குள் எவரும் செல்லக்கூடாது எனத் தடையும் விதித்துள்ளது.

இக்கிராமங்களில் வாழ்ந்த மக்களின் குடியிருப்புக் காணிகளும், வனபரிபாலன இலாகாவுக்குச் சொந்தமாக்கப்பட்டுள்ளன. இதனால் இக் காணிகளை வெட்டி, திருத்தி கஷ்டப்பட்ட மக்கள் மீள்குடியேற முடியாத நிலையும், வயல் நிலங்களை பயிர் செய்யமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இது சம்பந்தமாக எமது கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

**கே:-** திருகோணமலைக்கு வெளிநாட்டு, தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இதனால் கலாசார சீரழிவுகளும் தலைதூக்கிய நிலையில் இன்று சுற்றுலாப் பயணிகளின் முக்கிய ஸ்தலமாக கோணேஸ்வர ஆலயப் பகுதி காணப்படுகின்றது. எனவே, இப்போதாவது ஆலயப் பகுதியை புனித பிரதேசமாக்க நடவடிக்கை எடுப்பது காலத்தின் தேவையாகும். இதுபற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

**ப:-** புனித நகரமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை சைவப்பெருமக்களாலும், தமிழ் அரசியல் தலைமைகளாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கை. விரைவில் புனித நகராக்கப்பட வேண்டும். இது அனைவரினதும் எதிர்பார்ப்பு. இந்த ஆலயத்தின் புனிதத் தன்மையும், கலாசார சீர்கேடுகளும் இடம்பெறாமல் இருப்பதற்கு ஆலய பரிபாலன சபையினர் பல ஆக்க செயற்பாடுகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

**கே:-** கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுமா?

**ப:-** இதைப்பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் கருத்துகளையும் அறிந்து ஒரு தீர்மானத்திற்கு வரும்.

**கே:-** திருகோணமலையிலுள்ள தந்தை செல்வாவின் உருவச்சிலை சேதமாக்கப்பட்டது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**ப:-** திருகோணமலை சிவன்கோயில் வீதியில் அமைக்கப்பட்ட தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்டது அனைவருக்கும் பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் தருகின்றது. மிக விரைவில் புதிய சிலை ஒன்றை நிறுவுவதற்கான முயற்சி எடுக்கப்படும்.

**கே:-** திருகோணமலைக்கு தெற்கே அமைந்துள்ள இலங்கைத் துறைமுகத்துவாரம் என்ற பழம் பெரும் தமிழ்ப் பிரதேசம் இன்று 'லங்கா பட்டிணம்' எனப் பெயர் மாற்றப்பட்டு அங்கு சமுத்திரகிரி விகாரையும் கட்டப்பட்டுள்ள தோடு சிங்கள மக்களின் இருப்பிடமாக மாற்றப்பட்டு வருகின்றது. இவ்விடயம்பற்றி உங்கள்கருத்து என்ன?

**ப:-** இலங்கைத் துறைமுகத்துவாரம் பழம் பெரும் தமிழ்ப் பிரதேசம். தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பிரதேசம். இந்த இடத்தில் பௌத்த ஆலயம் இருப்பதற்கும், இருந்ததுக்கும் எவ்வித ஆதாரங்களும் இல்லை. இந்த நிலையில் இங்கு விகாரை கட்டப்பட்டிருக்கின்றது. இந்த இடத்தில் முருகன் ஆலயமே அமைந்திருக்கின்றது. இதற்கு அப்பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கும் முதியவர்கள் சான்று அளிப்பார்கள்.


**கே:** மாவீரர் நாளன்று அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் மீது சிறைக் காவலர்கள், ஜெயிலர்கள் காட்டுமிராண்டித்தனமாக நடத்திய தாக்குதல் எதனை வெளிப்படுத்துகின்றது? இவ்விடயத்தில் தமிழ்க் கைதிகளின் பாதுகாப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

**ப:** இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தை உடன் கொண்டுசென்றதோடு, அநுராதபுரம் சிறைச்சாலைக்கும் சென்று கைதிகளைப் பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் மட்டுமல்ல, சிறைக்கூடங்களிலும் பாதுகாப்பு இல்லை என்பதை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது. இதேபோன்ற காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் முன்பும் பல தடவைகள் நடந்திருக்கின்றன.

**கே:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசுடன் நடத்தி வருகின்ற பேச்சுகள் வெற்றிதருமா? தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க வழி பிறக்குமா? தமிழர்கள் தொடர்ந்து அரசினால் ஏமாற்றப்படுவார்களா?

**ப:-** நம்பிக்கையின் அடிப்படையில் தான் பேச்சுகள் நடைபெறுகின்றன. அரசு இந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொள்ள வேண்டும் என்பது அரசின் தார்மீகப் பொறுப்பு. இது இக் காலத்தின் கட்டாய தேவையுமாகும். தமிழருக்கு அரசு தொடர்ந்து துரோகம் இழைக்கக் கூடாது.✱

## மனிதரை எடை போட நாம் யார்?



யார் நல்லவன்? யார் கெட்டவன்? இந்தக் கேள்வி எல்லோருக்கும் எழுவது உண்டு. சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகள் எல்லோரும் கெட்டவர்கள். வெளியில் இருக்கும் மற்றவர்கள் நல்லவர்கள் என்று சொல்லலாமா? சிக்கியவர்கள் சிறையில் இருக்கிறார்கள்; சிக்காதுவர்கள் வெளியில் இருக்கும் சிலர் உலகத்தையே சிறைச்சாலையாக ஆக்கி விடுகிறார்கள். உதாரணம்.... தீவிரவாதிகள் தங்கள் வெடிகுண்டு மிரட்டல்களால் வழிபாட்டுத் தலங்கள், விமான நிலையங்கள், சமய விழாக்கள் இங்கெல்லாம் நமது பூரண சுதந்திரத்தைப் பிடுங்கி எறிந்து நம்மைச் சிறைக் கைதிகளாக ஆக்கிவிட்டார்கள்.

இதைவிடக் கொடுமை.... கைதிகளை விடவும் மோசமான குற்ற உணர்வுடைய காவலர்களை இந்த உலகம் கண்டதுண்டு. சில வருடங்கள் முன்பாக ஒரு செய்தி பிடிபட்டிருந்த கைதிகளை இரவில் தப்பிக்கவிட்டு கொள்ளையடிக்க, திருட அனுமதி கொடுத்திருந்தார் ஒரு சிறை அதிகாரி. கொள்ளையில் பங்கு அதிகாரிக்கு உண்டு நம்ப முடிகிறதா? நடந்ததாகச் செய்தி வந்தது. இதில் எவர் நல்லவர்? எவன் கெட்டவர்?

அரைவேக்காட்டு அறிவாளிகள் ஒரு மகாபாரதக் கதையைச் சொல்லி நம் வாயை மூடுவார்கள். இந்த உலகில் நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்று பார்த்து வரும்படி தருமரையும் துரியோதனையும் துரோணர் அனுப்பினார். எல்லோருமே நல்லவர்கள் என்று தருமர் கண்டார். காரணம் அவர் மிக நல்லவர். எல்லோருமே அயோக்கியவர்கள்! என்றான் துரியோதனன். காரணம் மகாபாரதத்தை நன்கு ஆராய்ந்தால் தருமன் ஒன்றும் அவ்வளவு நல்லவன் என்று சொல்ல முடியாது. சூதாடி ..... மனைவியை அடகு வைக்கும் மாபாவி. தம்பி தன் ஆண்மையால் வென்ற திரௌபதியைத் தானும் மணக்க விரும்பிய அல்பத்தனம் உடையவன். அவன் வாக்குமூலம் கொடுத்த செய்தி வில்லிபாரதத்தில் இருக்கிறது. தருமன் சில விஷயங்களில் நல்லவன். சில விஷயங்களில் கெட்டவன்.

துரியோதனன் பேராசைக்காரன்தான். என்றாலும் நண்பன் கர்ணனோடு தன் மனைவி சொக்கட்டான் விளையாடிய போதும், தன் மனைவியை அவன் தொட்டிருந்த போதும் கூட மனைவியையும் நண்பனையும் சந்தேகப்படாதவன். பாண்டவர்கள் பிள்ளைகளாகிய இளம் பாண்டவர்களை வஞ்சனையால் தன் பொருட்டு தன் சேனாதிபதி அஸ்வத்தாமன் கொன்றபோது அந்த வாரிசுகளாக எஞ்சிய அந்த இளம் பிள்ளைகளைக் கொன்றிருக்க வேண்டாமே என்று தழுதழுத்தவன். கல்லுக்குள் ஈரம் போல் அவனுக்குள்ளும் சில நல்ல குணங்கள் இருக்கத்தான் செய்தன.

பொதுவாக நல்லவர் எவரும் இல்லை. கெட்டவர் என்றும் எவனும் இல்லை. இதை விளக்கும் அழகான கதை ஒன்று. அந்த ஊரிலேயே மிகச் சிறந்த இசைக் கலைஞர் ஒருவர் பற்றி, சுவாங்ட்சு என்பவர் குருவிடம் பேசிக் கொண்டிருந்தார். ஒரு விருந்தினர். திடீர் என்று அந்த இசை மேதையை அவன் ஒரு திருட்டுப் பயல்...மகா மோசமானவன்.....ப ாவி என்றெல்லாம் ஏசினார் வந்தவர். உடனே சுவாங்ட்சு தம் மோவாய்க் கட்டையைத் தடவியபடி அடடே..... அவர் ஓர் அற்புதமான புல்லாங்குழல் மேதை ஆயிற்றே..... அவரைப் போல் குழல் இசைக்க ஒருவருமே இல்லையே என்று வாதாடினார். குற்றம் சொன்னவருக்கு என்னவோ போல் ஆயிற்று.

ஆனால் அடுத்த நிமிடமே அங்கே வந்த மற்றொருவர் யாரைப் பற்றி பேச்சு போகிறது என்பதை அறிந்து கொண்டு, சுவாங்ட்சு பக்கத்தைப் பலப்படுத்தும் நினைப்பில் ஆஹா அவர் படிபட்ட சிறந்த கலைஞர் அவரைப் போய் குறை சொல்லுகிறீர்களே.... பிறவி இசைமேதை அவர் என்று புகழ்ந்தார். அவரையே பார்த்துக் கொண்டிருந்த சுவாங்ட்சு மீண்டும் தம் மோவாய்க் கட்டையைத் தடவியபடி அவன் பெரிய திருட்டுப் பயல் அல்லவா? என்றார். குற்றம் சாட்டியவரும், பாரட்டிய வரும் அதிர்ச்சி அடைந்தனர். போயினர். நீங்கள் என்னதான் சொல்ல வருகிறீர்கள். புகழ்ந்தால் இகழுகிறீர்கள். இகழ்ந்தால் புகழுகிறீர்கள் முரண்பாடகப் பேசுகிறீர்களே என்றனர்.

சுவாங்கட்சு சொன்னார் நான் சமப்படுத்துகிறேன். சரிக்கட்டுகிறேன். தராசை எப்போதும் சமநிலையில் வைக்கிறேன். உங்களுக்குப் புரியவில்லையா? அவனை எடை போட நீங்கள் யார்? நான் யார்? நமக்கு அதற்கு என்ன உரிமை இருக்கிறது? எவரும் நல்லவரும் இல்லை. கெட்டவரும் இல்லை. அவன் அவன்தான்..... நீ.....நீ தான்... அவர் வேலையை அவர் பார்ப்பார். நம் வேலையை நாம் பார்ப்போம்....யாரையும் எடை போட வேண்டாம். அது நம் வேலையல்ல.

**சுகி. சிவம்**



யாழ்பாணம் இந்துக் கல்லூரியில் சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் விழாவில் கல்லூரி அதிபரும் முன்னநாள் வவுனியா மாவட்ட சாரணர் ஆணையாளருமான வீ.கணேசராசா சின்னம் சூட்டிய மாணவர்கள் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் நிற்கின்றனர்.

# சாவகச்சேரி சமூக சீர்திருத்த திணைக்கள அலுவலகம் சிறைச்சாலைகளின் நெருக்கடியை இல்லாமல் செய்யும்

## மாவட்ட நீதிபதி மா.கணேசராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

சிறைச்சாலைகளில் இடநெருக்கடி அதிகரித்து கைதிகளுக்கு அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலை காணப்படுகிறது. கைதிகளைப் பராமரிப்பதற்கும் அரசுக்கு அதிக செலவு ஏற்படுகிறது. இதனைத் தவிர்ப்பதற்கு சமூக சீர்திருத்த திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் பெரும் உறுதுணையாக அமையும் என சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா.கணேசராசா தெரிவித்தார்.

சாவகச்சேரி நீதிமன்ற கட்டடத்தில்சமூகசீர்திருத்த திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மாவட்ட நீதிபதி மா.கணேசராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் கீழ் இயங்கும் சமுதாய சீர்திருத்தப் பிரிவுத் திணைக்களத்தை வடமாகாணத்தில் சாவகச்சேரி நீதிமன்றில் திறந்து வைக்கப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சிறுவர்கள், பெண்கள் உட்படப் பல்வேறு பிரிவினர் எமது சமுதாயத்தில், சிறு குற்றச் செயல்களில் தெரிந்தோ தெரியாமலோ ஈடுபடுகிறார்கள். குறிப்பாக சிறுவர்களும், பெண்களும் சிறைக்குள் முடங்குவதால் ஏற்படும் பாதிப்புக்கள் மிகவும் அதிகம். அதனைத் தவிர்த்து சமுதாயத்திலிருந்தே அவர்கள் தண்டனை பெறும் பொறிமுறையை இந்தச் சமுதாய சீர்திருத்தப் பிரிவு உருவாக்கியுள்ளது.

ஒருமுறை இயேசுநாதரிடம் விபசாரப் பெண் ஒருவரை ஒரு கூட்டத்தினர் கூட்டி வந்து அவளைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று முறையிட்டபோது இயேசுநாதர் உங்களில் குற்றமற்றவர்கள் யாரும் இருந்தால் அவளுக்குக் கல்லெறியுங்கள் எனக் கூறினார். ஒருவரும் எறிய முன்வரவில்லை. பின் அந்த விபசாரப் பெண்ணும் யேசுநாதரின் போதனையில் மனம் திருந்தி அவரின் சிஷ்யை ஆனாள்.

ஆகவே சீர்திருத்தம்தான் முக்கியம். தண்டனையின் நோக்கமும் அதுவாகவே இருக்க வேண்டும்- என்றார்.

(எ-207)

# உதைபந்தாட்டத்தின் வளர்ச்சிநிலை மிகவும் அருகிக்கொண்டே செல்கின்றது

## யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தெரிவிப்பு

குருநகர்,டிசெ.19

உதைபந்தாட்ட வீரர்களுக்கு ஒழுக்கத்துடனான பயிற்சி அவசியம் தேவைப்படுகிறது என யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெரிவித்தார்.

குருநகர் சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகம் நடத் திய ஏழு வீரர்கள் பங்குகொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி சென்றோக்ஸ் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

எமது உதைபந்தாட்ட வீரர்கள் தற்போது நாடளாவிய ரீதியில் நடைபெறுகின்ற தேசியப் போட்டிகளிலும் பங்குபற்றக் கூடியவகையில் இன்றைய அரசியல் சூழ்நிலை மாற்றமடைந்துள்ளது. எனவே உதைபந்தாட்டத்தில் ஈடுபடும் விளையாட்டு வீரர்கள் கூடிய பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எமது பிரதேசத்தில் பல உதைபந்தாட்ட விளையாட்டுக் கழகங்கள் உள்ளபோதிலும் யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்டம் வீழ்ச்சியடைந்தே காணப்படுகின்றது.

எனவே யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்ட வீரர்களுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு இவர்கள் பயிற்சி பெறுவதற்கு இத்தகைய உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறுவது அவசியமாகும். இந்த உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தும் விளையாட்டுக் கழகங்கள் பாராட்டப்பட வேண்டியவையாகும்.- என்றார்.

(எ-51)

# ஆலயங்கள் சமயப் பணிகளுடன் நிற்காது சமூகப் பணிகளையும் முன்னெடுக்க வேண்டும்

## நல்லூர் பிரதேச செயலக உதவிச் செயலாளர்

ஆலயங்கள் சமயப் பணிகளுடன் மட்டும் நிற்காது சமூகப் பணிகளையும் முன்னெடுக்க வேண்டும் என நல்லூர் பிரதேச செயலக உதவிச் செயலர் ஆ.சோதிநாதன் தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேச இந்து ஆலயங்களின் நலனோம்பு அமைப்பின் கூட்டம் 10 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தலைமை உரையாற்றும் போதே ஆ.சோதிநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்கள் தமது வாழ்வு நிலைக்கான வசதிகளின்றி கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவ அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

இந்து ஆலயங்களும் சமூகத்தின் நலனுக்கான பணி களில் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். வசதி குறைந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களின் கல்வியில் முக்கிய கவனம் எடுக்க வேண்டும். சில இந்து ஆலயங்களின் உதவியு டன் இந்தப் பணியை எமது பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது. இது போன்ற உதவிகள் மேலும் விரிவடைய வேண்டியுள்ளது.

இடம்பெயர்ந்து வன்னிப் பிரதேசத்தில் இருந்து மீளக் குடியமர்ந்த பிள்ளைகள் பலர் உள்ளனர். அவர்களது கல்விக்கும் உதவ வேண்டும். ஆலயங்களில் காணப்படும் பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல சுமுகமான முடிவை நாங்களே எட்டக் கூடியதாக இணக்கப்பாடுகள் ஏற்பட வேண்டும்.

கலாசார சீர்கேடுகள் குறித்த விடயங்களில் இந்து ஆலயங்கள் முக்கிய கவனம் செலுத்தி எமது இளைய தலைமுறைகளிடையே நல்ல சிந்தனைகளை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியம்.இதற்கான முழு ஒத்துழைப் பை யும் இந்து ஆலயங்களின் நிர்வாகிகள் ஒருங்கிணைந்து வழங்குவதன் மூலம் கலாசார சீரழிவுகளுக்கு முற்றுப்புள்ளியிட உதவ வேண்டும்.- என்றார்.

(எ-7)

## கல்விப் பணிப்பாளர் பதவி உயர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.19

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய செல்லத்துரை உதயகுமார் கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

(எ-253)

## பிள்ளையார் கதை நூலை இலவசமாகப் பெறலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

ஆலயங்களில் மார்கழி மாதம் பிள்ளையார் கதை படிப்பவர்களுக் இலவசமாகப் பிள்ளையார் கதை நூலை காயத்திரி பதிப்பகம் வழங்கி வருகிறது.

வரத பண்டிதர் அருளிய பிள்ளையார் கதை நூலையும், அகத்தியர் முனிவர் அருளிய பிள்ளையார் கதை நூலையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நூல்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 9x4 அங்குல நீளக் கடித உறையில் தமது சுய முகவரியை எழுதி 10 ரூபாய் பெறுமதியுடைய் முத்திரையை ஒட்டி அதனை வேறொரு கடித உறையில் வைத்து வே.நவமோகன் காயத்திரி பப்ளிகேஷன், இல. 9 - 1/1 ஸ்ரீ சரணங்கர வீதி, களுபோவில, தெஹி வளை என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 011 -2727621 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## உடுவில் கலைமகள் இளைஞர் கழகத்தின் புதிய உறுப்பினர் தெரிவு

வலி.வடக்கு,டிசெ.19

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈவினை தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்கான புதிய இளைஞர் சேவைகள் மன்ற அங்குரார்ப்பண நிகழ்வு உடுவில் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் எஸ்.யுவராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலைமகள் இளைஞர் கழகத்தின் புதிய உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

அமைப்பாளர்- ர.கயூரதன், தலைவர் - இ.பார்த்திபன், உப தலைவர் - இ.குமுதா, செயலாளர் - த.நிசாந்தன், உப செயலாளர் - வ.நிகழ்ராஜ், பொருளாளர் - கு.ஜெயகௌரி, விளையாட்டுப் பொறுப்பாளர் - பூ.சுதர்சன், கலாசாரப் பொறுப்பாளர் பூ.சசீலன், தொழில் முயற்சிப் பொறுப்பாளர் - கு.தீபாயினி, ஊடகமும் தகவல் பொறுப்பாளர் - இ.கிருசாயினி, தேசிய சேவைப்பொறுப்பாளர் அ.சுபேசன், கல்வி பயிற்சி தொழில் வழிகாட்டலும் ஆலோசனைப் பொறுப்பாளர்- சி.ஜெயரூபா, ஒழுக்கக்குழு - இ.தர்மினி , ர.சங் கீதா, ர.குகப்பிரியா, ஆலோசனைக் குழு செ.பன்னீர்செல்வம், இ.சுவர்ணதாஸ், அ.அகிலன், அ.அருள்குமார், ச.சிவமலர், கணக்குப் பரிசோதகர் - கு.ஜெயசுதன்.

(எ-86)

# போரின் வடுக்களைச் சுமப்போருக்கு மனிதாபிமானத்துடன் உதவுங்கள்

கடந்த மாத இறுதியில், மாவீரர் தினத்தையொட்டி ஆலயங்களில் மணி யடிப்பதற்குப் படையினர் தடை விதித் திருந்தனர். மாவீரர் தின சுவ ரொட்டிகள் யாழ். நகரப் பகுதியில் ஆங்காங்கே காணப்பட்டன. யாழ். பல்கலைக்கழக மாடிக் கட்டடத்தின் உச்சியில் மாவீரர் தின சுடர் பிரகாச மாக எரிந்தது. இவை மாவீரர் வாரத் தில் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள்.

**நவம்பர் 27 ஆம் திகதி**

ஈழத்தமிழர்களின் விடுதலைக் காகத் தமது இயக்கத்தில் இணைந்து போராடி இன்று உயிர்களை ஆகுதி யாக்கிக் கொண்ட தியாக சீலங்களை நினைவு கூரும் முகமாகப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனால் பிர கடனப்படுத்தப்பட்டதே மாவீரர் தினம்.

மாவீரர்கள், மாவீரர்கள் தான். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. பிரபாகரனைத் தலைவராகக் கொண்டு அவரை நம்பி, தமது உயிர்களை அர்ப் பணித்த அப்பாவிப் போராளிகளின் தியாகங்கள் என்றென்றும் நினைவு கூரப்பட வேண்டும்.

கடந்த ஆண்டு புளொட் இயக்கத் தின் ரொறன்ரோ கிளை, மாவீரர் தினத் தன்று உயிர் நீத்த மாவீரர்களுக்கு அஞ் சலி செலுத்தியது. புளொட் இயக்கத் தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளராக இருந்த மெண்டிஸ் புலிகளால் கொல் லப்பட்டவர். அப்படியிருந்தும் புளொட் இயக்கத்தினர் மாவீரர்களை நினைவு கூர்ந்தமை புளொட் இயக்கத்தினரின் முன் மாதிரியை எடுத்துக் காட்டுகிறது என்று கூறலாம்.

புலிகள் இயக்கம் இப்போது இல் லாத போதும் புலிகளால் பிரகடனப் படுத்தப்பட்ட மாவீரர் தினத்தைக் கொண்டாட வேண்டுமென துடியாய்த் துடிப்பவர்கள் ஏன் புலிகள் இயக்கத் தில் இணைந்து போராடவில்லை என்ற கேள்வி பல வட்டாரங்களில் எழுகிறது.

கரும்புலிகள் சிரித்த முகத்துடன் சாவைத் தழுவிய போதும் போராளிகள் களத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போதும் தாங்கள் சொகுசு வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற் காக வெளி நாடுகளுக்கு ஓடியவர்க ளும் படித்துப் பட்டம் பெற்று உயர் பதவி வகிக்க வேண்டும் என்ற கனவு டன் கல்வி கற்று பல்கலைக்கழகம் புகுந்தவர்களுமே மாவீரர்களுக்காக இப்போது முதலைக் கண்ணீர் வடிக் கின்றனர்.

நவீனரக வாகனங்களில் பயணித்து வந்து பியர், விஸ்கி என்பவற்றைச் குடித்து விட்டு கோட், சூட்டுடனும் காஞ்சிபுரத்துடனும் வந்து மாவீரர் களுக்கு அஞ்சலி செலுத்தும் நாட்டுப் பற்றாளர்களின் தியாகத்தை வர்ணிப்ப தற்குத் தமிழில் வார்த்தைகளே இல்லை.

தாங்கள் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து கொண்டு தாங்கள் வாழும் இடங்களில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி தீபம் ஏற்றுவதால் மாவீரர்களின் கனவு நனவாகப் போகிறதா? அல்லது ஆத்மா சாந்தியடையப் போகிறதா என்பதனை அவர்கள் ஏன் எண்ணிப்பார்ப்பதில்லை?

**மக்களுக்கு உண்டான வடுக்கள்**

வன்னியில் நடைபெற்ற இறுதி யுத் தத்தினால் பாதிக்கப்பட்டு, போரின் வடுக்களைச் சுமந்து திரியும் ஏதிலி களைப் பற்றி இவர்களுக்கு ஏதாவது தெரியுமா?

வன்னியில் முள்ளந்தண்டு பாதிக் கப்பட்ட இளைஞர்கள் 200 பேர் சக்கர நாற்காலியில் தமது வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர்.

போரில் காயமடைந்த முன்னாள் போராளி ஒருவர் சிறுநீர் கழிப்பதற்குக் கூட சிரமப்படுவதாகத் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஊடகவியலாளர் களிடம் தெரிவித்துள்ளார்.

இரு கைகளையும் இரண்டு கண் களையும் தாய், தந்தையரையும் இழந்து அநாதை இல்லத்தில் வாடும் சிறுவர்கள் பலர்.

வறுமை காரணமாக முன்னாள் பெண் போராளி ஒருவர் யாழ்ப்பாணத் தில் தற்கொலை செய்துள்ளார்.

யுத்தத்தில் தாய், தந்தை இருவரை யும் இழந்த அநாதைச் சிறுவர்களின் எண்ணிக்கையோ ஆயிரத்துக்கும் மேல்.

வடக்கு கிழக்கில் வாழும் யுத்த விதவைகளின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சம்.

பல மாவீரர், போராளிக் குடும்பங் கள் வறுமையில் திண்டாடிக் கொண்டி ருக்கின்றன. பியரும் வைனும் அருந்தி விட்டு சொகுசுக் கார்களிலும் பெரிய மோட்டார் சைக்கிள்களிலும் வந்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்து வோர் மேற்சொன்ன தரப்பினருக்கு எவ்வாறு உதவலாம்? எப்படி அவர் களின் துயரைத் துடைக்கலாம்? என்று சிந்திப்பதே மாவீரர்களுக்கு அவர்கள் செலுத்தும் உண்மையான அஞ்சலி.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்க ளின் துயர் துடைப்பதற்கு இவர்கள் பொது வேலைத்திட்டத்தின் கீழ் செயலாற்ற முன்வருவார்களேயானால் நிச்சயம் மாவீரர்களின் ஆத்மா சாந்தி யடையும்.

**மாவீரர் தினம் மாற்றப்பட வேண்டும்**

ஆலயங்களில் மணியடிப்பதற்குக் கூட உரிமை இல்லையா? என்று இப் போது ஓலமிடுவோர் பிரபாகரனின் காலத்தில் சிறி சபாரத்தினத்துக்கோ, பத்மநாபாவுக்கோ எங்காவது ஓரிடத் தில் அஞ்சலி செலுத்துவதற்கு அனு மதி கிடைத்ததா, அல்லது அமிர்த லிங்கத்துக்காவது ஒரு அஞ்சலி

**ந.பரமேஸ்வரன்**

செலுத்த முடிந்ததா என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

மாவீரர் தினம் தமிழீழ தேசிய தின மாகப் பிரகடனப்படுத்தப்பட வேண் டும். அன்றையதினம் சிறீ சபாரத் தினம், பத்மநாபா, இன்பம், சிவகுமாரன் போன்ற அனைவரையும் நினைவு கூர வேண் டும்.

தமிழ் அரசியல்வாதிகள் அனை வரும் ஒன்று சேர்ந்து தமிழ் மக்கள் சார் பில் முதன் முதலில் போராடிய சிவ குமாரனின் நினைவு தினத்தைத் தேசிய வீரர்கள் தினமாகப் பிரகடனப் படுத்த முன்வர வேண்டும். சிவகுமார னின் நினைவு தினத்தன்று ஈழத் தமிழர்களுக்காகத் தமது உயிர்களை அர்ப்பணித்த அனைவரும் நினைவு கூரப்பட வேண்டும். ★


# நெஞ்சைவிட்டகலாத நினைவுத் தெய்வங்கள்

## 6 ஆம் ஆண்டு

தோற்றம்
15 ❋ 12 ❋ 1922



மறைவு
15 ❋ 11 ❋ 2005

அமரர் சபாபதிப்பிள்ளை மாரிமுத்து

## 23 ஆம் ஆண்டு

மலர்வு
11 ❋ 06 ❋ 1927



உதிர்வு
14 ❋ 07 ❋ 1988

திருமதி மாரிமுத்து சின்னம்மா

## 28 ஆம் ஆண்டு

மண்ணில்
26 ❋ 12 ❋ 1952



விண்ணில்
10 ❋ 12 ❋ 1983

அமரர் செல்லையா கந்தசாமி (S.K.T)

## 2 ஆம் ஆண்டு

அன்னை மடியில்
13 ❋ 07 ❋ 1955



ஆண்டவன் அடியில்
10 ❋ 12 ❋ 2009

அமரர் மாரிமுத்து சந்திரராஜா

அன்புடன் எம்மை வளர்த்து அறிவினை எமக்கூட்டி
ஆற்றல்கள் ஆயிரம் ஊட்டி காவல் தெய்வங்களாய் இருந்து
எம்மைக் காத்து வளர்த்த தெய்வங்களை
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
என்றும் மறவோம் உங்களை

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

குடும்பத்தினர்.

(11807)(5,6,7)

## பாராட்டுடன் மனமார்ந்த வாழ்த்து



17.12.2011 சனிக்கிழமை கொழும்பு, ஜோன் டீ.சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் "கலாபூஷணம்" விருது பெற்ற வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தின் மகாசபை உறுப்பினர் அன்புக்குரிய ஆன்மீகச் சொற்பொழிவாளர், சைவப்புலவர், சிவநெறிக் கலாநிதி **இராசையா ஸ்ரீதரன்** அவர்களை மனதார வாழ்த்துவதோடு மேலும் பல சிறப்புகள் பெற்று அவரது இசையுடன் கலந்த சைவத், தமிழ்த் தொண்டு மேலோங்கவும் எல்லா வளங்களோடும் நீடூழி வாழவும் காமாட்சி அம்பாளைப் பிரார்த்தித்து மகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம். (11826)(5,6,7) தர்மகர்த்தா சபையினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி பா.கீதாஞ்சலி அவர்களின் அன்புத் தந்தை

*நல்லதம்பி பாலசுப்பிரமணியம்*

(முகாமையாளர்-கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்-பூநகரி), 16.12.2011 அன்று காலமாகிவிட்டார். அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(11747)(5,6,7) ஆசிரியர் கழகம், கிளி/ஜெயபுரம் ம.வி.

## மரண அறிவித்தல்

### பேதுறு அந்தோனிப்பிள்ளை

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மன்னாரைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பேதுறு அந்தோனிப்பிள்ளை (17.12.2011) சனிக்கிழமை மன்னாரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்துரை பேதுறு தம்பதியரின் மகனும், மேரி பிரகாசி (சரசு) அவர்களின் அன்புக் கணவரும், அன்ரன் பெஞ்சலோ (ஜீவா-ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி), அ.பொணிபஸ் (சுவிஸ்), அ.பேணாட் (பிரான்ஸ்), அ.லெஸ்லி (கனடா), மேரி ஜக்குலின் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.12.2011) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் மன்னாரில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63/1, மவுண்கார் மேல் வீதி, யாழ்ப்பாணம். (11830)(5,6,7)

தகவல்: அன்ரன் பெஞ்சலோ (மகன்).

# இத்தாலி பிரதமருக்கு துப்பாக்கி குண்டு பொதி

ரோம், டிசெ. 19

இத்தாலி பிரதமர் மரியோ மோந்தி. இவரது அலுவலகத்துக்கு பொதியொன்று வந்தது. அதை அவரது அலுவலக ஊழியர்கள் பிரித்துப்பார்த்தனர். அதில் துப்பாக்கிக் குண்டுகள் இருந்தன. மிரட்டல் கடிதமும் இருந்தது. அதில், அரசு கொண்டுவந்துள்ள கடுமையான சட்டதிட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த துப்பாக்கிக் குண்டு பொதியை ஆயுத புரட்சி இயக்கம் என்ற தீவிரவாத அமைப்பு அனுப்பியுள்ளது. இத்தாலியில் ஓய்வூதியத் திட்டத்தை இரத்துச்செய்து சமீபத்தில் சட்டம் இயற்றப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த மிரட்டல் பொதியை அனுப்பியிருக்கலாம் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னர் இந்தத் தீவிரவாத அமைப்பு குறித்து எந்தவிதத் தகவலும் இல்லை எனவும் கூறியுள்ளனர். இது போன்ற மிரட்டல் கடிதத்துடன் கூடிய துப்பாக்கிக் குண்டு பொதிகள் முன்னாள் பிரதமர் பெர்லஸ் கோனி, ஜனநாயகக் கட்சித் தலைவர் பியர் லூகி பெர்கானி, பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

# பாகிஸ்தான் இராணுவத்தில் பிளவு: பிரதமர் கிலானி மறுப்பு

பாகிஸ்தான் இராணுவத்தில் பிளவு ஏற்பட்டுள்ளது என்றும் விரைவில் இராணுவப் புரட்சி வெடிக்கும் என்றும் வதந்தி பரவியுள்ளது. இதை பிரதமர் கிலானி திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

பாகிஸ்தான் இராணுவம் சக்திவாய்ந்தது. அதில் பிளவு எதுவும் ஏற்படவில்லை. இந்தச் செய்தியை யாரும் நம்பவேண்டாம் என பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உடல்நிலை பாதிக்கப்பட்டு துபாய் வைத்தியசாலையில் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி சிகிச்சைபெற்று வருகிறார். பாகிஸ்தான் அரசமைப்புச் சட்டம் 47ஆவது பிரிவின் கீழ், உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் தகுதியற்றிருக்கும் அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்ற கருத்து நிலவுகிறது.

இதுகுறித்து பேட்டியளித்த ஜனாதிபதி சர்தாரி, "நான் தற்போது நல்ல உடல்நிலையில் இருக்கிறேன். எனவே, என்னை பதவியிலிருந்து நீக்கமுடியாது. அரசமைப்புச் சட்டத்தை வலுக்கட்டாயமாக என் மீது திணித்தால் அதை நான் நிராகரிப்பேன்'' என்றார்.

## ஆள்சேர்ப்பு வெற்றிடம் - 01

பொதுமுகாமையாளர் (ஒப்பந்த அடிப்படை),
பூநகரி க.தொ.கூ.ச. சமாசம்,
ஜெயபுரம்.

மேற்படி பதவிக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 24.12.2011 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சமாசத்தின் தலைமைக் காரியாலயம், ஜெயபுரத்தில் நடைபெறும். தகுதியுடையவர்கள் ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் நேரில் சமுகமளிக்கவும்.

தலைவர்,
பா.முகுந்தன். (11745)(5,6,7) **T.P.: 0243248395**

## இரண்டாம் ஆண்டு நினைவு தினம்

அன்னை மடியில்
15 ❋ 12 ❋ 1935



அம்மன் அடியில்
09 ❋ 01 ❋ 2010

### *அமரர் செல்லத்துரை விநாயகமூர்த்தி*

(3 ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி)

திதி: மார்கழி மாத அபரபக்க தசமி, **(19.12.2011)**

அன்புத் தெய்வமே ! எங்கள் ஐயா
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
இன்றுடன் ஈராண்டுகள் ஆனதுவோ?
உங்கள் நினைவினிலே
எங்கள் உள்ளங்கள் அழுகின்றன
எங்கே ஐயா சென்றீர்கள்? ஏங்கித் தவிக்கின்றோம்
அல்லையூர் மூன்றுமுடி முத்துமாரி அம்மன் அடியில்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

3 ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி மேற்கு,
அல்லைப்பிட்டி. (11766)(5,6,7)

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் ஸ்தாபகர்களின் வரிசையில் தங்களையும் சட்டத்தரணிகளாக இணைத்துக் கொண்ட எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய அங்கத்தவருமான கனகரத்தினம் சுகாஷ், முன்னாள் அங்கத்தவர் தில்லைநாதன் அர்சுனா ஆகியோரை சங்கத்தின் சார்பில் பாராட்டுகின்றோம்.



*கனகரத்தினம் சுகாஷ்*



*தில்லைநாதன் அர்சுனா*

இவர்கள் 13.12.2011 அன்று உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற சத்தியப்பிரமாண வைபவத்தில் சட்டத்தரணிகளாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டதையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்கள் மேலும் தம் கல்வியில் உயர்வுகளையும் பல சாதனைகளையும் பெற்று எமது கழகத்துக்கும் நாட்டுக்கும் நிறைவான சேவையை வழங்க வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
இந்து வாலிபர் சங்கம், வட்டுக்கோட்டை.

வட்டு இந்து வாலிபர் சங்கம்,
கனடாக் கிளை. (C/6973)(5,6,7)

வட்டு இந்து வாலிபர் சங்கம்,
கொழும்புக் கிளை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10 ❖ 05 ❖ 1953



மறைவு
20 ❖ 11 ❖ 2011

### *அமரர் வேலாயுதம் பொன்னுத்துரை*

(விற்பனைத் திணைக்கள ஓய்வூதியர்)

அன்புடனும் பாசத்துடனும் எம்மை
அரவணைத்த எம் அன்பு அப்பாவே
எதிர்பாராமல் மீளாத்துயில் கொண்டாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகலவில்லை.

கடந்த 20.11.2011 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் நாளை (20.12.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

மாவியந்திடல்,
புலோலி தெற்கு, புலோலி. (C/6972)(5,6,7) குடும்பத்தினர்.

மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD, Vedioகள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL

நத்தார் புதுவருட விசேட சலுகை!!!

மிக விரைவாக
உங்கள் உறவுகளின்
இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

உலக நாடுகளுக்கு மிகக் குறைந்த கட்டணமாக 600/=இருந்த அறவிடப் படுகின்றது

220க்கு மேற்பட்ட நாடுகளுக்கு
மிக குறைந்த கட்டணத்தில்
உங்கள் உறவுகளுக்கு
தேவையானஅனைத்து
பொருட்களை அனுப்பிட



DHL WORLDWIDE EXPRESS

திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.
2b நெல்சன் பிளேஸ், கொழும்பு - 6

# அசாதாரண சூழலிலும் இடைவிடாது சேவையாற்றிய கொழும்புத்துறை சென். யோசப் முதியோர் இல்லம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இதுவரை பல்லாயிரம் முதியவர்களுக்கு நிழல் தரும் விருட்சமாக கொழும்புத்துறை சென். யோசப் முதியோர் இல்லம் அபயம் கொடுத்து கைவிடப்பட்டவர்களை கைதூக்கி விட நாம் இருக்கிறோம் என்று நம்பிக்கை ஊட்டி அந்திமகால தேவைகளை நிறைவேற்றியுள்ளது.

நோய் வாய்ப்படுபவர்களுக்கு தாராளமாக மருத்துவ வசதிகள் வழங்கப் படுகின்றன. யாழ். போதனா வைத்திய சாலையில் பணி யாற்றும் சில மருத்துவர்களும் திருச்சிலுவை கன்னியர் சுகநல நிலைய மருத்துவர்களும் அவ்வப்போது இங்குள்ளவர்களின் தேக ஆரோக் கியத்தைப் பரிசோதித்து சிகிச்சை அளித்து வருகின்றனர். இங்கு தங்கியிருப்பவர்கள் இறக்கும் பட்சத்தில் உரியவர்கள் பொறுப்பேற்க முன்வந்தால் அவர் களிடம் ஒப்படைக்கப்படும். சில உறவினர்கள் வந்து இங்கேயே சடங்குகளை நிறைவேற்றி அடக்கம் செய்வர். அவரவர் சமய முறைகளில் இறுதிக் கிரியைகள் நிறை வேற்றப்படும். எவரும் இல்லையெனில் முதியோர் இல்லத்தின் செலவில் அடக்கம் செய்யப்படும். மரியாள் சேமக் காலையில் இதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற போரின்போது இடப்பெயர்வுகளின்போது பிள்ளைகள், உறவினர்களைஇழந்து தனிமையாக்கப்பட்டவர்கள், பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட பண வசதியிருந்தும் தகுந்த பராமரிப்பு வழங்க




யாருமற்ற வயோதிபர் கள், கணவனால் மனைவியால் பிள்ளைகளால் கைவிடப்பட்டோர், புறக்கணிக்கப்பட்டவர்கள் கவனித்துக் கொள்ள ஆள்களற்ற ஓய்வூதியர்கள், பிள்ளைகளுடன் ஒத்துப்போகாத தன்மையினர் எனப் பல காரணங்களால் இங்கே தஞ்சமடைந்து பல வயோதிபர்கள் அன்பையும் ஆறுதலையும் பராமரிப்பையும் பெற்று வருகின்றனர்.

பெற்று வளர்த்து தம் பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து பல கனவுகளுடன் வாழ்ந்து தமது வம்சத்தை செழிப்படைய வைத்தவர்கள் முதுமையில் தனி நபர்களாக முதியோர் இல்லங்களில் வாழும் துர்ப்பாக்கியநிலை தொடர்ந்து செல்வது எமது கலாசாரத்திற்கும், பாசத்திற்கும், மனிதநேயத்திற்கும் சவாலாக விளங்குகிறது. ஒவ்வொரு வரும் தமது குடும்பம் சார்ந்த முதியோரை தம்முடனே வைத்துப் பேணும் மன நிலையைக் கடைப்பிடித்தால் முதியோர் இல்லங்களின் தேவை ஏற்படாது.

இந்த முதியோர் இல்லத்தை நடத்தி வரும் திருச் சிலுவைக் கன்னியர்கள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளில் தாம் பராமரித்து வந்த முதியோரை பாதுகாப் பதில் பல இடர்களை யும் சவால்களையும் எதிர்கொண்டனர். 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது இங்கே 100பேர் வரையில் இருந்தனர். கரையோரப் பகுதியில் செல் வீச்சு அதிகரிக்க இடம்பெயர நேரிட்டது.

குடாநாட்டு மக்கள் தமது குடும்பத்தையும் சொத்துக்களையும் பாதுகாக்க போராடிக் கொண்டிருந்த அந்த இடப்பெயர்வு நேரங் களில் முதியோர் இல்ல நிர்வாகிகள் தாம் பொறுப்பேற்ற முதுமைச் சொத்துக்களை பாதுகாப்பதில் பெரும் சிரமங் களை எதிர் நோக்கினர். முதியோர் இல்லம் தேவரையாளியில் உள்ள பாடசாலை ஒன்றில் தற்காலிகமாக இயங்கியது.

அங்கிருப்பது உசிதமல்ல என்றுணர்ந்த அருட்சகோதரிகள் நோயாளிகள், நடக்க முடியாதவர்கள் எனப் பலதரப்பட்டவர் களையும் ஊரியான் பாதையால் கொண்டு சென்று மாங்குளம் கரிப்பட்ட முறிப்பு பாடசாலை யில் தஞ்சமடைந்தனர். சில மாதங்களின் பின்னர் யாழ். ஆயரின் முயற்சியால் அனுமதி பெற்று திருகோணமலை உப்பு வெளியில் உள்ள திருச் சிலுவை கன்னி யர் மடத்தை அடைந்தனர். இந்த இடப் பெயர்வால் ஏற்பட்ட படுக்கை, மருத்துவ உணவு, உளவியல் பாதிப்புக்கள் காரணமாக 40 பேர் வரை இறக்க நேரிட்ட தாக தற்போதைய பொறுப்பாளர் அருட் சகோதரி பெனிற்றா தெரிவித்தார்.

குடாநாட்டிற்கு மக்கள் திரும்பி வந்த பின்னர் மீண்டும் இந்த முதியோர் காப்பகம் திறக்கப்பட்ட போதிலும் இங்கிருந்து கொண்டு சென்றவர்களில் எஞ்சியோர் உப்புவெளியிலேயே வைத்து பராமரிக்கப்பட்டனர். 'கைவிடப்பட்டோருக்கு இறைவனே துணை' என்பதுபோல் கரையோரப் பகுதியில் தொடர் செல் வீச்சுகள் இடம்பெற்ற போதும் எந்தவித சேதமுமின்றி கட்டடங்கள் காப்பாற்றப் பட்டமை ஆச்சரியமானதாகும்.

**யேசுதாஸ்**

சிறிது சிறிதாக முதியோர்கள் இணைந்து கொள்ள 60 பேர் வரையில் காணப்பட்ட போது மீண்டும் 2000ஆம் ஆண்டுகளில் இடப்பெயர்வு ஏற்பட்டு கார்மேல்சபைக் கன்னியர் மடம், சில்லாலை கதிரை மாதா ஆலயப் பகுதி, பண்டத்தரிப்புதியான இல்லம் போன்ற இடங்களில் இயங்கியது.

(தொடர்ச்சி)

இதோ வெளிவந்து விட்டது
புலமைப் பரிசில் பரீட்சைக்கான
இவ்வார வழிகாட்டி



திங்கள் தோறும் வெளிவரும் முதல்தரக் கையேடு
புலமைச்சுடர்
2012 ஆம் ஆண்டு (தரம் 4, 5) மாணவர்களுக்கான
ஒரு வாரகால ஆக்கங்களைத் தாங்கி வரும் சிறப்பு வழிகாட்டி
முற்றிலும் புதிய பாடத்திட்டத்தைத் தழுவியது 12
பக்கங்கள் : 12    19.12.2011 - 25.12.2011    முதலீடு : 15/=

கையேட்டை அலங்கரிப்பவை
- தரம் 04 மாணவர்களுக்கான வினாத்தாள் II
- கற்றல் குறிப்புக்கள்
  தமிழ்மொழி
  கணிதம்
  சுற்றாடல்
  ஆங்கிலம்
  சிங்களம்
- பகுதி I வினாக்களுக்கு விடை காணும் விளக்கங்கள்
- கட்டுரைக்களம்
- பெற்றோருக்கான ஆலோசனைகள்
- மூளைக்கு வேலை
- கடந்தகால வினாக்கள்
- வாரம் ஒரு பிராணி
- பயிற்சிகள்






சகல பத்திரிகை முகவர்களிடமும்,
புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 071 6850005 , 071 4273035.

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 13 | | 20 |
| 12 | | 12 |
| 1932 | | 2008 |



*அமரர் சபாபதிப்பிள்ளை கனகரத்தினம்*
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)
(திதி: 19.12.2011)

ஆண்டுகள் மூன்று மாண்டாலும்
ஆசை அப்பா உங்கள் முகம்
நேசமுடன் அழைக்கும் பாசக்குரல்
அன்பான அழைப்பு யாவுமெம்மை
சுற்றிவர நாம் சுடரேற்றி வழிபட்டோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

கோகுல வீதி, கோண்டாவில்.    குடும்பத்தினர்.

**நினைவுகளின் நிழலில்**
**ஆண்டுகள் ஏழு**



தோற்றம் 21.10.1991    மறைவு 19.12.2004

**த. ஈவிலின் சரோமினி**
என் ஆன்மா இறைவனில் மகிழ்ச்சி கொள்கின்றது.
வித்தைகள் பல காட்டி
விந்தையுடன் வாழ்ந்தாயே
வியூகங்கள் பல ஆகிலும் விலகவில்லை
உன் நினைவுகளும் நிழல்களும்

பழைய பொலிஸ் ஸ்ரேசன் லேன்.
கோப்பாய் தெற்கு.    (11774)(3.6.7)    அப்பா, அம்மா, தம்பி.

உதயன்
19 டிசெம்பர் 2011 திங்கட்கிழமை

# இலங்கைக்கு எதிராகச் செயற்பட்ட 70 பேருக்கு பொலிஸார் பிடிவிறாந்து

கொழும்பு,டிசெ.19

இலங்கைக்கு எதிராகச் செயற்பட்ட 70 பேருக்கு சர்வதேச பொலிஸார் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளனர் என்று சிங்கள நாழிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களில் 29 பேர் பயங்கரவாதச் சம்பவங்களுடன் தொடர்புடைய விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல கோடி ரூபா மோசடியில் ஈடுபட்ட கயிப் குதுப்தீனின் பெயரும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு அரச சார் பற்ற நிறுவனமொன்றின் உப தலைவராக கடமையாற்றிய வேலுப்பிள்ளை ரேமன் என்பவருக்கு எதிராகவும் பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகத்தில் ஈடுபட்ட ஐந்து பெண்கள், இணையத் தளமொன்றை நடத்திய நபர் ஆகியோரது பெயர்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முதல் தடவையாக பாதாள உலகக் குழு வைச் சேர்ந்த ஒருவரின் பெயரையும் இதில் உள்ளடக்கியுள்ளதாக அந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (ச)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் கொடூரமாக வெட்டிக்கொலை

## எப்பாவெலயில் மீண்டும் அகோரம்

கொழும்பு,டிசெ.19

எப்பாவெல பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ள அகோர சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மூன்று பெண்கள் மற்றும் ஒரு இளைஞன் ஆகியோர் இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் தாய் (வயது-49), அவருடைய சகோதரி (55 வயது), அவரது மகள் (வயது-23) , மகளின் கணவன் (வயது -23) ஆகிய நால்வருமே வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

எப்பாவெலயில் அண்மையில் இரு யுவதிகளும் ஒரு இளைஞனும் தூக்கிட்டு மரணமான நிலையில் சடலமாக மீட்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. இந்தச்சம்பவம்தொடர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச)

# இந்திய கைத்தொழில் நிறுவனங்களால் பெரும் பாதிப்பை எதிர்கொள்ளும் இலங்கை

கொழும்பு,டிசெ.19

இந்தியாவின் பல்வேறு கைத்தொழில் நிறுவனங்களிலிருந்தும் வெளியாகும் விஷ வாயுக்களினால் இலங்கையின் மலைப் பிரதேசங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சப்ரகமுவ பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் தக வல் வெளியிடப்பட்டுள்ளது.

ஹோர்டன் சமவெளி உள்ளிட்ட நாட்டின் மலைப் பிரதேசங்கள் மாசடைவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைக் கருத்தில்கொண்டு உடனடியாக இராஜதந்திர ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் வாயு மண்டலம் விஷ வாயுக்களால் நிரம்பியுள்ளதாக சப்ரகமுவ பல்கலைக்கழகப் பேராசி ரியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமை மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் போ.உல்லாசனன் அவர்களின் அன்புத்தந்தை T.N. போஜன் J.P அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம், யா/யாழ்.மத்திய கல்லூரி.

(11875)(3.6.7)

## கண்ணீர் அஞ்சலி



T.N. போஜன் (J.P)

[உதவி பிரதம சாரண ஆணையாளர்]

எம்மை எல்லாம் சாரணியத்தில் கலங்கரை விளக்காக நின்று வழிகாட்டிய எமது தலைவரின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட சாரணர் கிளை சங்கம், யாழ்ப்பாணம்.

(11817)(3.7.6)

# சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

கொழும்பு,டிசெ.19

ஹற்றன் பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 8 சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஹற்றன் - நோர்வூட் சாஞ்சிமலை பிரதேசத்திலே இவர்கள் சட்டவிரோத முறையில் இரத்தினக் கல் அகழ்வில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

மஸ்கெலிய மேலதிக பொலிஸ் அதிகாரியின் ஆலோசனையின்படி விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டதுடன், இரத்தினக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)


## யூனியன் அஷ்யூரன்ஸ்
உங்கள் நாளைய நம்பிக்கை, இன்றே.

## பதவி வெற்றிடம்
(யூனியன் அஸ்யூரன்ஸ் யாழ். பிராந்திய காரியாலயம்)

### இலங்கையில் முதலிடத்திலிருக்கும் ஜோன்ஸ் கீல்ஸ் சோல்டிங்கின் இணை நிறுவனமான

யூனியன் அஸ்யூரன்ஸ் யாழ். பிராந்திய அலுவலகத்தில் கீழ்க் குறிப்பிட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன. காப்புறுதித் துறையில் அனுபவமும், திறமையும் மற்றும் கடந்த காலங்களில் இத்துறையில் தமது பங்களிப்பை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தியோருக்கு தங்கள் கனவுகள் யாவும் நிறைவாகும் வண்ணம் உரிய பதவி வெற்றிடங்கள் காத்திருக்கின்றன. ஆகவே ஆண்கள், பெண்கள் இருபாலாரும் உடனடியாக தங்களது சுயவிவரக்கோவை மற்றும் 2 புகைப்பட பிரதி (முத்திரை அளவு Stamp size) களுடன் கீழ்க் காணும் முகவரிக்கு 10 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

குறிப்பு: **யாழ்.மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.**

Designation 1. Sales Manager / Assistant Sales Manager.
Designation 2. Unite Development Managers.
Designation 3. Agency development officers.

1. காப்புறுதித்துறையில் முகாமையாளர் நிலையில் உள்ளவர்கள் மற்றும் குறைந்தது 5 வருட அனுபவத்தினை கொண்டவர்கள் விரும்பத்தக்கது. வயதெல்லை 28-40.
2. காப்புறுதித்துறையில் முகாமையாளர் நிலையில் உள்ளவர்கள் மற்றும் குறைந்தது 3 வருட அனுபவத்தினைக்கொண்டவர்கள் விரும்பத்தக்கது. வயதெல்லை. 28-40
3. காப்புறுதி துறையில் வேலைபார்க்க விரும்பும் இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.( காப்புறுதித்துறை சார்ந்த அனுபவம் விரும்பத்தக்கது.) மேல்குறிப்பிட்ட விண்ணப்பதாரர்களுக்கு ( Car loan. EPF.,ETF,Permanent Salary மற்றும் மேலும் பல சலுகைகள் அளிக்கப்படும்.

**கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் மேலும் பல சலுகைகள் காத்திருக்கின்றன.**

*"யாழ். பிராந்திய முகாமையாளர்",*
*யூனியன் அஸ்யூரன்ஸ்*
*139, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*(சி/6967)(3.6.7)*


# இறைச்சிக்காக பசுமாடு கடத்தியோர் பொலிஸைக் கண்டதும் தப்பியோட்டம்

கொழும்பு,டிசெ.19

இறைச்சிக்காக சட்ட விரோதமான முறை யில் கடத்திச் செல்லப்பட்ட 10 பசுமாடுகளை கண்டி - மஹியங்கனை வீதியில் வைத்து பொலிஸார் மீட்டுள்ளனர். வான் ஒன்றில் ஏற்றிச்செல்லப்பட்டுவந்த இந்த பசு மாடுகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை பொலிஸாரால் மீட்கப் பட்டன.

நீண்ட நாள்களாக நடைபெற்று வந்த இந்த வியாபாரம் குறித்து தகவல் அறிந்த பொலிஸார் நேற்று அதிகாலை சுற்றிவளைப்பை மேற்கொண்ட போது வானில் இருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

கண்டி - மடவலவ பிரதேசத்தில் விற்பனைக்கென இந்தப் பசு மாடுகள் கடத்திச் செல்லப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.(ச)

# நகைகளைத் திருடிய நபர் கைது

கொழும்பு,டிசெ.19

வீடுகள் பலவற்றில் 20 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிய நபரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்துள்ளதுடன் அவரிடமிருந்து 12 ஆயிரம் ரூபாய் பணமும், 10 டொலர்களையும் கைப்பற்றியுள்ளதாக நீர் கொழும்பு விசேட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி நிசாந்த பெர் னாண்டோ தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடிவர் என்றும் இதுவரை 10 வீடுகளில் 20 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடியுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

## கண்ணீர் அஞ்சலி



T.N போஜன் (J.P)

[உதவி பிரதம சாரண ஆணையாளர்– இலங்கை சாரணர் சங்கம்]

அவர்களின் பிரிவினால் துயர் அடைவதுடன் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்குச் சாரண சமூகம் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### பொன்னையா சகுந்தலா

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேம்பஸ்தான் விடுதி, 306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பொன்னையா சகுந்தலா (வேம்பஸ்தான் விடுதி மேற்பார்வையாளர்) 17.12.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கமலா, கனகநாயகம், இந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்வராசாவின் (சாளி மாஸ்ரர்) அன்பு மைத்துனியும், செல்வவதனா,கமலராசன், ரஞ்சினி,சுபாசினி, சோதிஜீ, ரதி, கரிச்சந்திரா ஆகியோரின் அன்பு சிறியதாயும் றெபேக்கா, மைக்கல், ஆஸ்லி, வாகினி, சிவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (19.12.2011) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு 181/1, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*181/1, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.*
*செ.செல்வவதனா பெறாமகள்.*

### மீனவர்கள் மீது தாக்குதல் தொடர்ந்தால்

# இலங்கை மீது இந்தியா போர் தொடுக்கத் தயங்கக் கூடாது

### மத்திய அரசுக்கு பா.ஜ.க. கோரிக்கை



சென்னை, டிசெ.19

தமிழக மீனவர்களின் மீதான தாக்குதலை இலங்கைக் கடற்படை தொடர்ந்து நடத்தி வந்தால் இலங்கை மீது போர் தொடுக்க இந்தியா தயக்கம் காட்டக்கூடாது என்று பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள மேட்டுப்பாளையத்தில், நேற்றுமுன்தினம் பாரதீய ஜனதாக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பொன். ராதாகிருஷ்ணன் பேசியதாவது:

தமிழக மீனவர்களின் உரிமையை பெற்றுத்தர மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், இலங்கை கடற்படையினரின் அத்து மீறல் தொடரும் பட்சத்தில், இலங்கை மீது போர் தொடுக்க இந்தியா தயங்கக் கூடாது.

தமிழக பக்தர்கள் சபரிமலைக்குச் செல்லக் கூடாது என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கூறியது கண்டனத்திற்குரியது என்றும், இதற்காக, அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (வ)




ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற மூவரின் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யக்கோரி மரண தண்டனைக்கு எதிரான மனநிலை உள்ளவர்களின் ஆதரவு திரட்டும் எண்ணத்தில் 92822 21212 என்ற எண்ணுக்கு மிஸ் கோல் கொடுக்கும் நூதன பிரசாரத்தை திரைப்படத் துறையினர் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தனர்.

## ஐயப்ப பக்தர்கள் மீது மீண்டும் தாக்குதல்

கேரள மாநிலம் திருச்சூர் அருகே சபரிமலைக்குச் சென்ற ஐயப்ப பக்தர்கள் மீது மீண்டும் நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் 22 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இரண்டு பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## தாஜ்மஹாலை உளவு பார்த்த தனியார் ஹெலிகொப்டர்

உலக அதிசயங்களில் ஒன்றான இந்தியாவில் உள்ள தாஜ்மஹாலை தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று உளவு பார்த்ததாக இந்திய தொல்பொருள் ஆய்வு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மஹாலை 11 தடவைகள் வட்டமடித்து உளவு பார்த்ததாக இந்திய தொல்பொருள் ஆய்வு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆக்ராவில் உள்ள தாஜ்கன்ஸ் காவல் நிலையத்தில் முறைப்பாடு வந்துள்ளதாக அந்த ஆய்வு தெரிவித்துள்ளது. ஆனால் எமக்கு தாஜ்மஹாலை, தனியார் நிறுவன ஹெலிகொப்டர் உளவு பார்த்தது தொடர்பாக தகவல் எதுவும் வரவில்லை என்று மத்திய தொழிற்துறை பாதுகாப்புப் படை அதிகாரி ஏ.கே.சிங் தெரிவித்துள்ளார். (வ)

## கூடங்குளம் அணுமின் நிலையத்தில் விரைவில் முதல் அணு உலை செயற்படும்

### ரஷ்யாவில் மன்மோகன் உறுதி

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் முதல் அணு உலை இன்னும் சில வாரங்களிலும், இரண்டாவது அணு உலை அடுத்த 6 மாதங்களுக்குள்ளாகவும் செயற்படத் தொடங்கும் என்று பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்தார்.

ரஷ்யாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மன்மோகன்சிங், மாஸ்கோவில் ரஷ்ய அதிபர் டிமிட்ரி மெத்வதேவைச் சந்தித்து 5 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளார். அதன் பின்னர் செய்தியாளர்ளைச் சந்தித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

கூடங்குளத்தில் நிறுவப்பட்டுள்ள 2 நவீன அணுஉலைகளும் தயார் நிலையில் உள்ளன. பாதுகாப்பு, வாழ்வாதாரம் குறித்த அச்சத்தால் அந்தப் பகுதியில் நடைபெறும் போராட்டம் தற்காலிகமானதே. இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண முடியும் என்று நம்புகிறோம். - என்றார் அவர்.

இதேவேளை கூடங்குளத்தில் 3 மற்றும் 4 ஆவது அணு உலைகளை நிறுவுவது குறித்து ஒப்பந்தம் எதுவும் கையெழுத்திடப் படவில்லை. பிரதமரின் அறிவிப்பு, கூடங் குளம் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களிடையே மேலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (வ)

## தமிழருக்கு எதிரான பிரச்சினையில் மௌனமாகவுள்ள மத்திய அரசு

### சாடுகிறார் பாண்டியன்



ராஜபாளையம், டிசெ.19

தமிழர்களுக்கு எதிரான பிரச்சினைகளில் மத்திய அரசு மௌனம் சாதிக் கிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம், ராஜபாளை யத்தில் இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் தா.பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கட்சியின் 22 ஆவது மாநில மாநாடு எதிர்வரும் பெப்ரவரி 17 ஆம் திகதி ஆரம்பமாகி மூன்று நாள்கள் ராஜபாளை யத்தில் நடைபெற உள்ளது. இதில் ஏ.பி.பரதன், டி.ராஜா உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். மத்திய அரசு பதவியை விட்டு விலகாமல் இருக்கவே விரும்புகிறது. தமிழர்கள் பல வழிகளில் அல்லல் படுகின்றனர்.

கர்நாடகா, ஆந்திரா, இலங்கை, தற்போது கேரளா என்று தமிழர்களுக்கு எதிராகப் பிரச்சினைகள் ஏற்பட்ட போதெல்லாம் மத்திய அரசு தலையிடாமல் மௌனம் சாதிக்கிறது.

முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தற்போது மோதல் ஏற்பட்டுள்ளது. மாநிலப் பிரச்சினைகளை மத்திய அரசு வேடிக்கை பார்ப்பதால் பொது மக்கள் துன்பப்படுகின்றனர். தமிழ் நாட்டின் முதல் எதிரி மத்திய அரசுதான். கேரளாவை நம்ப முடியாது. முல்லைப் பெரியாறு பிரச்சினையில் அரசியல் கட்சிகள் சுய நலத்துடன் போராட்டம் நடத்துகின்றனர். தாக்குதல் இரண்டு பக்கமும் இடம் பெறுகின்றது. தமிழகம் பொறுமையாக உள்ளது. - என்றார் அவர். (வ)

## சென்னைக்கு வந்த ஹஸாரேக்கு எதிராகக் கறுப்புக் கொடி



சென்னை, டிசெ.19

ஊழலுக்கு எதிரான இயக்கம் ஆரம்பித்து பல்வேறு போராட்டங்களை நடத்த ஆரம்பித்த பின்னர் சென்னைக்கு முதல் முறையாக வந்த அன்னா ஹசாரேவுக்கு பெரியார் தி.க., 17 இயக்கம், மக்கள் இயக்கம் உள்ளிட்டவை கறுப்புக் கொடி மூலம் தமது எதிர்ப்பைத் தெரிவித்தன. இதனால் அன்னா ஆதரவாளர்கள் பேரதிர்ச்சியடைந்தனர்.

சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே நேற்று சென்னைக்கு வந்தார். அப்போது அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து பெரியார் தி.க., 17 இயக்கம், மக்கள் இயக்கம் உள்ளிட்டவை கறுப்புக் கொடி காட்டின. எங்கு சென்றாலும் அன்னாவுக்கு பேராதரவு கிடைத்து வரும் நிலையில் சென்னையில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது அவரது ஆதரவாளர்களுக்கு பேரதிர்ச்சியாக இருந்தது.

ஜனநாயகத்துக்கு எதிராக, சர்வாதிகாரி போலச் செயற்படும் அன்னாவும் ஒரு பயங்கரவாதிதான். இந்தி வெறியரான அவர் இட ஒதுக்கீட்டுக்கு எதிரானவர். அவர் இந்தியில் மட்டுமே பேசுகிறார் என்று பெரியார் தி.க.வினர் குற்றம் சாட்டினர்.

இருப்பினும் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அன்னா ஹசாரே விமான நிலையத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டார். அன்னாவுடன் கிரண் பேடியும் உடன் வந்திருந்தார். (வ)

## யுவதி நிலையை அடைந்துள்ள மிகக்குள்ளமான இந்தியப் பெண்




நாகப்பூர், டிசெ.19

உலகில் உயிரோடு உள்ள மிகக் குள்ளமான பெண் என்ற கின்னஸ் சாதனை படைத்துள்ளார் இந்தியரான ஜோதி ஆம்க். இவரின் உயரம் 24.3 அங்குலம் ஆகும். இவர் இந்தியாவின் நாகப்பூர் நகரத்தைச் சேர்ந்தவர்.

கடந்த ஆண்டு தனது 17 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். ஆனால் இந்த வருடம் இந்தச்சிறுமி தனது பிறந்த நாளுடன் யுவதி என்னும் நிலையை அடைந்தார். உலகின் மிகக் குள்ளமான யுவதியாக கடந்த வருடம் இருந்தவர் துருக்கி நாட்டைச் சேர்ந்தவர். அவரின் உயரம் 28.6 அங்குலம். ஜோதி அவரை விட 4.3 அங்குலம் குள்ளமான பெண்ணாக உள்ளார். எனவே, உலகின் மிகக் குள்ளமான யுவதி என்கிற தினத்தை அடைந்த மகிழ்ச்சியில் தற்போது அவர் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கூடங்குளப் போராட்டக்குழுவுக்கு வெளிநாட்டில் இருந்து பணம்

### மத்திய அரசிடம் ஆதாரம்

கூடங்குளத்தில் அணுமின் நிலையத்துக்கு எதிராகப் போராடி வரும் அமைப்புகளுக்கு வெளிநாட்டில் இருந்து பணம் வந்ததற்கான ஆதாரம் கிடைத்துள்ளதாக மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித் துள்ளார். இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் இந்த அமைப்புகளுக்கு நோட்டீஸ் அனுப்பி இருப்பதாகவும் மத்திய அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்துசென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அமைச்சர் தெரிவித்ததாவது:

கூடங்குளத்தில் அணுமின் நிலையம் ஆரம்பிப்பது தொடர்பாக போராட்டம் நடத்தி வரும் போராட்டக் குழுவினருடன் கடந்த மாதம் 15 ஆம் திகதி மத்திய பாதுகாப்பு நிபுணர் குழு பேச்சு நடத்தியது. இதில் சமரசம் ஏற்படவில்லை.

அணுமின் நிலையத்தால் பொதுமக்களுக்கு என்னென்ன பாதிப்பு ஏற்படும் என்று போராட்டக் குழுவினர் கேட்கவில்லை, அதற்கு மாறாக அணுமின் நிலைய வரை படம், ரஷ்யாவுடனான ஒப்பந்த சரத்துகள், அணுமின் நிலைய செலவு கணக்குகள் போன்ற தேவையில்லாத கேள்விகளை கேட்டனர்.

அணுமின் நிலையத்தில் மின்சார உற்பத்திப் பணிகளை ஆரம்பிக்க மத்திய அரசு முழு ஒத்துழைப்பை வழங்கி வருகிறது. ஆனால் போராட்டத்தில் ஈடுபடும் போராட்டக் குழுவினர் மீது தமிழகக் பொலிஸார் வழக்கு மட்டும் பதிவு செய்கின்றனர். மேலதிக நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை. அவர் கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

போராட்டக்காரர்களுக்கு எங்கிருந்து பணம் வருகிறது என்பது பற்றி மத்திய உள்துறை அமைச்சகம் விசாரணை நடத்தியது. இதில் பல்வேறு ஆதாரங்கள் சிக்கி உள்ளன. இது தொடர்பாக விளக்கம் கேட்டு 6 தொண்டு நிறுவனங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.- என்றார் அவர்.

## ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சி நெறி

Saamson English இனது ஆங்கிலப் பயிற்சியானது குழந்தைகள் தம் தாய் மொழியை பழகுவதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இலக்கணம், புத்தகம், CD எதுவுமின்றி மாணவர்களை நேரடியாக உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம், ஆங்கிலத்தில் ஒரு சொல் கூட தெரியாதவருக்கும் ஆங்கிலத்தை பழக்கப்படுத்தும் ஒரு புதுமையான பயிற்சியாகும்.

**எமது இந்தப் பயிற்சியில் இணைந்த ஆயிரக் கணக்கான மாணவர்கள் தற்போது ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்றனர். நீங்களும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் இணைய விரும்புகிறீர்களா?**

*பயிற்சியில் இணைய விரும்பும் மாணவர்கள், இம்முறை O/L எழுதும் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், இளைஞர் யுவதிகள், 25.12.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.*

சனி, ஞாயிறு பிரிவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பிரிவு I | 8 - 10 | பிரிவு III | 01 - 03 | பயிற்சிக்கட்டணம் 3000.00 |
| பிரிவு II | 10 - 12 | பிரிவு IV | 03 - 05 | (ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்) |

அடுத்த ஆண்டிலிருந்து பயிற்சிக் கட்டணம் - 6500.00

**SAAMSON ENGLISH**

*279, மணிக்கூட்டு வீதி, யாழ். (ஆஸ்பத்திரி பின்புறம்)* TEL:0776214567

## பிரான்ஸிலும் புயல்

பிரான்ஸ் நாட்டின் வடமேற்கு கடற்கரைப் பகுதியை கடும் புயல்-மழை தாக்கியது. மணிக்கு 130 கிலோ மீற்றர்வேகத்தில்பலத்த காற்று வீசியது.

இதில் உயிர் சேதம், காயம் பற்றிய தகவல் ஏதும் இல்லை. இந்தச் சம்பவத்தில், ஆயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்து தவிப்பதாகவும், பிரான்ஸின் உள்துறை அமைச்சர் கிளவுட் குயன்ட் தெரிவித்தார்.

(ம)

## மரண அறிவித்தல்

### திருமதி விசுவலிங்கம் நாகேஸ்வரி

நெடுந்தீவு மேற்கு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனகராயன் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசுவலிங்கம் நாகேஸ்வரி 15.12.2011 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான முருகப்பா, வேலுப்பிள்ளை, கந்தையா, சீதேவிப்பிள்ளை மற்றும் கணபதிப்பிள்ளை (நெடுந்தீவு), பத்தினிப்பிள்ளை(நெடுந்தீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தினி (கனகராயன்குளம்), இளந்திரை (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் கனகரத்தினம் (கனகராயன் குளம்), தில்லைவளவன் (லண்டன்) ஆகியோரின் மாமியும், உதயராணியின் அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (19.12.2012) திங்கட்கிழமை, கண்டி வீதி, கனகராயன் குளத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனகராயன்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளளவும்.

தகவல்:
*நெடுந்தீவு மேற்கு,* கணபதிப்பிள்ளை
*4ஆம் வட்டாரம், நெடுந்தீவு.* (11749) (3.6.7) சுந்தரராஜன்(மருமகன்).



# எகிப்தில் மீண்டும் கலவரம்

## ஒன்பது பேர் பலி

எகிப்து நாட்டில் பத்து மாதங் களுக்கு பின்னர் மீண்டும் கலவரம் ஏற்பட்டதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். 300 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

எகிப்து நாட்டில் ஜனாதிபதியாக பதவி வகித்து வந்த ஹோஸினி முபாரக் பதவி விலக வேண்டும் என நாடு முழுவதும் போராட்டம் நடைபெற்றது.

நீண்ட நாள்களாக நடைபெற்ற போராட்டத்தின் காரணமாக ஜனாதிபதி தன்னுடைய பதவியை ராஜினாமாச் செய்தார். தொடர்ந்து இராணுவ ஆட்சியின் கீழ் அதிகாரம் கொண்டுவரப்பட்டது.

ஆறுமாத காலத்துக்குள் நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து நாடாளுமன்ற முதல் கட்ட தேர்தல் நடைபெற்றது.



தேர்தலில் இஸ்லாமியக் கட்சிகளுக்கிடையே போட்டி உருவானது, இதன் காரணமாக கலவரம் மூண்டது. தொடர்ந்து நடைபெற்ற கலவரத்தை அடக்குவதற்காக இராணுவத்தினர் பொது மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

பொதுமக்களும் இராணுவத்தின் வாகனங்களை தீயிட்டு கொளுத்தினர். இரு தரப்பினரிடையே மோதல் நீடித்து வருவதால் கலவரத்தில் பலியானோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கடந்த 10 மாதங்களுக்கு முன்பு தாஹிர் சதுக்கத்தில் தான் புரட்சி ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம)

# சீனாவில் தப்பிச் சென்ற கைதி 13 ஆண்டுகளுக்குப் பின் கைது

சீனாவின் யான் நகரில் வசித்தவர் லீ ஜன்லின். வழிப்பறி, கொள்ளை, கொலை போன்ற குற்றங்களில் ஈடுபட்டமைக்காக கடந்த 1997 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இவருடன் சேர்த்து 12 பேரும் கைது செய்யப்பட்டனர். அப்போது இந்தக் கும்பலை சேர்ந்த 11 பேர் சிறை சுற்றுச் சுவர் அருகில் ஒரே இரவில் வெறும் கைகளால் 13 மீற்றர் தூரத்துக்கு சுரங்கம் தோண்டி தப்பித்தனர்.

3 மாதங்களுக்கு பின்னர் 10 பேர் பிடிபட்டனர். லீ மட்டும் சிக்கவில்லை. இந்த வழக்கில் பின்னர் 4 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் யான் நகரில் உறவினர் வீட்டில் லீ ஜன்லின் தங்கியிருப்பதை, கைபேசி உரையாடலின் மூலம் கண்டுபிடித்த பொலிஸார் விரைந்து சென்று அவரை கைது செய்தனர். (ம)

# பிலிப்பைன்ஸ் புயலில் 436 பேர் பலி



பிலிப்பைன்ஸில் வெள்ளிக்கிழமை இரவு வீசிய கடும் புயலில் 436 பேர் உயிரிழந்துள்ளனர். 250 பேரைகாணவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ககயன் தி ஓரோ என்ற ஊரில் மட்டும் 215 பேர் இறந்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. இலிகன் என்ற ஊரில் 144 பேர் உயிரிழந்துள்ளார்கள் என்று கூறப்படுகிறது.

கன மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. திடீரென்று மழை வலுத்ததில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பல வீடுகள் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உறங்கிக் கொண்டிருக்கும் போதே புலர் உயிரிழந்ததாகத் தெரிகிறது. மலைப் பகுதிகளில் ஏற்பட்ட மண் சரிவில் பல வீடுகள் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆயிரக் கணக்கான இராணுவ வீரர்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (ம)

# கடாபியின் கொலை குறித்து சர்வதேச விசாரணை தேவை

## மகள் சர்வதேச நீதிமன்றுக்குக் கடிதம்

தி ஹேக், டிசெ. 19

தன்னுடைய தந்தையும், சகோதரனும் கொல்லப்பட்டது குறித்து, சர்வதேச நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று, லிபய முன்னாள் அதிபர் கடாபியின் மகள் கோரியுள்ளார்.

லிபிய முன்னாள் அதிபர் கடாபி, கடந்த ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி, போராட்டக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மகன் முட்டாசிம் கடாபியும் கொல்லப்பட்டார். கடாபியின் மனைவி சபியா, மகள் ஆயிஷா உள்ளிட்டோர், அல்ஜீரியாவில் மனிதாபிமான அடிப்படையில், தஞ்சம் அடைந்துள்ளனர்.

தனக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை கொன்று குவித்ததாக, சர்வதேச கிரிமினல் நீதிமன்றம், கடந்த ஜூன் மாதம், கடாபிக்கு அழைப்பாணை விடுத்தது.

இது குறித்து, கடாபியின் மகள் ஆயிஷா, சர்வதேச கிரிமினல் நீதிமன்றத்துக்கு கடிதம் எழுதியுள்ளார். இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''என் தந்தையும், சகோதரனும் உயிரோடு பிடிபட்டுள்ளனர். பிடிபட்ட போது, அவர்கள் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை. எனினும், அவர்களைச் சுட்டுக் கொன்று விட்டனர். இது குறித்து, சர்வதேச நீதிமன்றம் விசாரிக்க வேண்டும்.''- என்றுள்ளது. (ம)


நத்தார் பண்டிகையை முன்னிட்டு... அதிரடி விலைக்கழிவில்

LAPTOP COMPUTERS
DESKTOP COMPUTERS

**HP - 430**
- Intel Core i5 2430 2.4 GHz
- 2GB DDR-III
- 500 GB SATA HDD
- DVD Writer
- 14.1" High Definition LED
- Wi-Fi /Webcam Wi-Fi
- Dos /1Year Warranty

Price :- Rs. 66,200/=

**HP - 630**
- Intel Core i3 2330 2.2 GHz
- 2GB DDR-III
- 320 GB SATA HDD
- DVD Writer
- 15.6" High Definition LED
- Wi-Fi /Webcam
- Dos /1Year Warranty

Price :- Rs. 62,000/=

**HP - Probook4530s**
- Intel Core i3 M380 2.53 GHz
- 4GB DDR-III
- 320GB SATA HDD
- DVD Writer / Finger Print
- 15.6" LE D wide Screen
- Wi-Fi /Webcam /BT
- Home Primum /1Year Warrnty

Price :- Rs. 69,400/=

**Gigabyte - E1425a**
- Intel Core i5 480 2.67 GHz
- 3GB DDRIII / 512MBVGA
- 500 GB SATA HDD
- DVD Writer
- 14.1" High Definition LED
- Wi-Fi /Webcam
- Dos / 2 Years Warrnty

Price :- Rs. 62,500/=

**Acer - Aspire 4749**
- Intel Dual Core B950 2.1 GHz
- 2GB DDR-III
- 500 GB SATA HDD
- DVD Writer
- 14.1" High Definition LED
- Wi-Fi /Webcam
- Dos / 1Year Warrnty

Price :- Rs. 49,700/=

**Acer - Aspire 5750**
- Intel Core i3 2310 2.1 GHz
- 3GB DDR-III
- 320GB SATA HDD
- DVD Writer
- 15.6" LED wide Screen
- Wi-Fi /Webcam /BT
- Home Primum /1Year Warrnty

Price :- Rs. 63,300/=

- Intel Dual Core 3.0 GHz
- M/Board - Biostar G41
- 2GB DDR-III Kingston
- HDD 500GB Samsung
- Casing Tower ATX
- DVD Writer Samsung
- Monitor LED 15.6" Viewsonic
- USB Keyboard Board
- USB Optical Mouse with pad
- M/M HI-FI Stero Speaker

System - I @ 41,750/=

- Intel Core i3 3.0GHz
- M/ Board-Biostar H61
- 2 GB DDR-III Kingston
- HDD 500GB Samsung
- Casing Tower ATX
- DVD Writer Samsung
- Monitor LED 19" Viewsonic
- USB Keyboard Board
- USB Optical Mouse with pad
- M/M HI-FI Stero Speaker

System - II @ 51,750/=

★ 1- 3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்!
★கையிருப்பில் உள்ளவரை மட்டுமே...

Free:- *Headphone w/mic, M/M Speaker, Mouse*

Note: First 25 Customers Only

SDS Computer Services
No. 42/1, College Road, Jaffna.
J/Hindu College மைதானத்துக்கு அருகாமையில்....
T/P:- 021-5100105, 0777-874705, Fax :- 021222-4500

*Our Services*
*Sales, Repair & Maintenance, Software Developments, all type of Security Systems and etc.....*

Kaspersky 2012

@ 1,400/=

Windows 7

Starter@ 6,200/=

Dongle-Multi

@ 4,000/=

உதயன்
19 டிசெம்பர் 2011 திங்கட்கிழமை

# இமாலய இலக்கைத் துரத்திப் பிடித்து வெற்றியீட்டிய உடுவில் பிரதேச செயலக அணி இறுதிக்குத் தகுதி

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால், வலிகாமம் பகுதிக்குட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட 15 ஓவர்கள் கொண்ட மென் பந்துக் கிரிக்கெட் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்றில் உடுவில் பிரதேச செயலக அணி வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளது.

இந்த ஆட்டத்தில் முத லில் ஆடிய யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி 111 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை எட்டிய போதும் , எவரும் எதிர்பார்க்காத நிலையில் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் உடுவில் பிரதேச செயலக அணி இந்த இலக்கை அடைந்து இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

கல்வியங்காடு ஸ்ரீ ஞான பாஸ்கரோதயா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை 17 ம் திகதி பிற்பகல் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப் பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி 15 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி வீரர்கள் எதிர்தரப்பின் பந்துகளை நாலா புறமும் பறக்கச் செய்து ஓட்ட மழை பொழிந்தனர். இதனால் எட்டவே முடியாத இமாலய இலக்கை அவர்கள் நிர்ணயித்தனர். யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி சார்பாக றொசான் 38 ஓட்டங் களையும் ஜெயகணேசன் 15 ஓட்டங் களையும் உதயன் 14 ஓட்டங் களையும் பெற்றனர்.



உடுவில் பிரதேச செயலக அணியைச்சேர்ந்த லம்போத ரன் 3 ஓவர்கள் பந்து வீசி 9 ஓட் டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் அருள்ராஜ், கேசிகன், தனுஜன் ஆகியோர் தலா ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினார்கள்.

எதிரணியினர் எட்டமுடியாத இலக்கை நிர்ணயித்த போதும் உடுவில் பிரதேச செயலக அணி வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடி யாழ்ப்பாண பிரதேச செயலக அணியின் வெற்றிக் கனவைத் தகர்த் தனர். 12.5 ஓவர்களில் கேசிகனின் அதிரடியான அரைச் சதத்தின் உதவியு டன் உடுவில் பிரதேச செயலக அணி 2விக் கெட்டுக்களை மாத்திரமே இழந்து 114 ஓட்டங் களைப் பெற்று வெற்றி யீட்டி இறுதிப் போட் டிக்கு நுழைந்தது.

அந்த அணிசார்பாக கேசிகன் 57 ஓட்டங்களை யும் தனுஜன் ஆட்டமிழக் காது 19 ஓட்டங் களையும், லம்போதரன் 18 ஓட்டங் களை யும் பெற்றனர்.இந்த அணி இழந்த இரு விக்கெட்டுக் களும் 'ரன்-அவுட்' முறையில் வீழ்த்தப் பட்டமை குறிப்பிடத் தக்கது. (ங-86)





வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடமாகாண ரீதியாக நடத்திய பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தெரிவாகிய வீரர்கள் விருந்தினர்களுடன் காணப்படுகின்றனர். (ங-23)

# சதுரங்கப் பயிற்சிப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விவரம்

யாழ்ப்பாணம், டிச.19

எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் சர்வதேச சதுரங்க போட்டியில் பங்குகொள்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட வீர வீராங்கனைகளுக்கிடையே பயிற்சிப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. யாழ்ப்பாண சதுரங்க சம்மேளனம் நடத்திய இந்தப் பயிற்சிப் போட்டியில் வெற்றி யீட்டியோர் விவரங்கள் வருமாறு-

**ஆண்கள்**

எ. ஐஸ்ரீன்-4.5 புள்ளிகள் (முதலாமிடம்) ஆர். மகிந்தன் 3.0 புள்ளிகள் (இரண்டாமிடம்) என்.வர்மன்- 3.0 புள்ளிகள் (மூன்றாமிடம்) எஸ். அனந்த சயன்-1.5 புள்ளிகள் (நான்காமிடம்) பி.மதுசன்- 2.0 புள்ளிகள் (ஐந்தாமிடம்) ஜே.கபிலானந்தன்- 1.0 புள்ளிகள் (ஆறாமிடம்)

**பெண்கள்**

எஸ்.வேதிகா 4.5 புள்ளிகள் (முதலாமிடம்), எம். கௌதமி 3.5 புள்ளிகள் (இரண்டாமிடம்) பி.பிரவீனா 3.5 புள்ளிகள் (மூன்றாமிடம்) ரி. உமையா ளினி 2.5 புள்ளிகள் (நான்கா மிடம்) எல். லாவண்யா 1.0 புள்ளிகள், (ஐந்தாமிடம்), ஜி.தீபனா 0.5 புள்ளிகள் (ஆறாமிடம்). (ங-23)



முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்காக முல்லைத்தீவு அரச திணைக் களங்களுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இரண்டாமிடத்தை துணுக்காய் பிரதேச செயலக அணியினர் பெற்றுக்கொண்டனர். (க-23)

# அரையிறுதி ஆட்டத்துக்கு தீப்தி தகுதி

இந்திய தேசிய மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதிக்கு தமிழக வீராங்கனை செலினா தீப்தி முன்னேறியுள்ளார்.

ஆந்திராவின் ராஜமுந்திரியில், தேசிய மேசைப்பந்தாட்டத் தொடர் நடக்கிறது.

நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியாட்டத்தில் தமிழகத்தின் செலினா தீப்தி, ராஜஸ்தானின் பரீக் பிரியங் காவைச் சந்தித்தார். இதில் தீப்தி 3-1 (12-10, 4-11, 11-6, 11-7) என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் ஆந்திராவின் வருணி ஜெய்ஸ்வால் 3-0 (11-4, 11-7, 11-8) என்ற செற்கணக்கில் கர்நாடகாவின் குஷியை வீழ்த்தினார்.

மற்றைய காலிறுதிப் போட்டிகளில் மேற்கு வங்கத்தின் மவுமிதா தத்தா, நாத் கவுஷானி ஆகியோர் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.19

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 11 பேர்கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நடைபெற்று வருகின்றது. மின் ஒளியில் நடைபெறும் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

யுனிபைட் விளையாட்டுக்கழக அணி எதிர் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி. (ங-23)

***

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆண், பெண் இருபாலருக்குமான மின் ஒளியிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி, எதிர் யாழ்.பல்கலைக் கழக அணி (ங-23)

***

கோட்டை சிறி ஜெயவர்த் தனபுர மகா வித்தியாலயத்துக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி (இன்னிங்ஸ்) இன்று திங்கட்கிழமை ஆரம் பமாக உள்ளது. இருநாள் கொண்ட இந்தக் கிரிக்கெட் போட்டி கோட்டை சிறிஜெயவர்தனபுர மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறும். (ங-23)

# சிநேக பூர்வ 30 ஓவர் கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸை வீழ்த்தியது சென்.பீற்றர்ஸ்

யாழ்ப்பாணம், டிசெ.19

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 30 ஓவர்கள் கொண்ட நட்பு ரீதியிலான கிரிக்கெட் போட்டியில் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி வெற்றி ஈட்டியது.

கொழும்பு சென்பீற்றர்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது.

அபாரமாகத் துடுப்பெடுத் தாடி 26.3 ஓவர்கள் நிறைவில் கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரி அணிஅனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களை பெற்றது.

இதில் அமில 36 ஓட்டங் களையும் பத்திரங்க 43 ஓட்டங் களையும், சந்துல 23 ஓட்டங் களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களான கரிகரன் 6 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக் களை வீழ்த்தினர். இதன்போது அவர்''ஹட்ரிக்'' சாதனையையும் நிகழ்த்தினார். ஆட்டத்தின் 21 ஓவரின்போது கரிகரன் பந்து வீச அழைக்கப்பட்டார். இந்த ஓவரில் 4ஆவது, 5ஆவது மற்றும் இறுதிப்பந்து வீச்சுகளில் அடுத்தடுத்து விக்கெட்டுக் களைச் சாய்த்து அவர் இந்தக் ''ஹட்ரிக்'' சாதனையைப் படைத்தார்.



அந்த அணி சார்பில் நிலோசன் 4 ஓவர்கள் பந்துவீசி 44 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் சஜன் 5 ஓவர்கள் பந்துவீசி 33 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த் தினர்.

195 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென்ற இலக்கு நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 30 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் 58 ஓட்டங்களால் சென் பீற்றர்ஸ் அணி வெற்றியீட்டியது.

இதில் சென். ஜோன்ஸ் அணி சார்பில் பிருந்தாபன் 33 ஓட்டங்களையும், றஜிந்தன் 28 ஓட்டங் களையும், சஜன் 22 ஓட்டங்களையும்தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரி அணி சார்பாக அஜந்த 5 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டு களையும், துஷந் 2 ஓவர் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்டுகளையும் வீழ்த்தினர். (ங-23)

# எதிர்கொள்வது எப்படி?

ஆலோசனை வழங்கும் சப்பல்



இந்தியாவின் சச்சின், சேவாக் ஆகியோரை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து ஆஸ்திரேலிய வீரர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார் கிரேக் சப்பல். இந்தியா, ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடங்குகிறது.

இப்போது ஆஸ்திரேலிய அணி மோசமாக விளையாடி வரும் நிலையில், அந்த அணிக்கு வியூகம் அமைத்துக் கொடுக்கவுள்ளார் அந்த அணியின் முன்னாள் வீரரும், இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளருமான சப்பல்.

இதற்காக அவர் அடுத்த வாரத்தில் ஆஸ்திரேலிய வீரர்களை சந்தித்துப் பேசுகிறார். அப்போது சேவாக், சச்சின் போன்ற வீரர்களை எப்படி கையாள்வது, எப்படி ஓட்டம் குவிக்காமல் தடுப்பது என்பது குறித்து ஆலோசனை வழங்குகிறார் என்று டெய்லி டெலிகிராப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரை ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் சச்சினே ஆதிக்கம் செலுத்தியுள்ளார். ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் ஒருபோதும் சச்சின் மீது ஆதிக்கம் செலுத்தியதில்லை என்றும் கூறியுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 31 டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ள சச்சின் 11 சதம் அடித்துள்ளார். அவரின் சராசரி 60.6. சப்பல் இந்தியாவின் பயிற்சியாளராக இருந்ததால் இந்திய வீரர்களின் பலம், பலவீனத்தை தெரிந்து வைத்திருக்கக்கூடும். (15)

# வில்லனா?

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல். இவர் உலகக் கிண்ணப் போட்டிக்கு பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம் பெறாமல் நீண்டகாலமாக நீக்கப்பட்டுள்ளார்.

அந்த நாட்டு கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக அவரை அணியில் இருந்து நீக்கி வைத்துள்ளது.

இந்த விவகாரம் பற்றி மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் அதிரடி வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் கூறியதாவது:

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிரிக்கெட் சபைக்கும், கெயிலுக்கும் இடையே நிலவும் மோதல் வருந்தத்தக்கது. கெயிலை மன்னிப்பு கேட்குமாறு கிரிக்கெட் சபை கூறியிருப்பது தவறு, கெயிலை வில்லன் போல் சித்தரித்து மன்னிப்பு கேட்க சொல்லக்கூடாது.

அவரது ஆதரவு அணிக்கு தேவை. இந்த விடயத்தில் இரு தரப்பினரும் அனுசரித்து செல்ல வேண்டும். இந்த விடயத்தில் கெய்ல் பக்கம் இருந்து நாம் பார்க்க வேண்டும். ஒட்டுமொத்த பிரச்சினையை பார்க்கும் போது இது தேவையற்றதாக தோன்றுகிறது. இப்போதைக்கு அவரது ஆதரவு அணிக்கு தேவை என்று தெரிவித்தார். (15)

# சாய்னா சாதனை



உலக சுப்பர் தொடர் பட்மின்ரன் தொடரின், பெண்கள் ஒற்றையர் இறுதிக்கு முன்னேறிய, முதல் இந்தியர் என்ற சாதனை படைத்தார் சய்னா நேவல். நேற்று முன்தினம் நடந்த இந்தத் தொடரின் அரையிறுதியில், இவர் டென்மார்க் வீராங்கனையை வீழ்த்தினார்.

உலக சுப்பர் தொடர் பட்மின்ரன் தொடர் சீனாவின் லிசோவ் நகரில் நடக்கிறது. இதில் பட்மின்ரன் தரவரிசையில் முதல் 8 இடங்களை பிடித்துள்ள வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இவர்கள் 'ஏ', 'பி', என்று இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடக்கிறது. இந்தியாவின் சய்னா நேவல், 'பி' பிரிவில் இடம் பெற்றிருந்தார்.

இந்தத் தொடரின் தொடக்கத்தில் இருந்தே அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த சய்னா நேவல், அரையிறுதியில் டென்மார்க்கின் டினே பவுனை சந்தித்தார். இதன் முதல் செட்டை 21-17 என்று சய்னா வென்றார். தொடர்ந்து அசத்திய இவர், 21-18 என்று, இரண்டாவது செட்டையும் கைப்பற்றினார்.

34 நிமிடங்கள் நடந்த போட்டியின் முடிவில் 21-17, 21-18 என்ற செட் கணக்கில், வெற்றி பெற்ற சய்னா நேவல், இந்தத் தொடரில் முதன் முறையாக இறுதிக்கு முன்னேறினார். இறுதியில் இவர், உலகின் முதல்தல வீராங்கனை சீனாவின் யிகான் வாங்கை சந்திக்கிறார். (15)

# ஓட்டத்தை ஆரம்பித்தது பாகிஸ்தான்



**முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில், தௌபீக் உமர் - அஷார் அலியின் இணைப்பின் மூலம் 87 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினை இழந்துள்ளது.**

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரில் முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் மிர்பூரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நேற்றுமுன்தினம் ஆட்ட நேர நிறைவில் 5 இலக்குகளை இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நவீஸ் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 97 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தார். களத்தில் சகிப் 108, முஷ்பகுர் ரகிம் 5 ஓட்டங்களுடன் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமானது.

நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்து இருவரும் சிறப்பாக இணைப்பாட்டத்தை தொடர்ந்தனர். மதியபோசன இடைவேளை வரையில் மேலதிக இலக்கு இழப்பு ஏதுமின்றி 285 ஓட்டங்களை அணி குவித்திருந்தது. அதன் பின்னர் பங்களாதேஷின் துடுப்பாட்டம் ஆட்டம் காண ஆரம்பித்தது. அணி 305 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகிப் அல் ஹசன் துரதிஷ்டவசமாக 144 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' ஆகி வெளியேறினார். அடுத்த பந்திலேயே மறுமுனையில் சிறப்பாக ஆடிய அணித்தலைவர் ரகிம் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பங்களாதேஷ் சடுதியாக இரு துடுப்பாட்ட வீரர்களை இழந்தது.

அதன் பின்பு களம்புகுந்த பின்வரிசை வீரர்களில் சன்னி 12, சதாப் ஹுஸைன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க பங்களாதேஷ் 107.2 பந்து வீச்சுக்களில் சகல இலக்குகளையும் இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் உமர் குல், ஷீமா தலா 3, அஜ்மல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கியது பாகிஸ்தான் அணி. மொஹமட் ஹபீஸ், தௌபீக் உமர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். வேகமாகத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி 23 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது முதலாவது இலக்கை இழந்தது. ஹபீஸ் 14 ஓட்டங்களுடன் சதாப் ஹுஸைனின் பந்து வீச்சில் இலக்கு காப்பாளர் முஷ்பகுர் ரகிமிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம்புகுந்த அஷார் அலி, தௌபீக் உமருடன் இணைந்து துடுப்பெடுத்தாடத் தொடங்கினார். இவர்களது இணைப்பைப் பிரிக்க பங்களாதேஷ் போராடியபோதும் நேற்றைய ஆட்டநேர நிறைவுவரையில் அது கிடைக்கவில்லை.

இறுதியில் நேற்றைய ஆட்டம் முடிவில் பாகிஸ்தான் அணி 27 பந்து பரிமாற்றங்களில் 87 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினை இழந்துள்ளது. களத்தில் தௌபீக் உமர் 44, அஷார் அலி 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். (15)

# தமிழரின் கவலைகளை....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**உதயன் ஆசிரியர் தாக்கப்பட்டமை தவிர்த்திருக்கலாம்**

ஆணைக்குழுவின் இடைக் கால பரிந்துரைகள் உரிய காலத்தில் நிறைவேற்றப்பட்டி ருந்தால் உதயன் செய்தி ஆசிரியர் தாக்கப்பட்டபோது போன்ற சம்பவங்களை தவிர்த்திருக்க முடியும் என்று குழு தெரிவித்துள்ளது.

மோதல்கள் முடிவுக்குவந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகி விட்டபோதிலும், வன்முறைகள், சந்தேகங்கள், பாகுபாடு காட்டப்படுதல் போன்றவை இன்னமும் சமூக வாழ்வில் களையப்படவில்லை.

மோதலுக்கு பின்னரான அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான தெளிவாக வகுக்கப்பட்ட திட்டமொன்று முன்னெடுக்கப்படாமை இந்த நிலைமைக்கு வழிவகுத்துள் ளது என்று குழு தெரிவித்துள்ளது.

மீள் இணக்கப்பாடானது ஒரு காலத்துக்கு மட்டுமே உரியது அன்று, அது தொடர் செயற்பாடாக இருக்கவேண்டும். அதை நோக்கிய முயற்சி தொடர்ந்து இருக்கவேண்டும். அரசினால் ஆதரவளிக்கப்படும் அதேநேரம் விஸ் தாரமான முயற்சியாகவும் இருக்க வேண் டும் என்று குழு கருதுகிறது.

**தமிழ் மக்களின் உண்மையான கவலைகள்**

இன்றைய இன முரண்பாட் டுக்கான மூலகாரணம் தமிழ் மக்களின் உண்மையான கவலை கள் தொடர்பாக பதவியில் அமர்ந்த அரசுகள் எதுவும் கவனம் எடுக்கத் தவறியமை தான் என்று குழு தெரிவித்துள்ளது.

இந்த முரண்பாட்டை தீர்ப்பதற்கு அரசியல் தீர்வொன்று அவசியப்படுகின்றது. எல்லா ரும் இதைப்பற்றி பேசுகிறார்கள், ஆனால் வியாதியைப் பற்றிய ஆய்வறிக்கையையும் காணோம், மருந்துக் குறிப்பையும் காணோம் என்று குறிப்பிட்டுள்ளது ஆணைக்குழு. சிங்களம், தமிழ் இரண்டும் அரச கருமமொழிகளாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்த போதிலும் அதனை செயற்படுத்துவதில் அரசுகள் காட்டிவந்துள்ள அலட்சியம் தமிழ் மக்களை மேலும் அன்னியமாக்கியுள்ளது. அதனால் தமது சொந்த நாட்டி லேயே தாங்கள் இரண்டாம் தர பிரஜைகளாக்கப்பட்டு விட்டதாக உணர்கிறார்கள்.

குழு தனது பிரயாணங்களின் போது இன்றும் கூட பல இடங்களில் சிறுபான்மை மக் கள் தமது சொந்த மொழி யில் கருமங்களை மேற்கொள்ள முடியாமல் செய்யப்பட்டிருப்பதை அவதானித்துள்ளது.

தமிழ் பொலிசுக்கு ஆள்கள் எடுக்கும் செயற்பாடுகளில் தமிழர்கள் சேர்க்கப்படுவதை கவனத்தில் கொண்டுள்ள ஆணைக் குழு இவ்வாறான அவசர விடயங்களில் குழு ஜனாதிபதிக்கு தெரிவித்த பரிந்துரைகள் செயற்படுத்தப்படாமைக்கு கவலை தெரிவித்துள்ளது.

பாடசாலை பாடவிதானத்தில் இரண்டு மொழிகளும் அத்தியாவசியமாக்கப்பட வேண்டும். இரண்டு சமூகங்களுக்கிடையிலும் நடத்தை மாற்றத்துக்கு இது முதல் முக்கிய கருவியாக இருக்கும். தமிழ் பிள்ளைகளுக்கு சிங்களமும் சிங்களப் பிள்ளைகளுக்கு தமிழும்ட கற்பிக்கப் படும்போது ஒருவர் கலாசாரத்தை மற்றவர் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும். மும்மொழிகளையும் மிகச் சிறு வயதிலேயே கற்றுக்கொள்வதானது ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும் என்று குழுதெரிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டளவில் இந்த நாடு மும்மொழி நாடாக பரிணமிப்பதற்கு அரசு எடுத்து வரும் முயற்சிகளை குழு வர வேற்றுள்ளது. இந்த வகையில் அவசியமான நிதிகள் வரவு செலவுத் திட்டம் மூலம் ஒதுக் கப்பட்டு ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆசிரிய ஆளணி நியமனங்களுக்கு பயன்படச் செய்ய வேண்டும். மொழியின் அடிப்படையில் மாவட்டங்கள் அல்லது மாகாணம் வகைப்படுத்தலாகாது. அரச அதிகாரிகள் நாட்டின் எல் லாப் பகுதிகளி லும் பணியாற்றுவதற்கான திறமையைப் பெற்றிருக்க வேண்டும். எல்லா அரச பணிமனைகளிலும் எல்லா நேரங்களிலும் தமிழ் பேசும் அலுவலர்கள் இருக்க வேண்டியது கட்டாயமாக்கப்படல் வேண்டும். பொலிஸ் நிலையங்களில் 24 மணி நேர மும் மொழி பணியாளர் இருக்கவேண்டும் என்று குழு பரிந்துரை செய்துள்ளது.

பல்வேறு இன மற்றும் சமய பின்னணிகளைக் கொண்டு கலவன் பாடசாலைகளை அமைக்க ஊக்கமளிக்க வேண்டும். இந்த வகையில் அரசு மிகக் கவனமாக கொள்கைத் திட்டமொன்றை வகுக்கவேண்டும். இன அல்லது சமய அடிப்படையில் பின் விளைவுகளை பாடசாலைகளில் அனுமதிக்க மறுப்பதானது நல்லிணக்கத்துக்கு உதவ மாட்டாது. அவ்வாறான நடைமுறைக்கு ஊக்கமளிக்கலாகாது என்று குழு தெரிவித்துள்ளது.

**ஊடகத்துறையின் பாதுகாப்பு**

ஊடகத்துறை தொடர்பாக பின்வரும் கருத்தை குழு தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது நடத்தப்படும் சகல விதமான தாக்குதல்களும் இடைஞ்சல்களும் நிறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவ்வாறான குற்றங்களுக்கு கடும் தண்டனை விதிக்கப்படவேண்டும். அந்த வகையிலான சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் முதன்மை கொடுத்து மேற்கொள்ளப்பட்டு விரைவாக முடிவுக்கு கொண்டுவரவேண்டும். அதுவே குற்றவியல் சட்ட செயற்பாடுகளில் மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்த உதவும்.

அவ்வாறு முன்னர் நடந்த சம்பவங்கள் முறையாக விசாரிக்கப்படவேண்டும். அண்மைக்காலங்களில் ஏராளமான பத்திரிகையாளர்களும் நிறுவனங்களும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். இவைகள் பற்றி விசாரணைகள் நடத்தி நடவடிக்கை எடுப்பது அவசியம். அதன்மூலம் பொதுமக்கள் நம்பிக்கையைக் கட்டி எழுப்பலாம்.

வடக்கு, கிழக்கு ஊடகத்துறையினர் சுதந்திரமாக பணியாற்றுவதை அரசு உறுதி செய்யவேண்டும் நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளை பரிமாறிக்கொள்வதற்கு இது உதவியாக இருக்கும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. வேறுபல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் பல பரிந்துரைகளை ஆணைக்குழு வழங்கியுள்ளது. (⁂)


## மரண அறிவித்தல்

### குகனேஸ்வரன் ஜெயராசன் (ராசன்)



ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், இலங்க நாயகி அம்மன் கோயிலடி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட குகனேஸ்வரன் ஜெயராசன் நேற்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் குகனேஸ்வரன் -பவளம் தம்பதியரின் அன்பு மகனும், சர்மிளாவின் அன்பு மனைவியும், சுபாங்கனி, சாரங்கனி, தட்சுகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இலங்க நாயகி அம்மன் கோயிலடி, கல்வியங்காடு.

தகவல்: தி.சிவா (மைத்துனர்).

## கண்ணீர் அஞ்சலி



**நல்லதம்பி பாலசுப்பிரமணியம்**-பொதுமுகாமையாளர்-

பூநகரி கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
பூநகரி ப.நோ.கூ. சங்க முன்னாள் பொதுமுகாமையாளர்.

என்னுடன் இணைந்து இரண்டு சகாப்தத்துக்கும் மேலாக கூட்டுறவுத் துறையில் அளப்பரிய பணியாற்றிய சேவையாளனும், எனது இனிய நண்பருமாகிய அமரரான ந.பாலசுப்பிரமணியம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*தி.இராசநாயகம், பிரதிப் பிரதம செயலாளர்,
பொதுநிர்வாக அமைச்சு, வடமாகாண சபை,
முன்னாள் அரச அதிபர், கிளிநொச்சி.*

## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி பாக்கியநாதன்



யாழ், அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பாக்கியநாதன் கடந்த 17.12.2011 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி(சொக்கலிங்க வாத்தியார்)- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குமாரசாமி- இராசம்மா தம்பதியரின் பெறாமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சயந்தன், பாமதி, சுகந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தினி, ரட்ணகுமார், கல்யாணி ஆகியோரின் அன்பு மாமனும், டிஷானி, தருனன், பிதுஷன், நவநீதன், சஞ்சயன், லருஷா, அபிமன் ஆகியோரின் அன்புப் பேரனும், பத்மாவதி, சரவணபவான், முத்துக்குமாரசாமி, யசோதா, உருத்திராதேவி, பாசுபதன், வாசவன், கெங்காதரன், ஐங்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோகேஸ்வரி, சிவபாலன், புஸ்பவதி, தர்மபாலன், தனபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2011) செவ்வாய்க்கிழமை லண்டன் நேரம் காலை 8.30 மணி அளவில் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கு.பாசுபதன் (சகோதரன்),
14/2, ஆள்காட்டி வளவு வீதி, அரியாலை,
பாமதி (மகள்-லண்டன்)00442086168746.

தகவல்: பிள்ளைகள்.

### சந்திரசேகரன் அமுதா



கொக்குவில் மேற்கு, பூநாறி மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரன் அமுதா நேற்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா- மலர் தம்பதியரின் அன்பு மகளும், சந்திரசேகரனின் அன்பு மனைவியும், கர்ஜினிக்கா, சாருஜா, காலஞ்சென்ற அகிலஜன் மற்றும் இந்துஜன், சானுஜா ஆகியோரின் அன்புத் தாயும், சிவானந்தன், விஜயா (பிரான்ஸ்), கீதா, கவிதா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவிக்குமார், சுதகலா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகியான்ஸ், சாஜசான்ஸ், சஞ்சிதா, சௌமியா ஆகியோரின் அன்பு மாமியும், ரஸ்வின், லதுசான், ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு, பூநாறி லேன்.

தகவல்: சிவானந்தன்- சகோதரன் (கண்ணன்).

## விற்பனைக்கு

தென்னம் நாற்று விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு- 0776094232
பிரதான வீதி, பண்டத்தரிப்பு

## விற்பனையாகின்றன

★ இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவுப் பரீட்சை வழிகாட்டி -250/- (அண்மைக்கால விடயங்கள், கடந்த கால வினாத்தாள்களின் விடைகளும்)

★ இலங்கை நிர்வாக சேவை (SLAS) வழிகாட்டி 600/ தொகுப்பு -தவசேகர், B.Sc, P.G.D.E, P.G.D.P, M.Ed. பூபாலசிங்கம், அன்னை, ஸ்ரீலங்கா, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, கவிதா(வவுனியா புத்தகசாலைகளில்)

## தெரிவுக்குழுவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில், ''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு புதுவருடத்துக்கு முன் பரிகாரம்; நாளை இறுதிப்பேச்சுகள்'' எனத் தெரிவித்திருந்தார்.

இக்கூற்றை அடியோடு நிராகரித்த பேச்சுக்குழுவின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜின் டி வாஸ் குணவர்தன விடுத்துள்ள ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதிய ஆங்கில வார இதழொன்றுக்குத் தாம் அளித்துள்ள பேட்டியில், மேற்கண்டவாறு எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேச்சுகள் நடத்த நிறுவப்பட்ட குழுவின் உறுப்பினர் என்ற நிலைப்பாட்டிலும், அதன் செயலாளர் என்ற நிலைப்பாட்டிலும் இக்கூற்றில் உண்மை கிடையாது என்பதை நான் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டுகிறேன்.

பேச்சு நடத்தும் அரச பிரதிநிதிகள் குழுவில் நிமல் சிறிபால டி சில்வா, ஜீ.எல்.பீரிஸ், சஜின் டி வாஸ் குணவர்தன, ரஜீவ விஜேசிங்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இக்குழுவில் பேச்சுகள் நீடிக்கின்றன.

அதேவேளை, இப்பேச்சுகளில் இத்தகைய காலக்கெடு நிர்ணயம் செய்யப்படவில்லை. அத்துடன், இது குறித்துக் கலந்துரையாடப்படவுமில்லை. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நிறுவுவதற்கான பிரேரணையொன்றை ஏற்கனவே அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

இச்சமயத்தில் இத்தகைய 'மனம் போனபோக்கிலும்', 'உணர்வு பூர்வமற்ற' வகையிலும் அறிக்கை விடுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொறுப்பற்றத் தன்மையையே காட்டுகின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கூடாகவே இறுதி முடிவு எட்டப்படும். இந்த முன்னெடுப்புகளைத் தரக்குறைவாக மதிப்பீடு செய்யும் போக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

நாடாளுமன்றத் தலைமைத்துவத்தை கூட்டமைப்பு மதிக்க வேண்டும். அத்துடன், முன்னெடுப்புகளில் இதய சுத்தியோடு பங்கேற்கவேண்டும்.

அப்படியானால்தான், இலங்கையிலுள்ள அனைத்துச் சமூகங்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதற்கும், நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்வதற்குமான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் குறிக்கோள்களை எட்டமுடியும்.- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

## முல்லைத்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது. பிரதி கிடைத்த தகவல் நள்ளிரவு மீனவர்கள் சென்ற படகு மட்டும் கரை ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ங-433)

## ஐ.தே.க. தலைவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாலேயே இத்தேர்தலை நடத்த முடிவெடுத்ததாக செயற்குழு தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து தலைவர் பதவிக்காகப் போட்டியிடுவதற்கான நியமனப்பத்திரங்களை ரணில் விக்கிரமசிங்கவும், தற்போதைய தலைவர் கரு ஜயசூரியவும் நேற்று செயற்குழுவிடம் தாக்கல் செய்தனர்.

தலைவர் பதவிக்கு இவர்களைத்தவிர, வேறு எவரும் போட்டியிடவில்லை. அதேவேளை, பிரதித் தலைவர் பதவிக்குப் போட்டியிட தற்போதைய பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், ரவி கருணாநாயக்கவும் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தனர்.

தேசிய அமைப்பாளர் பதவிக்குப் போட்டியிட தயாசிறி ஜயசேகரவும், தயா கமகேவும் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தனர்.

பிரதித் தலைவர் போட்டிக்கு சஜித் பிரேமதாஸவையும், தேசிய அமைப்பாளர் போட்டிக்கு தயாசிறி ஜயசேகரவையும் கரு ஜயசூரிய நிறுத்தியுள்ளார்.

அதேபோல், ரவி கருணாநாயக்கவை பிரதித் தலைவர் போட்டிக்கும், தயா கமகேவை தேசிய அமைப்பாளர் போட்டிக்கும் ரணில் விக்கிரமசிங்க நிறுத்தியுள்ளார்.

மேற்படி பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் பெயர்கள் நேற்றைய செயற்குழுவில் பிரேரிக்கப்பட்டதாலும், ஓர் இணக்கப்பாட்டின்கீழ் நிர்வாகியைத் தெரிவுசெய்யமுடியாத நிலை ஏற்பட்டதாலுமே இன்று தேர்தலை நடத்த செயற்குழு தீர்மானித்தது.

செயற்குழு மற்றும் நாடாளுமன்றக் குழு ஆகியவற்றின் 94 உறுப்பினர்கள் மேற்படி நிர்வாகிகளைத் தெரிவுசெய்யும் இன்றைய தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

இந்தக் குழுக்களில் உள்ள அதிக எண்ணிக்கையானவர்களின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கே கிடைக்கும் என்று ரணில் விக்கிரமசிங்க தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, செயற்குழு மற்றும் நாடாளுமன்றக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களுடன் மேற்கொண்ட தொடர் சந்திப்புகளின் பயனாக கரு ஜயசூரியாவுக்கே ஆதரவு அதிகரித்துள்ளது என்று கரு ஜயசூரிய தரப்பு தெரிவித்துள்ளது.

இத்தேர்தலையொட்டி அசம்பாவிதங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக சிறிகொத்தாவை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## மனித உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

இத்திட்டத்திற்காக ஒரு லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியை ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்திலிருந்து (யூ.என்.டி.பி.) பெறுவதற்கு அமைச்சரவையின் அனுமதியை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் விவகாரத்திற்கான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த சமரசிங்க கோரியிருந்தார்.

மனித உரிமைகள் செயற்றிட்டத்தை வரைதல், ஆவணங்கள் தொடர்பான இணைப்புச் செயற்பாடுகள், சந்திப்புகள், ஆலோசனைகளுக்கு உதவியளித்தல், மூன்று மொழிகளிலும் மொழி பெயர்ப்பு, ஒப்புநோக்குதல், அச்சிடுதல், சம்பந்தப்பட்ட இணையத்தளத்தை மேம்படுத்துதல் முதலான நடவடிக்கைகளுக்காகச் செலவுகளும் இவற்றில் அடங்கும் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார்.

## நல்லிணக்கத்துக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவின் அமர்வுகளின் போது இந்த விடயத்தை நீக்க வேண்டும் என பலர் ஆலோசனை வழங்கி இருந்தனர். எனவே எமது ஆணைக்குழு அறிக்கையில் ' சனத் தொகை கணக்கெடுப்புத் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் எந்தவொரு அரச ஆவணத்திலும் இனம் என்ற பதம் நீக்கப்பட வேண்டும்' என்ற சிபாரிசை முன்வைக்க இருந்தோம். இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நாம் எல்லோரும் இலங்கையர் என்ற எண்ணம் சகல குடிமக்களுக்கும் ஏற்படுவதற்கும் இந்த சிபார்சு முக்கியமானதாகும். எனினும் எங்களது அஜாக்கிரதையால் அந்த சிபார்சு அறிக்கையில் தவறவிடப்பட்டுள்ளது. தற்போது ஆணைக்குழு கலைக்கப்பட்டு விட்டாலும் கூட இந்த சிபார்சை நடைமுறைப் படுத்துமாறு நான் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை எழுத உள்ளேன் - என்றார். (ங-சி)

## பொது மக்களிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில்லை என அறிவித்திருந்தார். தற்போது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதனால் அவர் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான தடை நீங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் எனவும் அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் எதிர்க்கட்சிகளுடன் மட்டுமன்றி ஆளும் தரப்புக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக அரசுத் தரப்பு தெரிவித்துள்ளது. (ங-சி)

## ஒட்டுசுட்டான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாவது:-

தென்னிலங்கையில் இருந்து பஸ் ஒன்றில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 30 சுற்றுலாப் பயணிகள் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு நேற்றுக் காலை வந்தனர். இதன்போது ஆலயக் கேணியில் இறங்க முற்பட்ட சுமித் என்பவர் கால் சறுக்கி கேணிக்குள் தவறி வீழ்ந்தார். அவரைக் காப்பாற்ற கூட வந்தவர்கள் முயன்ற போதும் அது முடியவில்லை. நீரில் மூழ்கி அந்தப் பயணி உயிரிழந்தார். அவரது சடலத்தை கடற்படையினர் வந்து மீட்டெடுத்தனர்.

சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி விஜயதுங்க உள்ளிட்ட பொலிஸார் விரைந்து வந்து விசாரணைகளை நடத்தினர். மரண விசாரணை அதிகாரி வை.சிவஞானலிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டார். இந்தச் சம்பவத்தால் நேற்று முழுதும் ஒட்டுசுட்டான் பகுதியில் இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் பிரசன்னம் அதிகரித்துக் காணப்பட்டது.

தற்போது பாடசாலைகளுக்கு விடுமுறை என்பதால் அதிகளவான தென்னிலங்கை மக்கள் வடபகுதிக்கு சுற்றுலா வருகின்றனர். அதிலும் போர் தீவிரமாக நிகழ்ந்த வன்னிப் பகுதியை பார்வையிடுவதில் இந்த மக்கள் அக்கறை காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ங-435)

## அமைச்சர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் வடக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த இலக்கிய வாதிகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

அரச கருமமொழி அமுலாக்கம் குறித்து நாடாளுமன்றிலும் மற்றும் நிகழ்வுகளிலும் அடிக்கடி கூறிவரும் அமைச்சர் வாசுதேவ கலந்து கொண்ட இந்த நிகழ்விலேயே சிங்கள மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தமை அங்கு வந்திருந்த பலரையும் அதிருப்தியுற வைத்தது.

இதேவேளை, ''வடக்கு கிழக்கில் தேசிய கீதத்தை சிங்கள மொழியில் பாட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தமிழ் மொழியில் தாராளமாகப் பாடலாம்'' என்று பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சர் ஜோன் செனவிரத்ன நாடாளுமன்றில் அண்மையில் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

நேற்றைய நிகழ்வில் அமைச்சின் உயர் அதிகாரிகள், யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரி எவ்.மகாலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது பெற்றோரை இழந்த 300 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஒ-ங-14)

**புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை**

**விசேட பொதுச் சபைக் கூட்ட அறிவித்தல்**

**2011ஆம் ஆண்டு**

2011ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24ஆம் திகதி (24.12.2011) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்த ஆலய முன்றலில் தலைவர் சு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

* இறைவணக்கம்
* தலைவர் உரை
* சென்ற கூட்ட அறிக்கை
* வரவு - செலவு அறிக்கையும் கணக்காய்வு அறிக்கையும்
* யாப்பில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள்
* கோபுர வேலை தொடர்பான தீர்மானம்
* நன்றியுரை

*சு.கணேசலிங்கம்*
*கௌரவ தலைவர்*

*க.பரமநாதன்*
*கௌரவ செயலாளர்*

**இரண்டாம் ஆண்டு நினைவில்...**

**திருமதி மு.பரமேஸ்வரி**

வையகத்தில் 07 . 10 . 1939



ஸ்ரீவைகுண்டமதில் 11 . 12 . 2009

**திதி: 19.12.2011**

அகிலமதில் கல்வி கேள்விகளில் சீர்பெற்று நாம் வாழ
அனுதினமும் எமக்காய் உயிர்வாழ்ந்த அன்னையே!
இரக்கம், அன்பு, பண்புடனே நாம் வாழ
இரந்துமைப் போற்றி, ஆசிவேண்டி வணங்குகின்றோம்

*6/6, பெருமாள் கோயில்*
*வடக்கு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

**குடும்பத்தினர்.**

**மரண அறிவித்தல்**



**ஞானப்பிரகாசம் அல்பிறட்**

பண்டத்தரிப்பு, பொந்தி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வலித்தூண்டல், கீரிமலையை வசிப்பிடமாகவும், சுதுமலை வடக்கு, மானிப்பாயை தற்காலிக முகவரியாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் அல்பிறட் நேற்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வியாகுலம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பராணி, காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் ஆனந்தராணி, அமிர்தராணி, டேவிற், ஆனந்தராசா, வசந்தராணி, விமலராணி, கமலராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான யோசப், புஸ்பராசா மற்றும் செபஸ்தியாம்பிள்ளை (சங்கானை தபால் ஊழியர்), செல்வராணி, ஜெரி, தீசன், கீதா ஆகியோரின் அன்பு மாமனும், றூபிகா, றூபன், ராதிகா, சத்தியசீலன், வினோ, ஜெகன், ஜெயசீலன், பாணு, லக்ச்சனா, எஸ்தர், அபிசேக், கிரியோன், எரேமியா, தர்சன், கேசவன் ஆகியோரின் பேரனும், ரக்சனா, மிது, கபி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (19.12.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2 மணியளவில் பூதவுடல் தாவடியிலுள்ள கல்வாரி திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுதுமலை வடக்கு, மானிப்பாய். குடும்பத்தினர்.

# தமிழ் வர்த்தகர் சடலமாக மீட்பு; மட்டக்குளியில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு,டிசெ.19

இந்தியாவிலிருந்து தமிழ்த் திரைப்படங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் கொழும்பு வர்த்தகர் ஒருவரின் சடலம் மட்டக்குளியில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அந்தோனி ராஜா வேலுப்பிள்ளை (வயது - 53) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தகரின் சடலம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் மட்டக்குளி, காக்கைதீவு பகுதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து மீட்கப்பட்டது என பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு அல்லது நேற்று அதிகாலை இவரது மரணம் இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுகி றது எனவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

இந்த வருடம் O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட

O/L Offer



Intel Pentium Core 2 Duo (3 Year)
Intel Chip Mother Board (3 Year)
2 GB DDR3 RAM (3 Year)
80 GB Sata HDD (1 Year)
DVD Writer Lite on (1 Year)
ATX Casing (1 Year)
16" LCD HP (3 Year)
Keyboard (1 Year)
Mouse (1 Year)
UPS DCP (1 Year)

இச்சலுகை 5 நாட்களுக்கு மட்டும்

Just Pay 15,000/=

Marsha Systems (PVT) Ltd
யாழ்ப்பாணம் 74, Kannathiddy Road, Jaffna. T.P No :- 021 222 9418
நெல்லியடி MMV Road, Nelliyady. T.P No :- 021 492 3561
வல்வெட்டித்துறை 10, Modern Market, V.V.T T.P No :- 021 492 3404
கிளிநொச்சி 74, A9 Road, Ananthapuram T.P No :- 021 492 3525

இந்துசமயம்
சனி-ஞாயிறு
A/L 2013-11.00-am 2012-12.00-p.m
★ வினாவிடை 1.00 p.m
★ மேலதிக வகுப்புக்கள் விடுமுறைக் காலத்தில் நடைபெறுகின்றன
ஆசிரியர்: N.Tதரன்
பொருளியற் கல்லூரி.
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

SUPER QUALITY No.01 Colombo
மலிவு விலையில் கிடைக்கும்
120 Page 45/- 30/-
160 Page 60/- 40/-
200 Page 78/- 50/-
கொழும்பு விலை
Ex-Books பிள்ளையார் அச்சகம், நல்லூர்.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
BIT BIT BIT
Semester - 1 , 3 , 5
Final Year Project
ICT - A/L
ICT - O/L
ICT - Gr 10
Practical Web Development
Joomla, PHP, MySQL, jQuery, CSS, HTML
Domain Registration & Web Hosting
கணினிக் கல்வியில் தொடர்ச்சியான 10 வருட அனுபவம்.
Mr R.Kumaran-B.Sc. (Computing & IS) TPNo : 0776577359
MIS Open Source College
Visit : www.ictschool.org
74, சபாபதி வீதி தலையாழி பிரம்படி யாழ்ப்பாணம்.
இராமநாதன் வீதியிலிருந்து 150 m

## மரண அறிவித்தல்

### கந்தையா கருணாகரன்

(உரிமையாளர்-M.R.M. Rice Mill-ஊரெழு)



72/11 செம்மணி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கருணாகரன் நேற்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெனிதன் (பிரான்ஸ்), டிலோயன்(M.R.M. Rice Mill), தாரகா (மருத்துவ பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்), மாதங்கி (யா/வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

72/11, செம்மணி வீதி,
நல்லூர். (11846)

தகவல்:
குடும்பத்தினர்.

# குவைத்திலிருந்து 50 பேர் இலங்கை திரும்பினர்

கொழும்பு,டிசெ.19

குவைத்தில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளான 50 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை நாட்டை வந்தடைந்தனர்.

இவர்களில் 49 பேர் பெண்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் குவைத்தில் பணியாற்றிய இடங்களில் உரிமையாளர்களால் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளான நிலையில் தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்தனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விமான நிலையப் பிரிவு குறிப்பிடுகிறது. (ஒ-சி)

# மஹர சிறையிலிருந்து கைதி தப்பியோட்டம்

கொழும்பு,டிசெ.19

மஹர சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என ராகம பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைச்சாலை விளையாட்டு மைதானத்தில் நின்று கொண்டிருந்த குறித்த கைதி நேற்றுமுன்தினம் மாலை தப்பிச் சென்றுள்ளார்.

கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டு குற்றவாளி என இனங்காணப்பட்ட அவர் 6 வருட சிறைத்தண்டனை பெற்றுள்ளார். தப்பிச் சென்ற கைதியை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஒ-சி)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவுப் பரீட்சை
2012 JANUARY
கடந்த 6 வருடங்களில் கணிசமான மாணவர்களை சித்தியடையச் செய்த சட்டத்தரணி
M.I.உவைசூர் ரகுமான் (LL.B)
உடன் யாழ்.இந்துவின் மைந்தன் கலந்துகொள்ளும் மாபெரும் வழிகாட்டிக் கருத்தரங்கு
இடம்:
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, குமாரசுவாமி மண்டபம், யாழ்ப்பாணம்.
நுழைவுக்கட்டணம் : 600/-
காலம் : 24/12/2011 (சனிக்கிழமை)
காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை.
பதிவுகள்
24/12/2011 காலை 8.00 மணி முதல் நடைபெறும்.
தொடர்புக்கும் மேலதிக விபரங்களுக்கும்
077 607 30 43 / 0777 246 723

திறந்த பல்கலைக் கழக சட்டமாணி, தேர்வுப் பரீட்சை:-
* பொது நுண்ணறிவு
* சட்டம் சார்-விடயஆய்வு
* S.L.A.S உயர்புள்ளி பெறல்(தொடர் விரிவுரை)
ஆரம்பம்:-20-12-2011 9.A.M
நிறு பிறைற் கல்வி நிலையம்
(திருமறைக் கலா மன்றம்-முன்)
பிரதான வீதி,யாழ்ப்பாணம்.

வீடு வாடகைக்கு
உடுவில் டச் வீதியில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் சகலவசதிகளும் (4அறைகள்) கொண்ட நவீன மேல்மாடி மட்டும் வாடகைக்கு உண்டு.
குறிப்பு:- குடும்பத்தினருக்கு அல்லது மாணவிகளுக்கு (மாணவிகளுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்) வழங்கப்படும்.
தொடர்பு:-T.P.0773851342
e.mail:- kalanithy189@hotmail.com

வேலை வாய்ப்பு
○ கணினி ரைப் செற்றிங் செய்வதில் நல்ல திறமை உள்ளவர்.
○ அலுவலகத்தில் பணிபுரியக் கூடியவர்கள் தேவை.(ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)
வேலைஇடம்: யாழ்.நகர்
தொடர்பு:-0775040714

# மாடுகள் நாளை ஏலத்தில்

தென்மராட்சி, டிசெ.19

சாவகச்சேரி பிரதேச சபையினரால் கடந்த வாரம் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகளில் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படும் 50 இற்கு மேற்பட்ட மாடுகள் நாளை செவ்வாய்க்கிழமை பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன என்று பிரதேச சபைத் தவிசாளர் சி.துரைராஜா அறிவித்துள்ளார்.

பிரதேச சபையினால் மன்னாரிலிருந்து வரவழைக்கப்பட்ட விசேட மாடுகள் பிடிக்கும் குழுவினரால் பிடிக்கப்பட்ட மாடுகள் நாளை தனங்கிளப்பு அறுகு வெளிப் பகுதியில் வைத்து ஏலத்தில் விற்கப்படவுள்ளன என்றும் தவிசாளர் கூறினார்.

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை சுந்தரவடிவேலன்

(ஆசிரியர்,தி/ஸ்ரீவாணி வித்தியாலயம் திருகோணமலை)



வரணி இடைக்குறிச்சியை பிறப்பிடமாகவும் பாலையூற்று, திருகோணமலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சி.சுந்தரவடிவேலன் நேற்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் கிருஷ்ணபிள்ளை-கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயமாலினி (ஆசிரியை, புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை)யின் அன்புக் கணவரும், அட்சரன், அம்சவி, ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராகவன் (சர்வோதயம்), திருமகள் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவநேசன்(முகாமையாளர் ப.நே.கூ.ச), குமுதினி(தபாலதிபர்), கோகுலவதனா(ஹெலண்ட்), கோகுலவனஜா(பிரான்ஸ்), தனஞ்சயன்(பிரான்ஸ்), துசியந்தி(மாகாணக் கல்வித் திணைக்களம் திருகோணமலை), கலாநிதி சடகோபன்(அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும் ஞானவரோதயன், சிவபவான், சிவரூபன் ஆகியோரின் சகலனும் வதனா, சுஜித்தா (பொறியியலாளர்), ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2011) திங்கட்கிழமை நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைக்குறிச்சி, வரணி. (C6983)

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னுத்துரை செல்வராஜா

(பெரியதம்பி)



நல்லூர் குறுக்கு வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்வராஜா 15.12.2011 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (ஆயுள்வேத வைத்தியர்) - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் யோகலக்ஷ்மியின் அன்புக் கணவரும் சுஜோத், அஜந்தூரன், பிருந்தாவனி ஆகியோரின் அன்புத் தந்தையும் நித்தியானந்தத்தின் மாமனும் சிவராஜா, கணேசலிங்கம், சிவயோகம், தவநாதன், மனோரஞ்சிதம், பாலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் யசோதராதேவி, வினுதா, நடராஜா, பிறேமசுதா, ரஞ்சித், சர்வேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சடாச்சரலக்ஷ்மி, நடராஜா மற்றும் தனலஷ்மி, தவபாக்கியம், கணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான நல்லையாதேசியர், கந்தசாமி மற்றும் அன்னம்மா, அமிர்தலிங்கம், செல்வராணி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (11831)

லக்ஷ்மி பவனம்,
சிவகுரு லேன், கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.



KOSALA LEARNERS
T.P. 021 4901983
ஏ9 வீதி, சாவகச்சேரி, கண்டி வீதி,
நத்தார், தைத்திருநாளை முன்னிட்டு RG No: 591
நத்தார் தினம் புத்தாண்டு தைத்திருநாள் ஆகியவற்றை முன்னிட்டு 19.12.2011 இல் இருந்து தைத்திருநாள் வரை சாரதி அனுமதிப்பத்திரம் பெறும் அனுமதியை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம். சாவகச்சேரி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி நண்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
T.P.: 0775356979 காலை 8 முதல் மாலை 5 வரை
உரிமையாளர்: எஸ்.ரவிச்சந்திரன்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.